# போராட்டம்

இதழ் - 19 2015 மாசி - சித்திரை | மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 20 ரூபா

**மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டுமாயின்**



பக்கம் - 13

**புஸ்வாணமாகிப் போகும் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணை**



பக்கம் - 04

**கிரேக்க இடதுசாரிய முன்னணி சுரிஷாவின் வெற்றியும், மக்களின் எதிர்பார்ப்பும்**




பக்கம் - 08

**மோடியின் இலங்கை விஜயம் எதைக் குறிக்கின்றது!?**



பக்கம் - 06

## லலித் –குகனை விடுவிக்கக்கோரி யாழில். போராட்டம்

**மகிந்த** ஆட்சிக் காலத்தில் 2011ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் மக்கள் போராட்ட இயக்கம் மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் செயற்பாட்டாளரான தோழர் லலித் குமார் மற்றும் தோழர் குகன் ஆகியோர் வன்னி யுத்தத்தில் சரணடைந்த போராளிகள் குறித்தும் அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என அவர்களின் குடும்பத்தினருக்கு அறியத்தரப்பட வேண்டும் என்பது குறித்தும் அரசைக்கோரும் போராட்டம் ஒன்றினை யாழில் மனித உரிமைகள் தினமான 9ம் திகதி ஒழுங்கமைத்துக் கொண்டிருந்த வேளையில் அரச படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனார்கள்.

இவர்கள் இருவரும் கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பில் யாழ். நீதிமன்றில் கடந்த மூன்று வருடங்களாக வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், கடந்த ஓரிரு வருடங்களுக்கு முன்னர் முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல லலித் மற்றும் குகன் இருவரும் பொலீஸ் விசாரணைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்ததனை தொடர்ந்து நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அமைச்சர் சமூகமளிக்காதிருந்தார்.

கடந்த மாதம் 25ம் திகதி யாழ். நீதிமன்றில் மீண்டும் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முன்னாள் ஊடக அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரை நீதிமன்றில் ஆஜராகுமாறு யாழ். நீதிமன்றினால் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் முன்னிலை சோசலிச கட்சியின் ஏற்பாட்டில் யாழ். நகரில் புதிய அரசாங்கம் காணாமல் போனவர்கள் மற்றும் சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த பேரணியில் "தருவதாக கூறிய ஜனநாயகம் எங்கே?" "லலித் – குகன் ஆகியோரை உடனே விடுதலை செய்" போன்ற பதாகைகள் ஏந்திச் செல்லப்பட்டன.

இந்தப் போராட்டமானது யாழ். நகரில் ஆரம்பித்து பேரணியாக வைத்தியசாலை வீதி ஊடாக சத்திரச்சந்தியை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறை வீதியூடாக மின்சாரநிலைய வீதியை அடைந்து மீண்டும் யாழ். நகரை வந்தடைந்தனர். இதன்போது துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







### மக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட ஜனநாயகம் எங்கே? கட்சியினால் நிகழ்த்தப்படும் ஆர்ப்பாட்டங்கள்

மக்களுக்கு ஜனநாயகத்தை மீட்டுத்தருவோம் என்ற அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மக்களை ஏமாற்றும் பொய்யான வாக்குறுதிகளே என்பதையும் முன்னிலை சோஷலிஸக்கட்சி கூறி நிற்கின்றது. அதன் அடிப்படையிலும் மற்றும் இன்னும் பல அவசரமான ஜனநாயகக் கோரிக்கைகளையும் அடிப்படையாக வைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னிலை சோஷலிஸக் கட்சி ஆரம்பித்து வைத்துள்ளது. கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்த போது கொலை செய்யப்பட்டவர்கள் சம்பந்தமான தகவல்களை வெளியிடவேண்டும் என்றும், நாட்டினை விட்டு அடக்குமுறைகள் காரணமாக வெளியேறியவர்கள் தோழர் குமார் குணரத்தினம் உட்பட நாட்டிற்கு திரும்பிவருவதற்கான அவர்களின் உரிமையினை மீள வழங்குமாறும் அரசினை நிர்ப்பந்திக்கும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்படும்.

நாடு தழுவிய ரீதியில் பதாகைகளில் கையெழுத்திடும் போராட்டம், 10 ம் திகதி மார்ச் மாதம் நடாத்தப்பட்ட இது தொடர்பான விழிப்புணர்வுப் போராட்டம் என்பன கட்சியினால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டது. மற்றைய அமைப்புக்களுடன் இணைந்ததான போராட்ட முன்னெடுப்புகளும் நடாத்தும் ஒழுங்குகள் கட்சியினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## மகிந்த அரசைப் போலவே புதிய அரசின் கொள்கைகள்

மகிந்த அரசைப் போலவே புதிய அரசினால் மேற்கொள்ளப்படும் நவதாராளமய பொருளாதார சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ளது. கல்விக் கட்டணப் பாடசாலை முறைமைக்கு சட்ட அங்கீகாரமளிக்கின்ற புதிய அரசின் சுற்றுநிருபம், மாணவர்கள் சங்கங்களின் எதிர்ப்புக்களை சம்பாதித்ததோடல்லாமல் பல்வேறு பல்கலைக்கழகங்களில் இதற்கு எதிராக நடாத்தப்பட்ட போராட்டங்களுக்கும் காரணமாகும். ஆசிரியர் சங்கங்கள், அதிபர்களுக்கான தொழிற் சங்கங்கள் இந்த சுற்றுநிருபத்துக்கு கடுமையான விமர்சனங்களை ஏற்கனவே முன்வைத்திருந்தது குறிப்பிடத் தக்கது. கடந்த மார்ச் மாதம் 3 ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு அதிகார சட்டமூலம் சுகாதாரத் துறையினை தனியார்மயப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே சுகாதார துறை சார்ந்த தொழிற்சங்கங்கள், மருத்துவ மாணவர்கள் சங்கங்கள், மருத்துவதுறை நிர்வாகிகளின் தொழிற்சங்கங்கள் மற்றும் நோயாளிகளின் உரிமைகளைப் பேணுவதற்கான இயக்கங்கள் போன்றவற்றால் பார்க்கப்படுகிறது.

பெல்வேஹிரவிலுள்ள விதைகளுக்கான பண்ணைக்கு சொந்தமான காணியினை, முன்னைய அரசாங்கம் தனியார் கம்பனி ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதற்கு எதிராக விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மேலும், முன்னைய அரசினால் ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நகர நிர்மாணத்துக்கு எதிராக சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மேலும் பொலிசார் ஒடுக்குமறைகளைக் கையாண்டமையானது ராஜபச்ஸ அரசாங்கத்தின் கொள்கைகளிலிருந்து இன்றைய அரசு மாறுபடாமல் தொடர்ந்தும் அதேவழியிலேயே பயணிக்கிறது என்பதை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது.

அரசின் ஏகாதிபத்திய நவதாராளமய நிகழ்ச்சிநிரலுக்கு எதிரான மக்களின் எதிர்ப்புக்களை ஒழுங்கமைப்பதற்கும், அவற்றை சரியான அரசியல் திசையில் முன்தள்ளுவதற்கும் முன்னிலை சோஷலிஸக் கட்சியானது ஆர்ப்பாட்டங்களையும் பரந்தளவிலான பிரச்சாரங்களையும் திட்டமிட்டுள்ளது.



## இலங்கை மக்களை பலியிடும் ஒப்பந்தத்தில் மைத்திரி ஒப்பம்

இலங்கை மக்களின் வாழ்வை ஆபத்தில் தள்ளும் இலங்கை – இந்திய அணு ஒத்துழைப்பு உடன்படிக்கையில் தற்போதைய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன ஒப்பமிட்டுள்ளார். இது மிக இரகசியமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இவ்வொப்பந்தத்திற்கு இலங்கை இந்திய சூழல் பாதுகாப்பாளர்கள் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். இந்தியாவில் பாவிக்கப்படுவது காலாவதியான தொழில்நுட்பம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அணுவுலையில் சிறிய விபத்தொன்று நடந்தாலும் அதன் கதிரியக்கக் கசிவு 1000 கி.மீட்டர் பிரதேசத்தை கடுமையாக பாதிக்கும். கதிரியக்க விபத்துகளினால் அங்கவீன குழந்தை பிறப்புகள், இறந்த குழந்தை பிறப்புகள், கருக்கலைவு, புற்றுநோய், அசாதாரண நோய்கள் போன்றவற்றுக்கு மக்கள் பெருமளவில் பலியாவார்கள். இந்த ஆபத்து குறித்து இந்திய மற்றும் இலங்கை சூழல்வாதிகள் மற்றும் விஷேடமாக விஞ்ஞானிகள் வலியுறுத்திக் கூறியிருந்த போதிலும், அதிகாரிகள் உதாசீனமான போக்கிலேயே செயற்படுகின்றனர்.

இதற்கிடையில், இரு நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் சர்வதேச தர நிர்ணயங்களுக்கேற்ப செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள ஊடக பேச்சாளர் பென் ஸ்பாகி கூறியிருக்கிறார். அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் சம்பந்தமாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிந்திருந்தாலும், இந்நாட்டு பாராளுமன்றத்திற்கோ மக்களுக்கோ அறிவிக்காதது மைத்திரிபால சிரிசேனவின் நல்லாட்சியின் இலட்சணமா என சூழல்வாதிகள் கேட்கின்றனர்.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

**கௌரவ சபாநாயர்,**
**இலங்கை பாராளுமன்றம்.**
**கௌரவ சபாநாயகர் அவர்களே,**

சிறப்புரிமை மீறல் சம்பந்தமாக பெப்ரவரி 9ம் திகதி இரவு சுமார் 7.00 மணியளவில் பன்னிபிட்டிய, கந்தஹேன வத்தை, 1ம் ஒழுங்கை இலக்கம் 42/31 என்ற இடத்தில் அமைந்துள்ள எனது உத்தியோகபூர்வ அலுவலகத்திற்கு குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளென கூறிக்கொண்ட மூவரும், பொலிஸ் சீருடை அணிந்திருந்த ஐவரும் அத்துமீறி நுழைந்துள்ளனர். அச்சமயத்தில் எனது அலுவலகத்தில் இருந்த எனது ஊடகப்பிரிவை சார்ந்த மற்றும் அலுவலக ஊழியர்கள் மூன்றுபேரும் வந்தவர்கள் யாரென்பதற்கான அடையாள அட்டையை காட்டுமாறு கேட்டுள்ளனர். அப்போது அங்கு வந்தவர்களில் ஒருவர் தாங்கள் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் எனக் கூறியுள்ளார்.

அதன்போது, அவர்கள் யாரென்பதை உறுதி செய்வதற்கான அத்தாட்சியைக் காட்டுமாறு எனது அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் கேட்டுள்ளனர். அதனை அவர்கள் மறுத்துள்ளனர். வந்தவர்களில் ஒருவர் ஏற்கனவே எனது அலுவலகத்திற்கு ஒருமுறை வந்தவரெனவும், அவரது பெயர் பண்டார எனவும் எனது அலுவலகத்தை சேர்ந்த ஒரு தோழர் கூறினார்.

அவர்கள் எதற்காக வந்தனர் என வினவப்பட்டபோது, குமார் குணரத்தினத்தை தேடி வந்ததாக பண்டார என்பவர் கூறியிருக்கிறார். குமார் குணரத்தினம் என்ற ஒருவர் இந்த இடத்தில் இல்லையெனவும், இது பாராளுமன்ற உறுப்பினர் அஜித் குமாரவின் அலுவலகம் எனவும், எதையாவது அறிந்துகொள்ள வேண்டுமெனில் பாராளுமன்ற உறுப்பினரை தொடர்பு கொள்ளுமாறும் கூறி எனது தொலைபேசி இலக்கத்தை அவர்களிடம் அலுவலகத் தோழர்கள் கொடுத்துள்ளனர்.

ஆனால், அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொள்வதை விடுத்து எனது அலுவலகத்தை சோதனையிட வேண்டுமென கேட்டுள்ளனர். அலுவலகத்தை சோதனையிடுவதற்கு அவர்களிடம் நீதிமன்ற அனுமதி அல்லது சட்டபூர்வமான கடிதம் இருக்கிறதா என கேட்டபோதிலும், அவர்கள் அப்படியான எதையுமே காட்டவில்லை.

பின்பு அவர்கள் அலுவலகத்தை சோதனையிட முற்பட்டபோது எனது அலுவலக தோழர்கள் எதிர்த்துள்ளனர். அங்கு வந்திருந்தவர்கள் எனது அலுவலக தோழர்களை கைது செய்வதாக மிரட்டி அவர்களை நாற்காலிகளில் பலவந்தமாக அமர வைத்து, அலுவலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சோதனைக்கு உடபடுத்தியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் எனக்கு தொலைபேசி அழைப்பொன்றை எடுக்க அலுவலக தோழர்கள் முயன்றபோது. தொலைபேசியில் யாருடனும் பேச முடியாதென மிரட்டியுள்ளனர். பின்பு எனது அலுவலக தோழர்களிடமிருந்து பலவந்தமாக வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

வாக்குமூலம் பெற்றுக் கொண்டு வந்தவர்கள் வெளியேறிய பின்பு, நடந்த சம்பவம் குறித்து எனது அலுவலக தோழர்கள் தொலைபேசி மூலம் எனக்கு அறியத் தந்தனர். பின்னர் எனது ஆலோசனையின் பிரகாரம் மஹரகம பொலிஸில் முறைப்பாடு இல: CIB 3/120/154 ன் கீழ் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும், இது குறித்து பெக்ஸ் மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளேன். அந்தக் கடிதத்தையும் இத்துடன் உங்களின் முன் சமர்ப்பிக்கிறேன். தவிரவும், மஹரகம பொலிஸில் முறைப்பாடு இல: CIB 2/94/262 ன் கீழ் இன்று காலை முறைப்பாடு செய்துள்ளேன். முறைப்பாடு செய்வதற்கு நான் பொலிஸ் நிலையம் சென்ற வேளையில், மஹரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் இது சம்பந்தமாக நான் விசாரித்தபோது, இப்படியான சோதனையிடுதல் குறித்தோ, அதற்கு தமது பொலிஸ் நிலையத்தின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவோ பொலிஸ் மாஅதிபரிடமிருந்து தனக்கு எந்த அறிவிப்பும் கிடைக்கவில்லையென அவர் கூறினார். பொதுவாக ஏதாவதொரு சோதனையிடல் அல்லது சுற்றிவளைத்தல் போன்ற நடவடிக்கைகளின்போது குறித்த பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும். ஆனால், அப்படியான நடவடிக்கை இந்த விடயத்தில் கடைபிடிக்கப்படவில்லை. இதனால் பாரதூர சந்தேகம் தோன்றியுள்ளது.

இது சம்பந்தமாக ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்ட பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹன, மேற்படி சம்பவத்திற்கும் எந்தவொரு பொலிஸ் அதிகாரிக்கும் தொடர்பில்லையென குறிப்பிட்டிருந்தார். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனை பொறுப்புடன் கூறியிருக்கும் பட்சத்தில், பொலிஸ் சீருடையில் ஆயுதக் குழுவொன்று செயற்படுவதாக கருத முடியும். இது ஒரு பாரதூரமான விடயமாக இருப்பதுடன், பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கூற்று உண்மையாயிருப்பின், இது குறித்து விசாரித்து அவர்கள் யாரென்பதை வெளிப்படுத்த வேண்டும். இப்படியான நிலை இருக்குமேயானால், அது, எனது அரசியல் நடவடிக்கைகளுக்கும், உயிருக்கும் அச்சுறுத்தலாகவும், எனது அடிப்படை மனித உரிமை மீறலாகவும் இருக்கும்.

பாராளுமன்ற உறுப்பினரான எனது அலுவலகத்திற்குள் சட்டவிரோதமாக அத்துமீறி நுழைவது, இடையூறு விளைவிப்பது, மிரட்டுவது மூலம் நான் மனச்சாட்சியின்படி கொண்டிருக்கும் அரசியல் கருத்தியலுக்காக தோற்றி நிற்பதற்கும், அதற்காக செயற்படுவதற்கும் எதிராக தற்போதைய ஆட்சி ஜனநாயகத்திற்கு முரணாக செயற்படுவதாகத் தெரிகிறது. இந்தச் செயலை அருவருப்புடன் நிராகரிப்பதோடு, அரசியலில் ஈடுபடும் எனது உரிமை மற்றும் பொது மக்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குரிய சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளமையை நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மற்றும் இத்தருணத்தில் ஆட்சி செய்பவர்கள் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்காக தோற்றி நிற்பதாக கூறும் நிலையில், பாராளுமன்ற உறுப்பினராகிய எனக்கு இப்படியானதொரு நிலைமைக்கு முகம் கொடுக்க நேருமேயானால், கடந்த அரசாங்க காலத்தில் போன்றே தற்போதைய ஆட்சியாளர்களின் அதிகாரத்தின் கீழும் நாட்டின் சாதாரண மக்களின் தலைவிதி எப்படியாக இருக்குமென்பது வெளிப்படையாகும்.

எனவே, இச்சம்பவம் தொடர்பில் சட்டவிரோதமாகவும், நியாயமின்றியும் நுழைந்த நபர்கள் யாரென்பதையும், அவர்களுக்கு உத்தரவிட்டவர்கள் யாரென்பதையும் குறித்து விசாரணை நடத்தி அவர்களுக்கு எதிராக சட்டமும் நீதியும் செயற்பட தலையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.
நன்றி.
அஜித் குமார
(பாராளுமன்ற உறுப்பினர்)

# குமார் குணரத்தினம் உட்பட நாடுகடத்தப்பட்ட அனைவரினதும் அரசியலில் ஈடுபடும் உரிமையை பறிக்காதே!




நாம், கடந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பலவகைப்பட்ட ஜனநாயக விரோத செயற்பாடுகள் காரணமாக அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்ட சமூகமாக உள்ளோம். காணாமலாக்கல், கடத்திச் செல்லல், கொலை செய்தல், பொலிஸ் தடுப்புக் காவலில் இருக்கும்போது கொலை செய்தல், வெள்ளை வேன் கோஷ்டியினால் கடத்தப்படுதல், வடக்கில் இராணுவ ஆட்சியை தொடர்தல், வேலைநிறுத்தங்களை அடக்குமுறை செய்வதற்கு உத்தரவிடுதல், நாட்டின் சிவில் பிரச்சினைகளில் இராணுவம் தலையிடுதல், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இராணுவப் பயிற்சி வழங்குதல், பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்து மேற்கொண்ட அடக்குமுறைகள், ஆர்ப்பாட்டங்களின் மீது தாக்குதல் மற்றும் வெடிவைத்தல் போன்ற ஜனநாயகத்திற்கு விரோதமான சம்பவங்கள் மலிந்திருந்தன.

அவைகள் மாத்திரமல்ல, அரசியல் கைதிகள் சம்பந்தமான பிரச்சினை ஜனநாயக விரோதத்தின் உச்சக்கட்டமாக இருந்தது. இது சம்பந்தமாக எழுச்சிபெற்ற சமூகத்தின் எதிர்ப்பு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் பிரதிபலித்தது.

முந்தைய ஜனநாயக விரோத ஆட்சியை தோற்கடித்து அதிகாரத்திற்கு வந்த ஆட்சியிடமிருந்து மக்கள் எதிர்பார்ப்பது மேற்படி செயற்பாடுகளை சமூகத்திலிருந்து துடைத்தெறிவதும், அந்த ஜனநாயக விரோத ஆட்சியினால் அநீதியிழைக்கப்பட்ட, பாரபட்சம் காட்டப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதையுமேயாகும். அதனால் தான், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கின்றது. அதேபோன்று, கடந்த காலங்களில் நடந்த காணமலாக்கல்கள் மற்றும் கடத்தல்களுடன் சம்பந்தப்பட்ட வெள்ளை வேன் கலாச்சாரத்தையும், உத்தியோகப்பற்றற்ற இராணுவ செயற்பாடுகள் சம்பந்தமாக தொடர்புடைய நபர்களையும் வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும். கடத்தப்பட்டவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

2012 ஏப்ரல் மாதம் 07ம் திகதி குமார் குணரத்தினம் மற்றும் திமுது ஆடிகல ஆகியோர் கடத்தப்பட்டமையும், அதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் கடத்தப்பட்டமையும் முந்தைய ராஜபக்ச ஆட்சில் முன்னிலை சோஷலிஸக் கட்சி முகம் கொடுத்த பாரதூரமான அடக்குமுறை அனுபவங்களாகும். லலித் மற்றும் குகன் சம்பந்தமாக இதுவரை எந்தத் தகவலும் கிடைக்காததோடு, குமார் குணரத்தினம் கடத்தப்பட்டு பின்னர் நாடுகடத்தப்பட்டார். ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் நடந்த ஜனநாயகத்திற்கு முரணான பயங்கரவாத செயற்பாடுகளின் முன்னால் அவருக்கிருந்த உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே அவர் வெளிநாட்டில் இருந்து அரசியலில் ஈடுபட நேர்ந்தது. அவர் கடத்தப்பட்டமையினால் இது ஊர்ஜிதமாகியது.

இப்படியான அனுபவங்களுக்கு முகம் கொடுத்த மேலும் பலர் விருப்பமின்றியேனும் நாட்டிலிருந்து வெளியேறினர். அவ்வாறு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட மற்றும் உயிர் பிழைப்பதற்காக நாட்டிலிருந்து தப்பிச் சென்ற ஊடகவியலாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உட்பட அநேகமானோர் நாட்டுக்கு திரும்ப எதிர்பார்த்துள்ளனர்.

அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறிவர்களை மீண்டும் நாட்டுக்கு வருமாறு தற்போதைய அரசாங்கம் அழைப்பு விடுத்த போதிலும், அவர்கள் நாட்டுக்கு திரும்பி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதனை உறுதி செய்வது இன்றைய அரசாங்கத்தின் மீதுள்ள கடமையாகுமென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

குமார் குணரத்தினம் அவர்களும் அந்த அடிப்படையில் நாட்டில் தங்கியிருக்கவும், தனது அரசியல் கருத்துக்களை வெளியிடவும், தான் விரும்பிய ஜனநாயக அரசியலில் ஈடுபடவும் உள்ள உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர் எப்படியான அரசியல் கருத்தை கொண்டிருந்தாலும், எந்த அரசியல் கட்சியை சார்ந்தவராக இருந்தாலும் அரசியலில் ஈடுபடும் அவரது ஜனநாயக சுதந்திரத்திற்கு அது தடையாக இருக்கக் கூடாது.

சட்டரீதியான செயற்பாட்டைப் பயன்படுத்தி அவரை கைது செய்து தடுத்து வைப்பதோ, அல்லது அவரை மீண்டும் நாடு கடத்துவது என்பதோ அவரைப்போன்று நாட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அனைவரினதும் உரிமைகளை பறிப்பதாக அமையும். இந்த நிலைமையைத் தோற்கடிக்க அணிதிரளுமாறு ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து சக்திகளிடமும் வேண்டிக் கொள்கின்றோம்.

***குமார் குணரத்தினம் உட்பட நாடுகடத்தப்பட்ட அனைவரினதும் அரசியலில் ஈடுபடும் உரிமையை பறிக்காதே!***

***சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!***

***காணாமலாக்கல்களையும், கடத்தல்களையும் வெளிப்படுத்து!***



படிப்பகம்

# கொடும்பாவிகளும், செலக்டிவ் அம்னீசியாவும்!!!

**செலக்டிவ்** அம்னீசியா ஒருவகை மறதிநோய். தலையில் ஏற்படும் காயங்களினால் சில குறிப்பான ஞாபகங்கள் மட்டும் தொலைந்து போகும் நோய். தலையில் அடிபட்டவர்களிற்கு மிக அரிதாக உண்டாகும் பக்கவிளைவு இந்த செலக்டிவ் அம்னீசியா. இந்த மிக அரிதான குறிப்பிட்ட சில நினைவுகளை மறக்கும் வியாதி தமிழர்களிடையே பெருமளவில் காணப்படுவது மிக கவலைக்குரியதும் ஆய்வு செய்யப்பட வேண்டியதுமான ஒரு முக்கியமான விடயமாக இன்று நம் முன் உள்ளது.

மக்கள் செத்து மடிந்த போது ஒரு மெழுகுவர்த்தி கூட ஏத்தி வைக்க துணிவில்லாத கூட்டமைப்புகாரர்களும், சோனியாவின் கண்களில் ஈரத்தைக் கண்டுபிடித்த பிரித்தானிய தமிழர் பேரவையின் அறிவாளிகளும் பதவிப்போட்டிகளால் தீ வைத்துக் கொண்டு கூச்சல் போடுகிற அளவிற்கு இவர்களில் சிலருக்கு இந்த வியாதி முத்தி விட்டது.

சுமத்திரன் என்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தமிழர்களிற்கு துரோகம் செய்து விட்டார் என்று அரசியல் விஞ்ஞானிகள் துரோகிப்பட்டம் கொடுத்திருக்கிறார்கள். நான் கணக்கிலே வீக் என்பனால் இது எத்தனையாவது துரோகிப்பட்டம் என்று சொல்ல முடியவில்லை. பட்டம் கொடுக்கிறவர்களாவது கணக்கு வைத்திருப்பார்கள் என்றைக்காவது ஒரு நாளைக்கு எடுத்து விடக் கூடும். சனங்களிடம் சேர்த்த காசுக்கு "தேச பக்தர்கள்" கணக்கு காட்டவில்லை என்பதற்காக துரோகிகள் கணக்கும் வெளிவராமலே போய்விடும் என்று யாரும் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. காசுக் கணக்கு கோடிகளில் இருக்கும் எண்ணி முடிக்கவே எத்தனையோ தலைமுறை வேண்டும். சம்பந்தருக்கும், சுமத்திரனிற்கும் கடைசியாக கொடுத்த துரோகிப்பட்டங்களையும் சேர்த்து துரோகிக் கணக்கு ஆயிரங்களில் தான் இருக்கும். வில்லேஜ் விஞ்ஞானிகள் வெகுவிரைவில் வெளி விடுவார்கள்.



சுமத்திரன், சம்பந்தர் போன்ற வலதுசாரி அரசியல்வாதிகள் ஏதோ இன்றைக்குத் தான் தமிழ்மக்களிற்கு துரோகம் செய்து விட்டார்களாம். தமிழ்க் காங்கிரஸ், தமிழ் அரசுக்கட்சி என்னும் இந்தக் கட்சிகளின் வரலாறு என்றைக்குமே துரோகத்தின் வரலாறு தான். மக்களின் பிரச்சனைகளை தூண்டி விட்டு தாங்கள் பதவி சுகம் அனுபவித்தவர்கள் என்பது தான் இவர்களின் அரசியல் வரலாறு. கொழும்பில் தமிழ், சிங்கள பெருந்தலைகள் குடியும், குடித்தனமுமாக வாழும் கறுவாக்காட்டில் வசித்த தமிழ்தலைமைகள் தேர்தல் காலங்களில் தமிழ்ப்பகுதிகளிற்கு வந்து சிங்களவரோடு சேர்ந்து வாழ முடியாது என்று இனவாதம் பேசி வாக்குகள் பொறுக்குவார்கள். தேர்தல் முடிந்தவுடன் சேனநாயக்காக்கள், பண்டாரநாயக்காக்களுடன் சேர்ந்து கொஞ்சிக் குலாவுவார்கள்.

எழுபத்தேழின் தேர்தலிற்கு முன்பு வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழ் ஈழமே தமிழ் மக்களிற்கான தீர்வு என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். வட மாகாணத்தின் மொத்த தொகுதிகளான பதின்நான்கு தொகுதிகள் உட்பட பதினெட்டு தொகுதிகளில் வெற்றி பெற்று இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியாக தெரிவு செய்யப்பட்டார்கள். அப்பாப்பிள்ளை அமிதலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். தேர்தல் முடிந்த சிலநாட்களில் இனவெறியன் ஜெயவர்த்தனாவின் அரச பயங்கரவாதம் தமிழ்மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. மீண்டும் ஒருமுறை தமிழ்மக்கள் சிங்கள பேரினவாதத்திற்கு பலியாகினார்கள். தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளின் கூட்டான தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தமிழர்களிற்கு நாடு காண தீர்மானம் போட்ட கட்சியினர் தமிழ் மக்களின் மீதான அரசபயங்கவாதக் கொடுமைகளைக் கண்ட பின்பும் ஒரு மாநகரசபைக்கு இருக்கும் அதிகாரங்களைக் கூட கொண்டிராத மாவட்ட சபை என்னும் ஜெயவர்த்தனா போட்ட எலும்புத்துண்டை கவ்விக் கொண்டு வந்து தமிழ்மக்களிற்கு தீர்வு கிடைத்து விட்டதாக ஊளையிட்டார்கள்.

எண்பத்துமூன்று கலவரத்திற்கு பின்பு ஆயுதம் தாங்கிய போராட்ட வடிவம் இளைஞர்கள் தலைமையில் அரசியல் களத்தை முன்னெடுத்துச் செல்ல கூட்டணியினர் ஓரமாக விலகி நின்றார்கள். எண்பத்துமூன்று கலவரத்தைக் கண்டித்து கூட்டணியினரால் நல்லூர் சட்டநாதர் கோவிலடியில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. உண்ணாவிரதம் "தமிழ்த் தேசிய வீரர்களால்" குழப்பப்பட்டது. துரோகிகள் ஒழிக என்று கோசம் எழுப்பப்பட்டது. தங்களிற்கு எதிரானவர்களை துரோகிகள் என்று திட்டித் தீர்த்த தந்தைமார்கள், தங்களையே துரோகிகள் என்று தந்தைக்கு துரோகி மந்திரம் உபதேசித்த வேலுப்பிள்ளைகளைக் கண்டு பம்மிப் பதுங்கினார்கள். தேசிய வீரர்களுடன் வந்த ஒரு "குழந்தைப்போராளி" கூட்டணித் தலைவர்களிற்கு "தாயினும் சாலப் பரிந்து" பலவந்தமாக சோறு ஊட்டி விட உண்ணாவிரதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. கூட்டணித் தலைவர்களின் நல்லநேரம், அது சயனைட் சந்தைக்கு வராத காலமாக இருந்தது.

தமிழீழ விடுதலை இயக்கம் (Tamil Eelam Liberation Organisation) தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோப்பாய் தொகுதியின் ஆலாலசுந்தரத்தையும், மானிப்பாய் தொகுதியின் தருமலிங்கத்தையும் கடத்திச் சென்று கொன்றது. இந்தியா சொல்லிவிட்டால் கண்ணைக்கூட இமைக்காமல் கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லாமல் கட்டுப்பாடாக சேவகம் செய்யும் டெலோயிஸ்ட்டுக்கள் எதற்காக இந்தியாவின் கூட்டாளிகளான கூட்டணியினரை கொன்றார்கள் என்பது இன்றுவரை டெலோவின் கொள்கைகளைப் போலவே மர்மமாகவே இருக்கிறது.

இக்கொலைகளின் பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப்பகுதிகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டது. கொழும்பிலும், தமிழ்க்கட்சிகளின் "தலைமைச் செயலகம்" இருக்கும் டெல்லியிலும் சங்கத்து ஆட்கள் "இன்னும் இந்த ஊர் நம்மளை நம்புதா இல்லையா" என்று தெரியாமல் குழம்பிப் போயிருந்தார்கள். 13.07.1989 அன்று அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் தமிழ்த் தேசிய வீரர்களால் கொல்லப்பட்டனர். மற்றொரு தலைவரான சிவசிதம்பரம் காயங்களுடன் உயிர் தப்பினார். நாங்கள் தான் சுட்டோம் என்றோ, எதற்காகச் சுட்டோம் என்றோ தமிழ்த் தேசிய வீரர்கள் எதுவும் சொல்லாமல் மௌனம் சாதித்தார்கள். ஒருவேளை நல்லூரில் வைத்து சோறு ஊட்டிய கைகளாலேயே கொல்ல வேண்டி வந்துவிட்ட சோகத்தில் பேசாமல் இருந்தார்களோ தெரியவில்லை.

19.10.2001 அன்று வரை துரோகிகளாக இருந்தவர்களை 20.10.2001 அன்று புனிதர்களாக்கி தேசபக்தர்களாக்கி விட்டதாக தமிழ்த் தேசிய வீரர்கள் மர்மநாவலின் திடுக்கிடும் திருப்பத்தை மிஞ்சிய ஒரு அதிர்ச்சியை தமிழ்மக்களிற்கு அள்ளி வழங்கினார்கள். செப்டம்பர் பதினொன்று தாக்குதலின் பின்பு உலகப்பயங்கரவாதி ஜோர்ஜ் புஷ் "நீங்கள் அமெரிக்காவுடன் இருக்க வேண்டும், இல்லையென்றால் அல்கைடா ஆதரவாளர்களாக கருதப்படுவீர்கள்" என்று உளறினார். அதைப் போல, தமிழ்ப்பயங்கரவாதிகள் "நாங்கள் போராட்டம் என்ற பெயரில் செய்யும் கொலைகளையும், மக்களை அணி திரட்டாமல் செய்யும் அரசியல் விளையாட்டுக்களையும் கேள்வி கேட்காமல் எங்களுடன் சேர்ந்தால் போராளி, இல்லயென்றால் துரோகி" என்று தமது வாழ்வை, தமது வாழ்வை விட நேசித்த தமது உறவுகளை விட்டு விட்டு



தமிழ்மக்களிற்காக போராட வந்த ஆயிரக்கணக்கான போராளிகளை கொன்று குவித்தார்கள்.

நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் போராட வந்தவர்களை கொன்று குவித்தவர்கள், நாட்டை விட்டு துரத்தியவர்கள் பழைய பெருச்சாளிகளை, தமிழ்மக்களை வைத்து பிழைப்பு நடத்துவதையே தொழிலாக கொண்டவர்களை, இந்திய ராணுவத்துடன் சேர்ந்து அட்டகாசம் செய்த சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களை மறுபடியும் கூட்டிக் கொண்டு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று, தானைத் தலைவர்கள் என்று தமிழ்மக்களிற்கு படம் காட்டினார்கள். அப்படியென்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் மட்டும் தான் துரோகிகளா? அவர்களை சுட்டுக் கொன்றதும் மிச்சமிருந்த கூட்டணியினர் போராளிகளாகி விட்டார்களா?. மார்கழி 2001 இல் நடந்த பொதுத்தேர்தலில் மற்ற கூட்டமைப்பினர் ஒரு மாதப் போராளிகளாகி விட்ட நம்பிக்கையில் தமிழ்ப்பகுதிகளிற்கு வந்து உயிர்பிழைத்திருந்த போதிலும், வீட்டிற்கு பேச என்று வந்து தேனீர் குடித்துக் கொண்டே சுட்டுத் தள்ளிய மாவீரர்களின் நேர்மையையும், வீரத்தையும் நேரிலே கண்ட சிவசிதம்பரம் இறக்கும் வரை தமிழ்ப்பகுதிகளிற்கு வரவில்லை. கொழும்பில் இருந்து கொண்டு தேசியப்பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். சூட்டுக்காயத்துடன் உயிர் தப்பிய சிவசிதம்பரத்தை எந்தக் கணக்கில் சேர்க்க வேண்டும்?. பாதி மனிதன், பாதி மிருகம் சேர்ந்த கலவை போல பாதி துரோகி, பாதி போராளி சேர்ந்த கலவையா?.

முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கிய மனிதர்களின் மேல் ஏறி மிதித்துக் கொண்டு கொன்றவர்களில் ஒருவனான சரத் பொன்சேகாவை ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரித்தார்கள். கடைசிவரை மகிந்த ராஜபக்சாவுடன் இருந்த மைத்திரிபால் சிரிசேனாவை கடந்த தேர்தலில் ஆதரித்தார்கள். அமைதிப்படை என்ற பெயரில் வந்து நேரில் கொன்ற, மகிந்த ராஜபக்ச அரசுடன் சேர்ந்து தமிழ்மக்களைக் கொன்ற இந்திய வல்லரசு தமிழ்மக்களிற்கு தீர்வு பெற்றுத் தரும் என்று பச்சைப்பொய் சொல்கிறார்கள். இது எதுவும் தமிழ்மக்களிற்கு செய்யும் துரோகங்களாக தேசபக்தர்களிற்கு தெரியவில்லை. திடீரென விழித்தெழுந்து கொடும்பாவி எரிக்கிறார்கள். இந்த பிற்போக்கு தலைமைகள் என்றைக்குமே இப்படித்தான் இருப்பார்கள், மக்களை அணி திரட்டி போராடும் முற்போக்கு அரசியலே உண்மையான தீர்வுகளைப் பெற்றுத்தரும் என்ற அடிப்படை அரசியல் தெரியாதவரை இந்த மனோவியாதிகள் மாறப்போவதில்லை



முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# புஸ்வாணமாகிப் போகும் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணை

2009 இல் புலிகளின் இனவாத ஆயுதப் போராட்டத்தை மேற்குநாடுகளின் துணையுடனேயே அரசு முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு கொண்டு வந்தது. அதன் போது இனவாத இனவழிப்பு யுத்தத்தை மட்டும் நடத்தவில்லை, பலிகொடுக்க பலியெடுத்தனர். அன்று இந்தப் போர்க்குற்றங்களை ஐ.நா, இலங்கை அரசுடன் சேர்ந்து புதைத்தது. ஜனநாயகத்தின் பெயரில் தனது நலனுக்காக மேற்குநாடுகள் நடத்தி முடித்த யுத்த முடிவில், மேற்குநாடுகள் எதிர்பார்த்தற்கு முரணாக, இலங்கை அரசு பயணிக்கத் தொடங்கியது.

இலங்கை அரசுடனான மேற்குநாடுகளின் இந்த முரண்பாடுகளைத் தீர்க்க, ஐ.நா ஊடாகப் போர்க்குற்றம் என்னும் தனது சொந்த நிகழ்ச்சிநிரலை மேற்குநாடுகள் முன்வைத்தது. மேற்கு நலன் சார்ந்த இந்தத் தலையீட்டை தங்களது சொந்த நிகழ்ச்சிநிரலாகவும், தங்கள் போராட்டத்தினால் கிடைத்த ஒன்றாகவும், தமிழினவாதிகள் தமிழ் மக்கள் முன் காட்டத் தொடங்கினர். அதேநேரம் அரசு ஐ.நாவுடன் சேர்ந்து நடத்திய யுத்தத்தின் போது, புதைத்த யுத்தக் குற்றங்களை ஐ.நா மீளக் கிளறி விசாரணை நடத்தித் தண்டிக்கும் என்ற நம்பிக்கையை, தமிழ் மக்களுக்கு ஊட்டி வந்தனர். இதன் மூலம் தமிழ்மக்களிடம் சொந்தப் போராட்டம் தோன்றாதவாறு, ஐ.நாவை முன்னிறுத்திக் காயடித்தனர்.

மறுபக்கத்தில் இந்த ஐ.நா விசாரணையை சிங்கள மக்களுக்கு எதிரானதாக சிங்கள இனவாதிகள் காட்டி வந்தனர். இரண்டு இனங்களைச் சேர்ந்த இனவாதிகளும், ஐ.நாவின் துணையுடன் இனவாத அரசியலுக்குள் மக்களைப் புதைத்து வந்தனர்.

யுத்தம் முடிந்து ஐந்தரை வருடங்களை எட்டியிருக்கின்ற சூழலில், மேற்கின் துணையுடன் புதிய ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றனர். அவர்கள் முந்தைய ஆட்சியாளருக்கு முரணாக மேற்கு நலன் சார்ந்த முன்நகர்வுகள் மூலம், மேற்குடனான முரண்பாடுகளை இல்லாதாக்கி வருகின்றனர். எந்த நோக்கில் ஐ.நா விசாரணை மேற்குக்கு தேவைப்பட்டதோ, அது இன்று அவர்களுக்கு அவசியமற்ற ஒன்றாகிவிட்டது.

மேற்கு ஐ.நா மூலம் முன்னெடுத்த தனது சொந்த நிகழ்ச்சிநிரலை கைவிடுவதென்ற அதன் முடிவுக்கு ஏற்ப, 6 மாதத்துக்கு அதைப் பிற்போட்டுள்ளது. அடுத்த பாராளுமன்ற தேர்தலில் புதிய ஆட்சியாளர்கள் தங்கள் வெற்றியை உறுதி செய்வதற்கும், உருவாகும் புதிய அரசு மேற்கு நலனுடன் இணைந்து பயணிக்கும் நிகழ்ச்சிநிரலை கண்காணிக்கவுமே, போர்க்குற்ற அறிக்கையை 6 மாதத்துக்கு பிற்போட்டு இருக்கின்றது.

இது இன்று வெளிப்படையான உண்மையாக இருக்கின்றது. 6 மாத கால பிற்போடலானது, மேற்குடன் சேர்ந்து அரசு முன்னெடுக்கும் பொது நிகழ்ச்சிநிரலுக்குட்பட்டதே. இது தொடருமாயின் போர்க்குற்ற அறிக்கை அவசியமற்ற ஒன்றாகிவிடும். போர்க்குற்ற அறிக்கை உள்ளடக்கமற்ற ஒன்றாக சிதைக்கப்பட்டு, வெறும் காட்சிப் பொருளாக்கப்பட்டு விடுவதை மேற்கின் நலன் சார்ந்த அதன் வரலாற்றில் இருந்து இனம் கண்டுகொள்ள முடியும்.

### தடுமாறும் தமிழினவாதப் பிதற்றல்கள்

இதுவரை காலமும் தங்கள் சொந்த இனவாத நிகழ்ச்சிநிரலே ஐ.நாவில் அரங்கேறி வந்ததாகவும், அதற்கான தங்கள் போராட்டங்களை கடந்தகாலத்தில் நடத்தியதான பொது விம்பங்கள் ஐ.நாவின் நடத்தை மூலம் அம்பலமாகி இருக்கின்றது. அன்று பிரபாகரனின் பிணத்தை நிர்வாணமாக்கி காட்டியது போல், மேற்கு ஏகாதிபத்தியங்கள் தமிழனவாதிகளை நிர்வாணமாக்கி நடுரோட்டில் விட்டிருக்கின்றது.

ஏகாதிபத்தியங்கள் தங்கள் நிகழ்ச்சிநிரலை மாற்றி இருக்கும் நிலையில், தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளாக இருப்பது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது. மக்களின் சொந்த அரசியல் செயற்பாட்டை மறுத்த தமிழினவாதிகள், மக்களை மந்தையாக மேற்குநாடுகளின் நலனின் பின் காட்டிக்கொடுத்த உண்மையை இனி மறைக்க முடியாது. இதை மூடிமறைக்க முனையும் தமிழினவாதிகளின் சுயவிளக்கங்கள் சுத்துமாத்து கொண்ட வெற்று வேட்டுத்தனமானவை.

தமிழ் கூட்டமைப்பு இதை கவலை அளிக்கும் செய்தியாகவும், இருந்த போதும் மேலும் போர்க்குற்றங்களுக்கு சாட்சியமளிக்க கிடைத்த புதிய வாய்ப்பாக திரித்துக் கூறியிருக்கின்றது. விளம்பரம் மூலம் வர்த்தக மோசடி செய்யும் வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகளான இவர்கள், தங்கள் பித்தலாட்ட அரசியல் மூலம் மக்களை மீளவும் காயடிக்க முனைகின்றனர்.

### இதன் பின்னால்,

1.ஐ.நா தனது அறிக்கையில் புதிய சாட்சியத்தை பெறவுள்ளதாக பொய்யைக் கூறி பிதற்றி வருகின்றனர்.

2.அரசு மேற்கு நலனுடன் இணைந்து பயணிக்கும் போது ஐ.நா அறிக்கைக்கு என்ன நடக்கும் என்ற பகுத்தறிவுபூர்வமான கேள்வியை விடுத்து, அதை பூசி மெழுகிக் காட்டி விடுகின்றனர். மேற்குநாடுகளும் அரசும் இணைந்து முன்னெடுக்கும் அதன் கொள்கைக்கு எதிராக, தன் முந்தைய முரண்பட்ட கொள்கையை மேற்கு ஆறு மாதத்தின் பின் வெளியிடும் என்று கூறுகின்றவர்கள், மக்களை முட்டாளாக்க கருதுவதைத் தாண்டி இதற்கு வேறு அர்த்தம் கிடையாது.

கூட்டமைப்பினுள்ளான பல்வேறு அதிருப்தியாளர்களும், கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள தமிழினவாதிகளும் ஐ.நா ஊடான தங்கள் செயற்பாட்டுக்கு எதிராக, கூட்டடைப்பு தலைவர்களின் சொந்த சதியே ஐ.நாவின் முடிவு என்று காட்ட முற்படுகின்றனர். அரசுக்கும் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் இடையிலான வர்க்க நலன் சார்ந்த மேற்குடனான இணக்க அரசியலே, ஐ.நா வின் முடிவாக இருக்க, அதை இனத்துக்கு எதிரான சதியாக காட்ட முனைகின்றனர்.

மேற்கின் நவதாராள நிகழ்ச்சிநிரல் தான், அரசு மற்றும் கூட்டமைப்பினது அரசியல் நிகழ்ச்சிநிரல் என்பதும், அதன் தொங்கு சதைகளே கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களின் அரசியல் என்பதுமே, வெளிப்படையான உண்மை. அதிருப்தியாளர்களின் முரண்பாடு என்பது, தங்களுக்கு நவதாராள பொருளாதாரம் மூலம் கிடைக்கும் ஆதாயத்தில் முழுமையான பங்கு வேண்டும் என்பதேயாகும்.

புலம்பெயர் புலிக் குழுக்களோ, ஐ.நாவை தாங்களே ஆட்டிப்படைப்பதாக கடந்தகாலத்தில் படமாடிக் காட்டி வந்தனர். மக்களை ஏமாற்ற மக்களின் பணத்தில் மேற்கு தலைவர்களுக்கு வயிறு புடைக்க விருந்து கொடுத்து, அவர்கள் எங்களுடன் நிற்பதாக பாசாங்கு செய்தனர். ஐ.நா தீர்மானம் தம்மாலான இந்த விருந்து அரசியலால் ஆனது என்று கூறி, ஐ.நாவை முன்னிறுத்தி பிழைத்த பிழைப்பு, அரசியல்ரீதியாக இன்று அம்பலமாகி இருக்கின்றது. இந்த மோசடியை மூடிமறைக்க அதிருப்தி வெளிப்படுத்தியபடி, ஐ.நாவை நோக்கி தமிழன் ஒற்றுமையாக படையெடுத்தால் மாற்ற முடியும் என்கின்றனர்.

இவர்கள் தலைமையிலேயே முள்ளிவாய்க்காலில் முடிந்த ஆயுதப்போராட்டம் போல், ஐ.நா மூலம் ஒட்டுமொத்த தமிழ் மக்களை புதைகுழிக்குள் தள்ளி இருக்கின்றனர்.



### முடிவாக

மக்களைச் சாராத அனைத்தும், இறுதியில் மக்களுக்கு எதிரானதாகவே இருக்கும். ஐ.நா போர்க்குற்ற அறிக்கைக்கு விதிவிலக்கு கிடையாது. ஐ.நா தனது அறிக்கையை வெளியிடுவதை ஆறு மாதத்துக்கு பிற்போடுவதாக அறிவித்தவுடன், இது சிங்கள மக்களின் வெற்றியாக இனவாத அரசு காட்ட முற்பட்டு இருக்கின்றது. தமிழினவாதிகள் தமிழ் மக்களின் தோல்வியாக காட்ட முனைகின்றனர். ஆனால் உண்மை இதுவல்ல. மேற்கு ஏகாதிபத்திய நலன்களுக்கு இலங்கையில் கிடைத்துவரும் வெற்றியே இதைப் பின்போட வைத்திருக்கின்றது. இதை மூடிமறைத்து இனங்களின் வெற்றி தோல்வியாக இதைக் காட்டிவிட இனவாதிகள் முனைகின்றனர். ஐ.நாவின் நோக்கமானது, அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எதிரான ஒன்றாகும்.

ஐ.நா விசாரணையானது நவதாராள சூறையாடலை மேற்கு சார்ந்ததாக மாற்றுவதற்காக நடத்தப்பட்டதே ஒழிய, மக்களுக்கானதல்ல. ஐ.நாவின் நோக்கம் புதிய அரசு மூலம் இன்று நடைமுறைக்கு வர, தனது அறிக்கையை மூடிமறைக்கவும் முனைகின்றது. அதேநேரம் போர்க்குற்ற விசாரணை மற்றும் தண்டனையை நோக்கி மக்கள் சொந்த அரசியல் போராட்டங்கள் மூலம் அணிதிரள்வதை தடுத்து நிறுத்திய ஐ.நா விசாரணை, இன்று அதை புஸ்வாணமாக்கி இருக்கின்றது.

மக்களை அணிதிரட்டி போராடுவது மட்டும் தான் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு தீர்வு என்பதையும், மக்கள் மட்டும் தான் தங்களது துயரங்களுக்கு முடிவு காண முடியும் என்பதையும், எதார்த்தம் எமக்கு மீளவும் ஒருமுறை கற்றுக்கொள்ளக் கோருகின்றது.




## உண்மையான ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் கூட்டம்

கடந்த மகிந்த ஆட்சியில் மக்களிற்கு மறுக்கப்பட்ட ஜனநாயகத்தை நிலை நாட்டுவதே தனது முதல் பணி என உறுதி வழங்கியதனால் அனைத்து இன மக்களின் பெரும் ஆதரவுடன் மைத்திரி ஜனாதிபதி ஆக்கப்பட்டார். ஜனநாயகத்தை உறுதி செய்வதற்க்கான 100 நாள் வேலைத்திட்டம் மற்றும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையினை இல்லாது ஒழித்தல் என பல குறிக்கோள்களை முன் வைத்தனர்.


இப்போது ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படமாட்டாது சில அதிகார குறைப்புகள் மட்டும் தான் என கூறுவதுடன் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு என்ன நடந்தது என்பது கேள்விக்குறியாக மாறிப்போயுள்ளது.

–இன்று நாட்டில் பழைய ஆட்சிமுறையே தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.

–தோற்றம் மாறியிருக்கிறது. உள்ளடக்கம் மாறவில்லை.

–நடிகர்கள் மாறியுள்ளனரே ஒழிய நாடகத்தின் கதை மாறவில்லை. வசனங்கள் மாறியுள்ளதே தவிர நாடகத்தின் கரு மாறவில்லை.

இதனை அம்பலப்படுத்த 24ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிலியந்தலையில் இடதுசாரிய முன்னணியில் உள்ள கட்சிகளின் ஆதரவுடன் முன்னிலை சோசலிச கட்சி மக்கள் கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்தது.




# சிந்தனையும் செயற்பாடுகளும் சுதந்திரமானவையா?

மனிதன் சுதந்திரமானவன், அவனின் முடிவுகள் சுதந்திரமானது என்று நம்பும் வாழ்க்கை முறையும், அது சார்ந்த சிந்தனையும் உண்மையானதா? கல்வியும், பொது அறிவும் வாழ்க்கையை பகுத்தறிவுபூர்வமாக பகுத்தாராய்ந்து வாழ உதவுகின்றதா? கருத்தை உருவாக்கும் ஊடகங்கள், மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகின்றதா?

மனிதன் இன்று எதைக் குடிப்பது (உதாரணமாக கொக்கோ கோலா, பெப்சி..), எதை உண்பது (உதாரணமாக மக்டொனால்ஸ், கே.எப்.சி ..), எதைப் பயன்படுத்துவது (பிறான்ட் வகைப் பொருட்கள்), எதை ரசிப்பது … என்று அனைத்தும், முன்கூட்டியே வேறு யாராலோ தீர்மானிக்கப்பட்டுவிட்ட உலகில் நாம் வாழ்கின்றோம். நுகர்வைப் பற்றி, வாழ்வை ஒட்டி அனைத்தையும் சந்தையே தீர்மானிக்க, அதைப் பண்பாடாக கொண்ட உலகத்தை தடமொற்றி மனிதன் பயணிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றான். இங்கு சுதந்திரம் என்பது போலியானதாக்கப்பட்டு விடுகின்றது என்பதே, வெளிப்படையான உண்மை.

சுதந்திரம் என்றால் என்னவென்று பகுத்தறிவுபூர்வமாக கேள்வி எழுப்புவோமாயின், ஒரு மனிதன் சமூக அமைப்புக்குள் வாழ்ந்தபடி தனித்த முடிவை எடுக்க முடியாது. ஒரு சுயாதீனமான வாழ்க்கையை அமைக்க முடியாது. அதாவது இந்த சமூக அமைப்புக்கு வெளியில் விரும்பியவாறு சுதந்திரமான சுயாதீனமான வாழ்க்கையை அமைக்க முடியாது. மாறாக சமூக அமைப்பு முறையே, அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றது.

இந்த சமூக அமைப்பு முறைக்குள்ளேயே தனிமனிதன் சுதந்திரமானவனாக இருக்க முடியும் என்பதே உண்மையாக இருக்கும் அதேநேரம், அதற்குள் மனிதன் சுதந்திரமானவனாக இருப்பதில்லை என்பதே உண்மையாகும்.

இந்தச் சமூக அமைப்பு முறைமையானது அனைவரும் பங்கு கொண்டு இயங்கும் சமூக முறைமையைக் கொண்டதல்ல. சிலர் தங்கள் வர்க்க நலன் சார்ந்து முடிவு எடுக்கும் அமைப்பு முறையாகும். அதாவது இந்த சமூக அமைப்பானது, தனிவுடமையை அடிப்படையாகக் கொண்டது. இதனாலேயே சுயநலத்தை முதன்மையாகக் கொண்ட அமைப்பு முறையாகும். இதன் சாரமென்பது சொத்துடமையைக் குவிக்கும் வர்க்கத்தின் நலன் சார்ந்த அமைப்பு முறையாகும். இந்த அமைப்பு முறைக்குள் சுதந்திரம் என்பது, சொத்துடமையின் சுதந்திரமாக குறுகி விடுகின்றது. அதாவது சிலரின் சொத்தைக் குவிக்கும் சுதந்திரத்துக்கு கீழ்ப்பட்டதாக, மக்களின் சுதந்திரமும் வாழ்க்கையும் குறுகி விடுகின்றது.

இங்கு சுதந்திரமான முடிவுகளையும் வாழ்க்கையையும் கொண்ட மனிதன் வாழ்கின்றான் என்பது கற்பனையானதும், எம்மை நாம் ஏமாற்றிக் கொள்ளுகின்ற பொய்யுமாகும். இந்த தனிச் சொத்துடமை அமைப்பானது, இன்று பன்நாட்டு சொத்துவுடமையை குவிப்பதற்கேற்ற சுதந்திரத்தையே, சுதந்திரமாக்கி இருக்கின்றது. இதை மனித சுதந்திரமானதாக கருதும், அடிமைகளைக் கொண்ட அமைப்பு முறையாக இருக்கின்றது.

உதாரணமாக மனிதனை வாங்கி விற்கும் சமூக அமைப்பில், அடிமைகள் தங்கள் எஜமானின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு ஏற்ப அதை சுதந்திரமாக கருதிய காலமிருந்தது. இது தான் சுதந்திரம் பற்றி அடிமைகளின் கற்பனையும் சிந்தனையுமாக இருந்தது. இன்று உலகைக் கட்டுப்படுத்தும் பன்நாட்டு கம்பனிகளின் சந்தை வரையறைக்கும், அதன் உற்பத்தி முறை உருவாக்கி இருக்கும் படிநிலையான உற்பத்தி உறவுக்கு (இதில் கூலி மற்றும் சலுகைக்கு) ஏற்ப, சுதந்திரம் பற்றி போலியான பொதுக் கற்பனை கட்டமைக்கப்பட்டு இருக்கின்றது. இன்று சாதி படிநிலையில் எப்படி மேலும் – கீழுமான போலியான வாழ்க்கை முறைக்குள், தங்களை பெருமைப்படுத்தி முதன்மையானவனாக காட்டி வாழ்வதே உயர்வான வாழ்வு என்று நம்புவது போன்று, சுதந்திரம் பற்றிய பொதுப் பிரமை கட்டமைக்கப்பட்டு இருக்கின்றது.

இப்படி இந்த அமைப்பில் சுதந்திரமான வாழ்வு பற்றிய கற்பனை, உண்மையானதல்ல. ஏற்றத் தாழ்வான வாழ்வின் ஒப்பீட்டில் கிடைக்கும் மேன்மையை அடிப்படையாகக் கொண்ட போலியான வாழ்க்கையையே, சுதந்திரமாக கற்பித்துக் கொள்கின்றனர். பணம், அந்தஸ்து, அதிகாரம் .. போன்ற சமூகக் குறைபாடுகளை, சமூகத்தின் மேன்மையானதாக காட்டி மிதக்கின்ற கற்பனைக் கோட்டையையே சுதந்திரமாகக் கற்பித்துக் கொள்கின்றனர். இந்த கோட்டையை பாதுகாக்கும் அற்பத்தனமான சுய முயற்சி, சுதந்திரம் பற்றிய மிதப்பையும் பிரமையையும் உருவாக்குகின்றது.

இதற்கு மாறாக அனைவருக்குமான ஏற்றத்தாழ்வற்ற வாழ்வை உருவாக்கும் சமூக அமைப்பிலேயே, அனைவருக்குமான சுதந்திரம் என்பது எதார்த்தமாக இருக்க முடியும். இதன் போதே தனிமனிதன் சுதந்திரமானவனாக இருக்க முடியும். அப்படி இல்லாத சுதந்திரமானது, சிலருக்குச் சேவை செய்கின்ற அடிமைக்கேயுரிய சுதந்திரமாகும்.

## குறுகி வரும் சுதந்திரத்தின் சமூக சாரம்

பொருளை முதன்மையாக்கி, நுகர்வை வாழ்வாக்கி, சுயநலத்தை பண்பாடாக்கியுள்ள உலகில் மனிதன் வாழ்கின்றான். இதுதான் இன்றைய உலகின் பொதுச் சாரம். பொதுநலனுக்கு பதில் சுயநலமே மனித உணர்வு நிலையாகிவிட்டது. அன்பு, பாசம், காதல், இரக்கம் … தொடங்கி திருமணம், குழந்தை வளர்ப்பு வரை எங்கும் பொதுநலன் இருப்பதில்லை. எதைச் செய்தாலும், என்ன கிடைக்கும் என்ற இலாப – நட்டத்துக்கு உட்பட்ட உறவுகளாக மனித உறவுகள் சுருங்கி வருகின்றது. இலாபம் இல்லாமல் எதுவும் வாழ்க்கையிலும் மனித சிந்தனையிலும் இருத்தல் என்பது, மனப்பிறழ்வாக கருதுமளவுக்கு உலக மனம் சுருங்கி விட்டது. பொதுநலனை காயடித்ததன் மூலம் சுயநலனாக வாழ்க்கை குறுகியதையே, உலகம் சுருங்கியதன் மூலம் இன்று நடந்தேறி இருக்கின்றது.

தொடர்பு சாதனங்களால் உலகம் சுருங்கியதால், மனிதமும் மனிதத்தன்மையும் அகன்று அகலமாகவில்லை. மாறாக சுயநலமாகக் குறுகிவிட்டது. சந்தை மட்டுமல்ல, தனிமனிதனும் கூட சுயநலன் கொண்டவனாக குறுகிவிட்டான். வாழ்க்கையும் சமூகப் பார்வையும் குறுகிவிடுகின்ற போது, அனைத்து மனிதப் பண்பாடுகளையும், அது சார்ந்த வாழ்க்கை முறையையும் அழித்து விடுகின்றது. சந்தையில் ஆதிக்கம் பெற்ற சுயநலம் மட்டுமே மனித வாழ்வியலாகவும், பண்பாடாகவும் மாறிவிடுகின்றது.

தனிவுடமை அமைப்பானது சொத்தைக் குவிக்கும் சந்தை – நுகர்வை சார்ந்து உருவாக்கும் பண்பாட்டையே உற்பத்தி செய்கின்றது. இதைக் கடந்து, மனிதனைச் சுயமாக சிந்திக்கவும், செயற்படவும் விடுவதில்லை. மாறாக தனிவுடமையைக் குவிக்கும் சுயநலப் பண்பாட்டை அடியொற்றி, சுயநலத்துடன் வாழுமாறு கற்றுக் கொடுக்கின்றது.

இதன் விளைவாக தனிமனிதனின் சுதந்திரம் என்பது காரியவாதமாகி விடுகின்றது. காரியத்தை சாதிக்க இலஞ்சம் கொடுப்பதும், பகட்டுத்தனமாக நடிப்பதும், சலுகையை வழங்கி காரியத்தை சாதிப்பதும், ஊழலை தூண்டி காரியத்தை முடிப்பதும், போலியாக புகழ்ந்து காரியமாற்றுவதும், போலித்தனமாக வாழ்ந்து மற்றவர்களை ஏமாற்றுவதும் … வாழ்வு பற்றிய பொது நடத்தையாகி விடுகின்றது. மனித உறவுகளைக் கட்டமைக்க பரிசு கொடுப்பது, பொருள் ஆசையைத் தூண்டி உறவைப் பேணுவது, தன்னை உயர்வானவனாகக் காட்டி உறவை நாடவைப்பது…. மனித உறவுகளாக, மனித உறவுகள் என்பது நடிப்பாகி போலியாகி விடுகின்றது. உறவுகள் பொருளுடன் தொடர்புபட்டதாக, அதன் மீதான விருப்பு வெறுப்புக்கு உட்பட்டதாகி விடுகின்றது. இதேபோல் தான் சமூக அக்கறையும் கூட, சக மனிதன் மீது இரக்கப்பட்டு கொள்வது தொடங்கி உதவுவது வரையான அனைத்தும், பிரதி எதிர்பார்ப்பு கொண்ட ஒன்றாகக் குறுகி விடுகின்றது.

காதலை வெளிபடுத்துவது தொடங்கி குழந்தைக்கு அன்பை வெளிப்படுத்துவது வரை, பரிசுப் பொருளைக் கொடுப்பதன் மூலம் சாத்தியம் என்றளவுக்கு வாழ்க்கை குறுகிவிட்டது குழந்தைக்கு கல்வியைத் தூண்டுவதற்கு, பொருளை இலஞ்சமாக கொடுப்பதே, பொது வாழ்க்கை நெறியாகி விடுகின்றது.

பொருளைக் கொடுக்காத இடத்து அன்பு, காதல், பாசம் … போன்ற மனித உறவுகளை உருவாக்குவதில்லை. இலஞ்சமும், ஆசை காட்டாத மனித நடத்தைகளும், உருப்படாத வாழ்க்கை முறையாகி விடுகின்றது. மனிதசாரம் தன்னல நடத்தையாகவும், அதுவே சுதந்திரமானதெனவும் கொண்டாடப்படுகின்றது.

இந்த மனித நடத்தை, அவன் நம்பும் கடவுளுக்கு கூட விதிவிலக்கல்ல. எதிர்பார்ப்பு இன்றி கடவுளை வழிபடுவதில்லை. உண்டியலில் போடும் போதும், ஒரு பொருளை கடவுளுக்கு படைக்கும் போது, எதிர்பார்ப்புடன் கொடுத்து வாங்கும் முறையே வழிபாடாகி இருக்கின்றது. கடவுளின் பெயரைச் சொல்லி பிழைப்பதும், கடவுளின் பெயரால் அதிகாரத்தைக் கோருவதும், எம்முடன் இணைந்த சுயநல வாழ்க்கையாகி இருக்கின்றது.

அல்லாவின் பெயரைச் சொல்லி வியாபாரம் செய்யும் அதே அடிப்படையில் அல்லாவின் பெயரில் பயங்கரவாதத்தையும் செய்ய முடிகின்றது. யூதனின் பெயரில் தனிச் சாதியாக தன்னை குறுக்கி நிலைநிறுத்திக் கொண்டு, பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்து மக்களை கொத்துக் கொத்தாக கொல்ல முடிகின்றது. இந்துவின் பெயரில் பார்ப்பானிய – வெள்ளாள சாதியம் மூலம் பிற சாதி மக்களை அடக்கியபடி, பிற சிறுபான்மை இன–மத மக்களை ஒடுக்க முடிகின்றது. கிறிஸ்தவத்தின் பெயரால் உலகெங்கும் (நவ) காலனியத்தை நிறுவவும், குழந்தைகளை பாலியல் ரீதியாக குதறவும் முடிகின்றது. பௌத்தத்தின் பெயரால் பிற இன – மத மக்களை வேட்டையாட முடிகின்றது. இப்படி மதங்கள் எல்லாமே வேறுபாடற்ற வகையில், மக்களை ஒடுக்கி அடக்கும் சுயநலக் கருவியாக மாறி இருக்கின்றது. மதம் போதிக்கும் பொதுநலன், சந்தையை அடிப்படையாகக் கொண்ட பன்நாட்டு சமூக கட்டமைப்பில் காணாமல் போய்விட்டது.

மனிதனின் ஓய்வை அது விட்டுவிடவில்லை. தொலைக்காட்சி, இன்ரநெற், தொலைபேசி… என்பன இன்று மனிதனை ஆக்கிரமித்து இருக்கின்றது. மனிதனுடன் இணைந்து பயணித்த எல்லையைக் கடந்து, மனிதனை ஒட்டுண்ணியாக்கி இருக்கின்றது. பொருளை உற்பத்தி செய்த மனிதன், பொருளுக்கு அடிமையானது போல், ஓய்வுக்காக நாடிய ஊடகத்தின் ஒட்டுண்ணியாகி விட்டான். ஊடகங்களோ மனித ஓய்வை பிடுங்கிக் கொண்டு, பகுத்தறிவை அறவே உறிஞ்சி விடுகின்றது.

சொத்தால் சுதந்திரமானவன் தன் சொத்தைப் பெருக்கும் தனிவுடமைக்கான விளம்பரத்தையும், அதற்கு அமைவான வாழ்க்கை பற்றிய வாழ்வியல் கோட்பாடுகளையும், தொலைக்காட்சி, இன்ரநெற், தொலைபேசி… ஊடாக கொடுத்து விடுகின்றான். இதைத்தான் மனிதன் பெற்று, அதை எதிரொலிக்கின்றவனாக மாறிவிடுகின்றான்.

இப்படி விளம்பர – நுகர்வு ஊடகங்கள் மூலம் பெறும் கருத்துகளும், முடிவுகளும் சுயநலம் சார்ந்தவை. சுதந்திரம் என்பதும், எமது முடிவே என்பதும் கூட சுயநலமாகி விடுகின்றது. மனிதனின் பகுத்தறிவுக்கு பதில் விளம்பர அறிவு மூலம் வெம்பி அழுகுமாறு சுதந்திரமானவன் பார்த்துக் கொள்கின்றான். இதையே மனித அறிவாக பீற்றிக் கொண்டு, மீள தனது முகத்தில் துப்புமளவுக்கு உலகத்தை குறுகி இருக்கின்றது. குறுகிய சுயநலனை உலகமாக, மனித சிந்தனையையே குறுக்கி இருக்கின்றது.

மனிதனின் பொதுநலத் தன்மையை சுயநலதன்மை கொண்டதாக மாற்றி விடுவது, மனிதனை மனிதன் சுரண்டி உருவாக்கும் தனிவுடமை சிந்தனை முறையாகும். இந்த சமூக அமைப்பில் மனித கருத்துக்கள் சுதந்திரமானதா எனின் இல்லை. இதை ஒட்டிய வாழ்க்கை சுதந்திரமானதா எனின் இல்லை. எம்மைச் சுற்றிய கருத்துகளும் வாழ்க்கை முறைகளும், சமூகம் கூடி விவாதித்து பெற்ற முடிவுகள் அல்ல,

அனைவரும் இணைந்த முடிவு எடுக்கும் அமைப்பில் மட்டுமே, தனி மனிதனுக்கு சுதந்திரம் என்பது உண்மையானதாக இருக்கும். இந்த நிலையை வந்தடைவதையே எம்மைச் சுற்றிய மனித அவலங்கள் முடிவின்றி முகத்தில் அறைந்து கோருகின்றது.



முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

# “ஜனநாயக இடைவெளியும்” தமிழ் மக்களும்

ஒருகாலத்தில் தமிழ் தேசிய விடுதலையை முன்னெடுப்பதற்காகப் பல போராட்டங்கள் நடைபெற்றன. ஆயுதங்கள் அதிகாரம் செலுத்தத் தொடங்கிய பின் அனைத்து போராட்டங்களும்– ஆயுதப் போராட்டத்தின் ஒரு பகுதியாகின அல்லது மௌனிக்க வைக்கப்பட்டன. உதாரணமாக, யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் போராட்டங்கள் ஆள் கடத்தல்கள், கொலைகள், காணாமற் போகச் செய்தல் மூலம் நிறுத்தப்பட்டன. அதேபோன்று கிழக்கில் அரசின் முப்படைகளின் கொடுமைகளுக்கு எதிராக நடந்த மக்கள் போராட்டங்களும் கூட ஆயுததாரிகளால் தமிழ் தேசியத்தின் பெயரால் ஒழிக்கப்பட்டன.

2009 இல், இனவாத அரசும் அதன் படைகளும் பாரிய அழிவை ஏற்படுத்திய போது, அழிவு நடந்த பிரதேசங்களுக்கு வெளியில் (யாழ்ப்பாணத்தில், கொழும்பில், மட்டக்களப்பில், திருகோணமலையில்…) இருந்த எவரும் போராட முன்வரவில்லை. இனவாத மஹிந்த அரசு அதற்கு இடமளிக்காதது மட்டுமல்ல காரணம். மேலே கூறியது போன்று, ஏற்கனவே தமிழ் ஆயுததாரிகளால் உரிமைக்காக போராடிய மக்கள், மாணவர்கள் "மௌனிக்க" வைக்கப்பட்டதும் தான். "நாங்கள் எங்களைச் சுற்றியிருந்த எல்லோரையும் அழித்தோம். அவர்கள் எங்களை அழித்த போது, எங்களுக்காக குரல் கொடுக்க எவரும் இருக்கவில்லை". இது தான் 2009இல் நடந்தது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிக்கு (மைத்திரி– தமிழ் தேசியக் கூட்டமைப்பு– யு.என்.பி) மக்களை வாக்களிக்கச் சொன்ன காரணத்தில் ஒன்று "ஜனநாயக இடைவெளியை" ஏற்படுத்துவதாகும். அத்துடன், அவ் இடைவெளியை ஏற்படுத்துவதன் மூலம், தமிழ் தேசிய விடுதலைக்கான அடுத்த கட்ட போராட்டத்தை முன்னெடுக்க வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது. தற்போது தேர்தல் நடைபெற்று இலங்கையில் அரச அதிகாரத்துக்கான தலைமை மாற்றப்பட்டுள்ளது. "தமிழர்கள்" விரும்பியது போல மஹிந்த பிசாசு போய் மைத்திரி தேவதை வந்து விட்டார். "ஜனநாயக இடைவெளியும்" வந்து விட்டது (என்று வைத்துக் கொள்வோம்). தற்போது அந்த "இடைவெளி" எதற்காக பாவிக்கப்படுகிறது?

மக்கள் போராட்டம் என்ற போர்வையில் வடக்கில் நடக்கும் போராட்டங்கள் யாரின் நலன் சார்ந்து நடாத்தப்படுகின்றன? உண்மையிலேயே தமிழ் தேசிய விடுதலையை முன்னிறுத்தியா போராட்டங்கள் நடக்கின்றன? தமிழ் தேசிய விடுதலையைக் கோரி (தலைமையின் குறை – நிறைகளுக்கு அப்பால்) போராடி இன்று கைதிகளாக உள்ளவர்களை விடுவிக்க நடத்தப்படும் போராட்டங்கள் உண்மையிலேயே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த குரலாகவா ஒலிக்கின்றன? அல்லது தமிழ் மக்கள் மீது யார் அதிகாரம் செலுத்துவது என்ற உள்வீட்டு போட்டிக்காக அதிகாரத்துடன் கூட்டுச் சேர்த்துள்ளவர்களை "அம்பலப்படுத்த" அல்லது வரப்போகும் தேர்தலில் தம்மையும் ரீ.என்.ஏ (தமிழ் தேசியக்கூட்டமைப்பு) சேர்த்துக் கொள்வதற்கான அழுத்தத்தை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படுகின்றனவா?

அதேபோன்று, சுன்னாகம் தண்ணீர் மாசடையும் பிரச்சனையை எடுத்தால் எவராலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில் எந்தப் பாரிய போராட்டமும் நடத்தப்படவில்லை. நடைபெற்ற சிறு சிறு போராட்டங்களில் "பெரும்பான்மையானவை" குறிப்பிட்ட ஒரு கட்சியினால், அதன் மறைமுக அல்லது நேரடிக் கண்காணிப்பில், இன்று வடமாகாணத்தை ஆளுகின்ற ரீ.என்.ஏ இக்கு "பாடம் கற்பிக்க" அல்லது ரீ.என்.ஏ யை (தமிழ் தேசியக் கூட்டமைப்பைச்) "சங்கடப்படுத்த" நடாத்தப்பட்டவையே. எல்லோருக்கும் நினைவிருக்கும் அப்போராட்டத்தில் பங்குகொண்ட வடமாகாண அரச ஊழியர்களுக்கு (தமிழ் தேசியக் கூட்டமைப்பின்) ரீ.என்.ஏ சுகாதார மந்திரி அனுப்பிய எச்சரிக்கை கடிதம்.

ஏன், கடந்த மாகாணசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட "தமிழ் மக்களின் வரலாற்றில் பதியப்படவேண்டிய" இனவழிப்புத் தீர்மானம் கூட உள்வீட்டு அதிகாரப்போட்டியால் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்யவும் புலம்பெயர் தமிழர்களை கட்டுக்குள் வைத்திருக்கவும் அல்லது திருப்திப்படுத்தவுமே நிறைவேற்றப்பட்டதாக கருத்துக்கள் நிலவுகின்றன. அதேவேளை, அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து மைத்திரி அரசு ஐக்கிய நாடுகள் சபையின் போர்க்குற்ற அறிக்கையை, தற்காலிகமாகவேனும் நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையில் அந்த அறிக்கை வெளியிடுவது நிறுத்தப்பட்டால், மைத்திரி அரசுக்கு ஆதரவு வழங்கிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அச்செயலுக்குப் பொறுப்பெடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. அப்பொறுப்புக் கூறும் நிலையிலிருந்து தப்பிப்பதற்காகவே தமிழ் தேசியக்கூட்டமைப்பு (ரீ.என்.ஏ), மேற்படி இன அழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியது என்றும் கருதப்படுகிறது. இனவழிப்புத் தீர்மானம் நிறைவேற்றியதற்கு அடுத்த நாள் "அத் தீர்மானம் உங்கள் அரசுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டதல்ல. அது மஹிந்த அரசுக்கு எதிராகவே நிறைவேற்றினோம்" என்று மைத்திரியைச் சந்தித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் சமாதானம் கூறியதாக, தெற்கின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இச் செய்திகளும், அவற்றின் பின்னால் ஊடகங்களால் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளும் மேற்படி ரீ.என்.ஏ யின் இரட்டை வேடத்தை தோலுரித்துள்ளன.

60 களின் ஆதிக்க சக்திகளான பொன்னம்பலம், சுந்தரலிங்கம் ஈறாக அமிர்தலிங்கம் வரையான "தமிழர் தலைமைகள்" இரட்டை நாக்குடன் தமிழ் மக்களிடம், "சிங்களவனின் தோலை உரித்து செருப்பாக போடப்போவதாகக்" கூறியபடி, இனவாத சிங்கள ஆதிக்க சக்திகளுக்கு கொழும்பில் எவ்வாறு செருப்பாக உழைத்தார்கள் என்பது அனைவரும் அறிந்த தெரிந்த வரலாறு. அவ் வரலாற்று நிகழ்வுகள், தமிழ் மக்களை முன்னிறுத்தி அவர்களின் ஜனநாயக தேசிய உரிமைகளை முன்னிறுத்தி மறுபடியும் நிகழ்வதான தோற்றப்பாடுகள் தெரிகிறன. மக்களை உணர்ச்சி வசப்படுத்தி, சிந்தனையற்ற செம்மறிகளாக ஏமாற்றும் அரசியற் போக்கே இன்று ஏற்பட்டுள்ள "ஜனநாயக இடைவெளிக்குள்" காணப்படுகிறது.

இவ்வகையில் "ஜனநாயக இடைவெளி" பற்றிய மாயையை ஏற்படுத்தி, சுயநல அரசியல் செய்யும் ஆதிக்க சக்திகளை அரசியல் நீக்கம் செய்யும் நடைமுறை வேலைகளை முன்னெடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அனைத்து ஜனநாயக சக்திகளின் கைகளில் உள்ளது.

# மோடியின் இலங்கை விஜயம் எதைக் குறிக்கின்றது!?

ஆட்சிமாற்றமும் மோடியின் வருகையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. நடந்த முகமாற்ற ஆட்சி மாற்றமும், நடந்து கொண்டு இருக்கும் (ஏகாதிபத்திய) முகாம் மாற்றத்தையுமே மோடியின் வருகை பறைசாற்றுகின்றது.

இன்று இது ஏன் நடக்கின்றது? மக்களின் அன்றாட வாழ்வுக்கும் இதற்கும் என்ன தொடர்பு? மோடி ஏன் இலங்கை வருகின்றார்? இதற்கும் மக்களின் நலன்களுக்கும் என்ன தொடர்பு? இதைப் பற்றி பேசாத அரசியலும் – ஊடகவியலும், எந்த உண்மைகளையும் கொண்டிருக்க முடியுமா?



"நல்லகாலம் பிறக்கப் போகுது நல்லகாலம் பிறக்கப் போகுது" என்று குடுகுடுப்பைக்காரன் கூறுவது போல், மோடி இலங்கை விஜயம் பற்றி அரசியல்வாதிகளும் ஊடகங்களும் ஏட்டிக்குப் போட்டியாக மக்களுக்கு குழைத்துக் கொடுத்தனர். எதற்காக?

இந்தியா முதல் அமெரிக்கா வரையான அந்த நாட்டுத் தலைவர்கள் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வைக் கொண்டு வரும் சமாதானப் பறவையாக காட்டுகின்ற அரசியலானது, மக்களை தொடர்ந்து தோற்கடிக்கின்ற கைக்கூலி அரசியலாகும். புலிகளை அழித்தது தொடங்கி கடந்த இலங்கை வரலாறு வரை இது தான் உண்மையாகும். இதுதான் உலக வரலாறுமாகும்.

மோடியின் வருகையானது மக்கள் நலன் சார்ந்ததல்ல. தென்னாசிய நலன்களும், பெரும் மூலதனத்தின் நலன்களுமேயாகும். இதுவே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுயாகும். இதை மீறிய மோடியின் கொள்கைகள் என்று எதுவும் கிடையாது. கடந்தகாலம் முழுக்க, இந்தியாவின் கொள்கையானது இதனடிப்படையிலேயே இருந்து வந்தது.

1980 களில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கைக்கு அமைவாகவே, தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தில் இந்தியா தலையிட்டது. தேசங்களின் சுயநிர்ணயத்துக்குப் பதில், தனிநாட்டுக் கோரிக்கையையும் பிரிவினையையும் முன்வைத்தது. ஆயுதப் பயிற்சியையும், பணத்தையும் கொடுத்தது. இதன் மூலம் அன்னிய நாடுகளின் தேவையை பூர்த்தி செய்யும் கைக்கூலிகளைக் கொண்ட போராட்டமாக, சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தை மாற்றி அமைத்தது. உண்மையான மக்கள் போராட்டத்தை தோற்கடித்த பின்னணியில், இந்திய நலன்களே இருந்தது.

1987 இல் இலங்கையை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்தது இந்தியா. இந்தப் பின்னணியில் உருவாக்கிய இந்திய – இலங்கை ஒப்பந்தமும், தேசியப் பிரச்சனைக்கு தீர்வாக வழங்கிய "மாகாணசபை" யும், இந்திய நலன்களுக்காக இலங்கையின் முழு மக்கள் மேலும் வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டவையே.

இந்திய நலனுக்கும் – புலிகளின் மேற்கத்தைய நலனுக்கும் இடையிலான முரண்பாடு, 1987 யுத்தமாக மாறியது. யுத்தத்தை புலிக்கு எதிரான யுத்தமாக அல்லாது, அனைத்து தமிழ்மக்கள் மேலான யுத்தமாக இந்தியா மாற்றியது. இதன் மூலம் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை நீடித்து இலங்கையில் தங்க வைக்கும் வண்ணம், புலிகளை அழிக்காது பாதுகாக்கும் யுத்த தந்திரத்தையே இந்தியா கையாண்டது. இந்திய – புலிகள் யுத்தமும், அதன் வெற்றி தோல்விகளும் இந்திய வெளியுறவுக் கொள்கைக்கும் அதன் தேவைக்கும் அமைவாக நடதேறியது.

1990 களில் இலங்கை மீதான இந்தியாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஜே.வி.பியின் போராட்டங்களும், ஆட்சிக்கு வந்த புதிய பிரேமேதாச அரசு இந்தியாவை வெளியேறக் கோரியதன் மூலமும், இலங்கையில் இந்தியப் படைகளை தொடர்ச்சியாக நிறுத்தும் இந்தியாவின் நோக்கம் தோற்றுப் போனது.

இதைத் தொடர்ந்து 2009 இல் புலிகளைத் முற்றாக தோற்கடித்து அழிக்கும் யுத்தத்தை, இந்தியாவே திட்டமிட்டு வழிநடாத்தியது. புலிகளை அழிக்க இந்தியா விரும்பாவிட்டால், யுத்தம் முடிவுக்கு வந்திருக்காது. இது தான் எதார்த்தம். புலி அழிப்பு யுத்தத்தை நடத்திய இலங்கை அரசு, இந்தியாவின் பொம்மையாகவே செயற்பட்டது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது, புலியை அழிக்கக் கோரியது. உலகளாவிய பூகோளமயமாக்கமும், அதன் அங்கமானதுமான இந்தியா தன்னைச் சுற்றிய பிராந்தியமயமாக்கத்தை முன்னெடுக்க முடியாத வண்ணம், புலிகளின் மாபியாத் தன்மை தடையாக மாறி வந்தது. இதை மாற்றி அமைக்க இந்தியாவின் அனுசரணையுடன் மேற்கு முன்னெடுத்த சமாதான முயற்சிகள் தோற்றுப்போக, புலிகளின் அழிப்பு இந்தியாவின் நலனுடன் பின்னிப்பிணைந்த ஒன்றாக மாறியது. புலிகள் இந்தியாவால் அழிக்கப்பட்டனர்.

இந்தியாவின் பிராந்திய நலன்கள் சார்ந்து புலிகளை அழித்த இந்தியாவின் நோக்கத்தை, இலங்கை புரிந்து கொள்ளத் தவறியது, தனது வெற்றியாக, தனது நலனுக்கானதாகவும் குறுக்கிக் கொண்ட வெளியுறவுக் கொள்கையை இலங்கை வெளிப்படுத்தியது. இதுதான் மகிந்த ஆட்சிக்கு எதிரான, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை உருவாக்கியது. இந்திய நலனுக்கு முரணான சக்திகளுடன் இலங்கை பயணித்த போக்கை முடிவுக்கு கொண்டு வரும் வண்ணம், 2015 இல் ஆட்சிமாற்றத்தை இந்தியா கொண்டு வந்தது. இந்திய அரசு கொண்டு வந்த ஆட்சிமாற்றம் தான், இன்றைய மைத்திரி – ரணில் அரசாகும். இந்திய நலனை பேணும் இந்த அரசு, மேற்கின் பூகோளநலனுடன் கூடிக் குலாவுவதை அனுமதிக்கின்றது. மோடி தன் வருகை மூலம் நடந்த முகமாற்றத்தை அங்கீகரித்து, நடக்கும் முகாம் மாற்றத்தை கண்காணிக்கவும், அதன் எதிர்காலத்தை உறுதி செய்வதையும் உறுதி செய்துள்ளார்.

1980 களில் எந்த நோக்கத்துடன் இந்தியா தனிநாட்டு பிரிவினையை முன்தள்ளி ஆயுதப் பயிற்சி அளித்ததோ, அந்த நோக்கத்தை நிறைவு செய்யும் ஒரு வரலாற்று கட்டத்தில் இந்தியா நுழைந்து இருக்கின்றது. இந்தியா–அமெரிக்காவுக்கு முரணான பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்கள், இன்று பகிரங்கமாக இலங்கை அரசுடன் முரண்படுகின்ற அளவுக்கு ஏகாதிபத்திய முகாம் மாற்றம் தெளிவாக நடந்து வருகின்றது.

இந்தியா–மேற்கு நடத்திய முகமாற்ற ஆட்சிமாற்றம் நபர்களையும், ஏகாதிபத்திய முகாங்களையும் மாற்றி விடுகின்ற மாற்றத்தை மோடி தன் வருகை மூலம் நேரடியாக பார்வையிட்டு சென்றுள்ளார்.

**தொடர்ச்சி 15 பக்கத்தில்**

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# சிங்கப்பூர் பிரஜை அர்ஜீன் மகேந்திரனுக்கு 24 மணித்தியாலங்களுக்குள் குடியுரிமை, இலங்கையில் பிறந்த குமார் குணரத்தினத்திற்கு இலங்கை குடியுரிமை இல்லை!

**சிங்கப்பூர் பிரஜையான அர்ஜீன் மகேந்திரனுக்கு 24 மணித்தியாலங்களுக்குள் இலங்கை பிரஜாவுரிமை வழங்கவும், இலங்கையில் பிறந்த தன்னை நாடுகடத்தவும் நல்லாட்சிக்கான அரசாங்கம் எடுக்கும் முயற்சி கவலையளிப்பதாக முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் குமார் குணரத்தினம் கூறுகிறார்.**

குமார் குணரத்தினம் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முன்னிலை சோஷலிசக் கட்சியின் ஆரம்பம் தொட்டே அதனை பின்தொடர்ந்து வந்த அரச அடக்குமுறையின் அகோர முகம் பல்வேறு வேடங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. கட்சியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும் தருணத்தில் எமது யாழ் மாவட்ட அமைப்பாளர் தோழர் லலித் குமார் வீரராஜு மற்றும் கட்சியின் செயல்வீரரான தோழர் குகன் முருகானந்தம் ஆகிய இருவரும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டதை இந்த நாடே அறியும். ஆரம்பத்திலிருந்தே கட்சியின் மீதும், என் மீதும் பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி, எமது கட்சி சம்பந்தமாக தவறான விம்பத்தை சமூகத்தில் நிர்மாணிக்க முயற்சி செய்து அடக்குமுறைக்குத் தேவையான சுற்றுச்சூழலை உருவாக்க முயன்ற வரலாறை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களென நம்புகிறோம்.

முன்னிலை சோஷலிசக் கட்சிக்கு மட்டுமல்ல, ராஜபக்ஷ ஆட்சியின் சமூக, பொருளாதார, அரசியல் நாசகார வேலைத்திட்டத்தை எதிர்த்த அனைவரும் இந்த அடக்குமுறைக்கு பலியாயினர். இந்த சூழலில்தான், எமது நாட்டின் பெரும்பான்மை மக்களுக்குள் ஜனநாயகம் குறித்து கோரிக்கையும், ஆர்ப்பாட்டமும் மேலோங்கியது. கடந்த ஜனாதிபதித் தேரதலில் அதே பாணியிலான இன்னொரு ஆட்சிக்கு பாதையை அமைத்துக் கொள்வதற்கு, இந்த மக்கள் மத்தியில் நிலவிய ஜனநாயகம் சம்பந்தமான கோரிக்கையும் எதிர்பார்ப்பும் தெரிந்தோ, தெரியாமலோ இதற்காக பயன்படுத்தப்பட்டது.

முகத்தை மாற்றுவதால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென நினைப்பது உழுந்தை விதைத்துவிட்டு எள்ளை அறுவடை செய்ய எதிர்பார்த்திருப்பது போன்றதாகுமென தேர்தல் காலங்களில் நாங்கள் கூறியது அதனால்தான். தற்போதைய பொருளாதார கட்டமைப்பில் ஆழமான மாற்றத்தை கொண்டுவராமல் முகத்தை மாற்றுவதால் மாத்திரம் மக்களுக்கு வெற்றியை பெற்றுக் கொடுக்க முடியாதென்பது மீண்டுமொரு முறை உறுதி செய்யப்பட்டுள்ளது. எமது அரசியலும் அவ்வாறான பரந்த சமூக மாற்றத்திற்கான அரசியல்தான். அது நாட்டின் பல்வேறு துறைகளில் வேலை செய்யும் நூற்றுக்கு தொண்ணூறு சதவீத மக்களுக்கு மகிழ்ச்சியை, சுதந்திரம் நிறைந்த வாழ்வை பெற்றுக் கொள்வதற்காக எதிர் நீச்சலடிப்பதை போன்றதாகும். அது, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி முதற்கொண்டு, 1948 போலிச் சுதந்திரத்தின் பின்பு மாறி மாறி அதிகாரத்திற்கு வந்த அரசியல் கூட்டணிகளின் ஏமாற்று அரசியலுக்கு எதிராக மக்கள் பலத்தை கட்டியெழுப்பும் இக்கட்டான பயணமாகும். அது, இதுவரை நாட்டில் செயற்பட்டு வந்த அரசியலைவிட முற்றிலும் வேறுபட்ட புரட்சிப்பாதையாகும். கடந்த ராஜபக்ஷ ஆட்சியிலும் இன்றைய ரணில்–மைத்திரி ஆட்சியிலும் அந்த அரசியலுக்கு வேலி போடப்பட்டுள்ளது.

2015 ஜனவரி 08ம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ரணில் – மைத்திரி ஆட்சி மக்களுக்களித்த வாக்குறுதியின்படி ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் உறுதி செய்வதற்காக (இது குறித்து எமக்கு வேறு விமர்சனங்கள் உண்டு) எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. அவர்கள் கூறியதன் பிரகாரம் திருடர்கள், ஊழல் பேர்வழிகள், பொருளாதாரக் குற்றவாளிகள், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் அவற்றின் மாபெரும் மூளைசாலிகளான அரசியல்வாதிகளுக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களின் கூற்றுப்படி, ஜனநாயகத்திற்கு தடையாகவுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பது சம்பந்தமான விவாதங்கள் பலமிழந்து, திருத்தங்கள் கொண்டுவருவது வரை பின்தள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நவதாராளமய பொருளாதார அரசியல் வேலைத்திட்டம் எவ்வித மாற்றமுமின்றி செயற்படும்போது, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது ஒருபோதும் சாத்தியப்படாது என்பது எமது நிலைப்பாடாக இருப்பினும், அதிகாரத்திற்கு வந்த புதிய அரசாங்கத்தின் வாக்குறுதிகள் அப்படியே நிறைவேற்றப்படுவதை காண்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. மக்கள் முன்பாக வைத்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக மீறப்பட்டுவரும் நிலையில் அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதை புறந்தள்ளிவிட்டு, குமார் குணரத்தினத்தை நாடு கடத்துவதற்கு துரித நடவடிக்கையில இறங்கியிருப்பது தெரிகிறது.

முந்தைய ராஜபக்ஷ ஆட்சியின் அடக்குமுறைக்கு மத்தியில் மேலும் பலரைப் போன்று எனக்கும் அரசியலில் ஈடுபட்டமையால் எதிர்கொண்ட அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடு செல்ல நேரிட்டது. என்னை நாட்டை விட்டு விரட்டியடிக்கும் நிலை உருவாகியிருந்தமையால்தான் வெளிநாடு செல்ல நேரிட்டதேயன்றி எனது விருப்பத்தின் பேரில் நான் வெளிநாடு செல்லவில்லை. ஜனநாயக விரோத ராஜபக்ஷ ஆட்சியினால் அச்சுறுத்தலுக்குட்பட்டிருந்த பலர் வெவ்வேறு அடையாளங்களுடன் செயற்பட நேர்ந்தமை ஊரறிந்த இரகசியமாகும். எனக்கும் அவ்வாறு செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டதை மறைக்க வேண்டிய அவசியமில்லை.

2012 ஏப்ரல் மாதம் 07ம் திகதி ராஜபக்ஷ ஆட்சியினால் நான் கடத்தப்பட்டேன். என்னை படுகொலை செய்ய முயற்சித்த வேளையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்தின் மீது தொடுக்கப்பட்ட நெருக்குதல் காரணமாக நான் வெளியேற்றப்பட்டிருக்காவிட்டால் காணாமல் போனவர்களின் பட்டியலில் எனது பெயரும் இருந்திருக்கும். அச்சந்தர்ப்பத்தில் அரசியல் கட்சியொன்றின் தலைவர்களில் ஒருவர் கடத்தப்படுமளவிற்கு ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்குமுறை மேலோங்கியிருப்பதாக அன்றைய எதிர்கட்சித் தலைவரும் இன்றைய பிரதமருமான ரணில் விக்ரமசிங்க கூறியது நினைவிருக்கிறது. அன்று ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினையாக இருந்த குமார் குணரத்தினத்தின் அரசியல் தொடர்பிலான பிரச்சினையை, இன்று அதனை,



ஒரு ஜனநாயகப் பிரச்சினையாக அவர்கள் காணாதது ஏன்? கண்டும் காணாமல் இருப்பதும் ஏன்?

அரசியலில் ஈடுபட முடியாத காரணத்தினால் நாட்டில் வாழ முடியாத நிலைமை உருவாகும்போது, உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக உபயோகித்த வேறு அடையாளங்களை காரணம் காட்டி நாட்டிலிருந்து வெளியேற்றச் செய்யும் முயற்சி எந்த ஜனநாயகத்தை சேர்ந்தது எனக் கேட்கிறோம். இதில் கவனிக்க வேண்டிய கேலிக்கூத்தான விடயம் என்னவெனில், அரசியல் காரணங்களுக்காக உயிரை பாதுகாத்துக் கொள்ள நாட்டை விட்டு வெளியேறியவர்களை மீண்டும் நாட்டுக்கு திரும்புமாறு ஊடகங்களின் வாயிலாக பகிரங்க அழைப்புவிடும் அதேநேரம், அவ்வாறு நாடு திரும்பிய என்னை நாட்டிலிருந்து விரட்ட சட்டப் புத்தகங்களை புரட்டிக் கொண்டிருக்கும் விடயமாகும். நாங்கள் போராடிக் கொண்டிருப்பது உயிரை பாதுகாக்கும் நோக்கில் வேறு அடையாளத்தை பயன்படுத்தி அவுஸ்திரேலியாவிடமிருந்து பெற்ற பிரஜாவுரிமையை ரத்துச் செய்து, பிறந்து வளர்ந்து கல்வி கற்ற மண்ணில் வாழவும், அரசியல் செய்யவுமான உரிமையை பெற்றுக் கொள்வதற்கேயன்றி, இரட்டைக் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்கல்ல.

அவுஸ்திரேலிய சட்டத்தின்படி அதன் குடியுரிமையை நீக்கிக் கொள்வதாயின், இலங்கையில் குடியுரிமை வழங்க வேண்டும். அல்லது குடியுரிமை வழங்குவதாக அரசாங்கத்தின் சான்றிதழை வழங்க வேண்டும். அவ்வாறான சான்றிதழ் இல்லாமல் அவுஸ்திரேலிய அரசாங்கம் எந்தவொரு குடிமகனினதும் குடியுரிமையை நீக்கமாட்டாது.



குடியுரிமை வழங்குவதாகவோ அல்லது வழங்கவிருப்பதாகவோ குறிப்பிட்டு உத்தியோகரீதியான சான்றிதழ் வழங்கும் அதிகாரம் இலங்கை குடியுரிமை சட்டத்தின்படி, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடமே உள்ளது. அதன்படி தற்போது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக உள்ள ஜோன் அமரதுங்கவிடம் இது சம்பந்தமான விண்ணப்பத்தை சமர்ப்பித்த போதிலும், அது குறித்து எந்த பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட தற்போதைய அரசாங்கத்தின் நெருங்கிய நண்பரான சிங்கப்பூர் பிரஜை அர்ஜுன் மகேந்திரன் என்பவருக்கு ஒரே நாளில் குடியுரிமை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக செய்திகள் வெளிவந்தன.

ராஜபக்ஷ ஆட்சியில் அநீதியிழைக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போன்றவர்களின் உரிமைகள் மீண்டும் உறுதி செய்யப்படுவதற்கு அவசர அரசியல் தீர்மானங்கள் எடுத்ததைப் போன்று, சிறைச்சாலையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தில்ருக்ஷான், நிமலரூபன் போன்ற தடுப்புக்காவல் கைதிகளுக்கும், தண்ணீர் கேட்டு போராடிய காரணத்தால் ரத்துபஸ்வல பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும், கட்டுநாயகவில் படுகொலை செய்யப்பட்ட ரொஷான் சானக போன்ற தொழிலாளர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்து அவர்களுக்கு நீதி வழங்குவதோடு, லலித் – குகன் உட்பட காணாமல்போனவர்கள் சம்பந்தமான உண்மையான தகவல்களை மக்களுக்கு வெளியிடுவதும் அரசாங்கத்தின் பொறுப்பாக உள்ளது.

பெரும்பான்மை மக்களின் ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினையை தவிர்த்து குறிப்பிட்ட சிலரின் பிரச்சினைகளை மட்டும் ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினை எனக் கொண்டு தீர்வை தேடுவது ஜனநாயகமாக இருக்காது என்பதை வலியுறுத்துகிறோம்.

தறபோதை ரணில் – மைத்திரி அரசாங்கம் விரும்பும் அரசியலை செய்பவர்களுக்கு அனைத்து உரிமைகளை வழங்குவதும், அதற்கு மாற்றான அரசியலை செய்பவர்களை சிறைக் கூடங்களுக்குள் தள்ளுவதும் ராஜபக்ஷ கொள்கையேயன்றி வேறொன்றுமில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, பெரும்பாலான மக்களின் பொருளாதார சுதந்திரத்தையும், உண்மையான ஜனநாயகத்தையும் பெற்றுக் கொள்வதற்காக அரசியலில் ஈடுபடுபவர்களின் உரிமையை பறிக்க இடமளித்துவிட்டு வாய்மூடியிருக்க மக்கள் தயாராக இல்லையென்பதே எமது உறுதியான நம்பிக்கை. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒருங்கிணைந்த போராட்டத்தின் மூலமே மக்கள் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வை பெற முடியும். அதற்காக முன்வருமாறு அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களிடமும் அழைப்பு விடுக்கிறோம்.

குமார் குணரத்தினம்
அரசியல் சபை உறுப்பினர்
முன்னிலை சோஷலிசக் கட்சி

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# கிரேக்க இடதுசாரிய முன்னணி சுரிஷாவின் வெற்றியும், மக்களின் எதிர்பார்ப்பும்




## ஐரோப்பிய இடதுசாரியமும், சுரிஷாவின் உருவாக்கமும்

சோவியத்தின் வீழ்ச்சியின் பின் ஐரோப்பாவில் இடதுசாரியம் பாரிய வீழ்ச்சியைக் கண்டது. ஏற்கனவே பல சீரழிவுகளாலும், தத்துவார்த்த முரண்பாடுகளாலும் பலமிழந்திருந்த இடதுசாரியம் 90 களின் நடுப்பகுதியில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு முன்னேற முயன்றது. சுய விமர்சனங்கள், மார்க்சிஸ மறு ஆய்வுகள்– தத்துவார்த்த விமர்சனங்கள், புதிய செயற்தந்திரங்கள்– குறிப்பாக அதிகாரமும் – ஜனநாயகமும் பற்றிய புதிய வேலைமுறைகளை இடதுசாரிகள் விவாதித்தனர். இவ் விவாதங்கள் சில நாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இடதுசாரிய அரசியல் வளர்ச்சிக்கு வித்திட்டது.

டென்மார்க், நோர்வே, ஸ்வீடன், கிரீஸ் போன்ற நாடுகளில் புதிய இடதுசாரியக் கட்சிகள் உருவாயின. இவை வழக்கமான இடதுசாரியக் கட்சிகள் போல் அல்லாமல் – சோசலிசம் பற்றிய பலவிதமான கொள்கைகளைக் கொண்ட– மாவோயிசக் கட்சிகள் தொடக்கம் ட்ரொட்ஸ்கியக் கொள்கைகளைக் கொண்ட கட்சிகளும், வெகுசன அமைப்புகளும் இதில் பங்குகொண்டன. இதில் பங்குகொண்ட கட்சிகள் தமக்கு இடையிலான கருத்து வித்தியாசங்களை விவாதித்தபடி மக்கள் தேவைகளின் அடிப்படையில், சமூக போராட்டத்தை– மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கங்களாகவே இப்புதிய இடதுசாரியக் கட்சிகள் உருவாக்கப்பட்டன. அத்துடன் தேர்தலிலும் பங்குகொள்வதற்கான தேர்தல் முன்னணியாகவும் உபயோகிக்கப்பட்டது.

இவற்றில் முதன் முதலில் மக்கள் மத்தியிலும், பாராளுமன்றத் தேர்தல்களிலும் அரசியல் ரீதியான வெற்றியைக் கண்டது (1994) டென்மார்க்கின் இடதுசாரிய முன்னணியான Enhedslisten – De Rød-Grønne (Unity List – The Red–Greens) என்ற கட்சியாகும். இன்றும் ஆளும் வர்க்கத்துக்கு – அதன் நவதாராள பொருளாதார அரசியலுக்கு எதிரான சக்தி வாய்ந்த கட்சியாக விளங்குகிறது Enhedslisten – De Rød--Grønne.



டென்மார்க் இடதுசாரிய அரசியலில் சிறு வளர்ச்சி ஏற்பட்டுப் பத்து வருடங்களின் பின் 2004 இல் கிரீஸ் நாட்டில் இடதுசாரிகளுக்கு இடையிலான கூட்டு உருவானது. கிரீசின் பொருளாதார வீழ்ச்சி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் அகங்காரவாத அரசியல், நவதாராளமய பொருளாதாரவாத நெருக்கடி இவற்றிற்கு எதிராக கிரீஸ் மக்கள் கிளர்ந்தெழுந்தமை போன்ற மூன்று முக்கிய விடயங்கள் இடதுசாரிகளின் கூட்டை கிரீசில் உருவாகக் காரணமாகியது.

Synaspismós Rizospastikís Aristerás(SYRIZA ) / Coalition of the Radical Left என்று அழைக்கப்படும் இந்த இடதுசாரிகளின் கூட்டமைப்பானது, பல இடதுசாரிய கட்சிகள், மக்கள் அமைப்புகள், தொழிற்சங்கங்களின் தேர்தல் கூட்டமைப்பாக மட்டுமல்லாமல் மக்கள் போராட்டத்தை தலைமை தங்கும் முன்னிலைச் சக்தியாகவும் இயங்குகிறது.

2004 பாராளுமன்றத் தேர்தலில் (241.539 வாக்குகள் ) 3.3 வீத வாக்குகளைப் பெற்று 6 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பிய SYRIZA 2012 இல் (1.655.053 வாக்குகள்) 26.9 வீத வாக்குகளைப் பெற்று 71 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பியது.

## 2015 தேர்தல்

கிரேக்க இடதுசாரிக் கட்சிகளின் கூட்டான SYRIZA, கிரேக்கப் பாராளுமன்ற தேர்தலில் 25.01.2015 அன்று 149 ஆசனங்களை வென்று பாரிய வெற்றியடைந்தது. 25.01.2015 அன்று ஆறு மணியுடன் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு முடிவுக்கு வந்தது. அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே SYRIZA பாரிய வெற்றியடையும் எனக் கூறப்பட்டது. அதன்படியே, தேர்தலில் வென்றுள்ள SYRIZA (25.01.2015, இரவு வரை) 36.30 வீதமான வாக்குகளை பெற்றது. 50 வீதமான வாக்குகளை SYRIZA பெறாவிட்டாலும், 300 ஆசனங்களைக் கொண்ட கிரேக்க பாராளுமன்றத்தில், கிரேக்க விகிதாசார தேர்தல் சட்டப்படி 50 வீதத்துக்கும் மேலான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இதன் அடிப்படையில், ஆளும் கட்சியாகவிருந்த புதிய ஜனநாயகம் என்ற நவதாராள பழமைவாதக் கட்சியின் தலைமையிலான அரசு தேர்தல் இரவு அன்று பதவி விலகியது. அதன் பிரதம மந்திரி அந்தோனியோ சமராஸ் தோல்வியை ஒப்புக்கொண்டு, SYRIZA வின் பிரதமர் வேட்பாளர் அலெக்சிஸ் சீபிராஸ் – Alexis Tsipras அவர்களை ஆட்சியமைக்க அழைப்பு விடுத்தார்.

## வலதுசாரிகளுடன் அரசு அமைத்தமை

தனிப்பெரும் கட்சியாக வென்றுள்ள போதும் ளுலுசுஐணுயு தனித்து கிரேக்கத்தில் ஆட்சி அமைக்காமல், "சுதந்திர கிரீக்கர்கள்" என்ற வலதுசாரிய கட்சியுடன் இணைந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஒரு இடதுசாரிக் கூட்டணி, வலதுசாரியக் கட்சியை தனது அரசு அமைக்கும் பங்காளியாக மாற்றியது, இடதுசாரிகளை மட்டுமல்ல பரந்துபட்ட அரசியல் ஆய்வாளர்கள் மத்தியிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அதுவும், சுரிஷாவின் கொள்கைக்கும் இடதுசாரிய அரசியலுக்கும் மிகவும் இணைவான கட்சிகளான கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் கிரேக்க சமூக ஜனநாயகக் கட்சிகள் இருக்கக் கூடியதாக, அது வலதுசாரியக் கட்சியொன்றை ஆட்சியின் பங்காளியாக தெரிவு செய்தது ஆச்சரியப் படத்தக்க விடயமே. இவ்விடயம் பற்றி சுரிஷாவின் தலைமை கூறும் கருத்தும் மிக முக்கியமானதாகும். இன்று கிரேக்க நாடும் அதன் அரசும் எதிர்நோக்கும் பிரச்சனை அல்லது முதன்மை முரண்பாடு உள்நாட்டு அரசியல் சார்ந்ததல்ல. மாறாக ஐரோப்பிய யூனியன், அதன் மத்திய வங்கி மற்றும்



ஐ. எம். எப் என்ற சர்வேதேச நாணய நிதியம் என்ற அந்நிய மூலதனம் சார்ந்த நிறுவனங்கள், கிரேக்கத்தின் தேசியப் பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் கிரேக்க தேசத்தின் சுயநிர்ணய உரிமையையும் இறைமையையும் மறுப்பதே முக்கிய பிரச்சனையாக– முரண்பாடாகவுள்ளது. இதன் அடிப்படையில் இன்று உள்நாட்டு முரண்பாடுகளை ஒருபக்கம் வைத்து விட்டு, பொது எதிரிகளான அந்நிய சக்திகளை வெல்வதற்காகவே, SYRIZA வலதுசாரிய கட்சியான "சுதந்திர கிரீக்கர்கள்" உடன் சேர்ந்து, ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான ஒருவகை தேசபக்த – தேசிய அரசை அமைத்துள்ளது. சீனாவின் தேசபத்த யுத்தம், சோவியத்தின் பாசிசத்துக்கு எதிரான போர் போன்ற வரலாற்று நிகழ்வுகளில், எவ்வாறு ஐக்கிய முன்னணிகள் தந்திரோபாய அடிப்படையில் கம்யூனிஸ்ட்களால் உருவாக்கப்பட்டதோ அதேபோன்ற நிகழ்வே கிரேக்கத்திலும் சுரிஷாவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## சுரிஷா அரசும் கிரேக்க மக்களின் எதிர்பார்ப்பும்

சுரிஷாவின் வெற்றியும், அது அரச அதிகாரத்தைக் கைப்பற்றியதும் ஐரோப்பிய அரசியலில் பல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் கடந்த இருபது வருடங்களாக கிரேக்க மக்கள் பாரிய பொருளாதாரச் சிக்கல்களுக்குள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் சுரிஸா அரசு தமது பொருளாதாரச் சுமையை ஓரளவுக்கேனும் குறைக்குமென்ற நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றனர் .

குறிப்பாக கீழ்வரும் ஆறு விடயங்களுகும் சுரிஸா அரசால் தீர்வு காணப்படல் வேண்டுமென கிரேக்க மக்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

1. அரசால் வரையறுக்கப்பட்ட அடிப்படைச் சம்பளம்

2. பத்து வருடங்களுக்கு முன்பு இருந்தது போன்ற "கருவறையில் தொடக்கி –கல்லறை வரையிலான" சேவை வழங்கும் மக்கள் நல அரசு

3. தரமான இலவச சுகாதாரம் மற்றும் உயர்கல்வி

4. விலைவாசி மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய வயோதிபகாலப் (பென்சன்) ஓய்வூதியம்

5. விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான மானியங்களும் கொடுப்பனவுகளும்.

6. வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப்படுத்துதல்

இவ் எதிர்பார்ப்புகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்றால், சுரிஸாவிடம் தோற்றுப்போன "புதிய ஜனநாயகம்" என்ற நவதாராள பழமைவாதக் கட்சியின் தலைமையிலான அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட "சிக்கனப் பொருளாதாரம்" இல்லாதொழிக்கப்படல் வேண்டும். இந்த "சிக்கனப் பொருளாதாரம்" மேற்படி புதிய ஜனநாயக கட்சியின் அரசால் சுயமாக அறிமுகம் செய்யப்பட்டதல்ல. கிரீஸ் பாரிய வெளிநாட்டுக் கடன் சுமையால் பொருளாதார பிரச்சனையில் சிக்கியுள்ளது. கிரேக்கம் 240 பில்லியன் யூரோக்களை ஐரோப்பிய ஒன்றியம், அதன் மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய மூன்று நிறுவனங்களிடமும் கடனாகப் பெற்றுள்ளது. இக்கடன் சுமையானது கடந்த 10 வருடங்களாக, கிரேக்கத்தின் தேசியப் பொருளாதாரத்தின் வருவாய் மூலம் தீர்க்ககூடிய தொகை அல்ல. அதனால் மேற்படி மூன்று அந்நிய சக்திகளும், தமது கடனைத் திரும்பப் பெறும் நோக்கில் "புதிய ஜனநாயகம்" என்ற நவதாராள பழமைவாதக் கட்சியின் அரசை வற்புறுத்தி உருவாக்கியதே "சிக்கனப் பொருளாதாரம்" "சிக்கனப் பொருளாதாரம்" முறைமையின் உள்ளடக்கம் என்னவெனில்

1.தேசிய சொத்துக்களை தனியார் மயப்படுத்தல்

2. அதேபோன்று உயர்கல்வி, சுகாதாரம், பென்சன் போன்ற அரச சேவைகளை தனியார் மயப்படுத்தல்

3. மானியங்கள், பென்சன் மற்றும் பல மக்கள்நல உதவித் தொகைகளை இல்லாதொழித்தல் அல்லது 50 வீதமாகக் குறைத்தல்

4. எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி வெளிநாட்டு மூலதனம், தேசியப் பொருளாதாரத்தைக் கையாளுவதற்கு வகை செய்தல். அதாவது, நவதாராளப் பொருளாதாரத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்துதலே "சிக்கனப் பொருளாதார" முறைமையாகும். இங்கு சிக்கனம் என்பது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் மட்டுமே என்பதும், முதலாளித்துவ – ஏகாதிபத்திய சுரண்டலுக்காக என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.




இதன் பின்னணியில், சுரிஸா அரசானது எவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம், அதன் மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் கிரேக்கம் மீதான பொருளாதார ஆதிக்கத்தை கையாளப் போகின்றது என்பதிலேயே அதன் வெற்றியும் எதிர்காலமும் தீர்மானிக்கப்படும். இதைத் தன்னால் தீர்க்க முடியும். புதிய பொருளாதார அடிப்படையில் – மக்கள் நல அரசை அமைக்க முடியும் – அமைப்போம் என்ற கோசத்தை முன்னிறுத்தியே SYRIZA இந்த தேர்தலில் வென்றுள்ளது.

## குமார் குணரத்தினத்திற்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டது ஏன்?

### - செந்தில்வேல், பொதுச் செயலாளர், புதிய ஜனநாயக (மா-லெ) கட்சி

அரசியல் சாசனம் என்று சொல்கின்றீர்கள், ஜனநாயகம் என்று சொல்கின்றீர்கள், பேச்சு சுதந்திரம் என்று சொல்கின்றீர்கள் ஆனால் தோழர் குமார் குணரத்தினம் அவர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது என்றால் இந்த ஜனநாயகத்திற்கும் பேச்சு சுதந்திரத்திற்கும் என்ன அர்த்தம் இருக்கின்றது என்பதை நாங்கள் மக்கள் மத்தியில் கேள்வி எழுப்ப வேண்டியவர்களாக இருக்கின்றோம். இம் மாதம் பெப்ரவரி 23 ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய மார்க்கிய லெனினிஸ கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா செந்திவேல் இவ்வாறு தெரிவித்தார்

மேலும் அவர் தெரிவிக்கையில்,
சிறைகளில் இருக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் தொடர் போராட்டங்கள் பல இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் மலையகத்தமிழர்கள் என்ற எல்லோரும் அரசியல் கைதிகள் என்று நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டுள்ளார்கள்.

நாங்கள் அதைப் பார்த்தால் யுத்தத்திற்கு முன்பு சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் இன்னும் விடுதலையாகாமால் இருக்கின்றார்கள். வழக்குத் தொடுக்கப்படாமல் இருக்கின்றார்கள். அதேபோன்று யுத்தகாலத்தில் கைது செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வெளியிடப்படாத நிலைமை இருக்கின்றது.

அண்மையில் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டிருந்த ஒரு தகவல் 700 அரசியல் கைதிகள் இரகசிய முகாம் ஒன்றிலே அடைக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இவ்வாறு இரகசிய இடங்களிலும் சரி அரசாங்கத்தினுடைய சிறைச்சாலைகளிலும் சரி இராணுவ வதைமுகாம்களிலும் சரி இந்த அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்ற நிலைமை நீடித்துக் கொண்டிருக்கின்றது.

இது மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் மாத்திரம் அன்றி அதற்கு முன்பு கைது செய்யப்பட்டவர்கள் கூட இன்றும் விசாரணைகள் இன்றி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் இந்த நாட்டிலே ஜனநாயகத்தை மீட்போம் என்று சொன்னார்கள்.

ஆனால் இந்த ஜனநாயகம் இன்றைக்கு எவ்வாறு மீட்கப்படுகின்றது என்பதை நாங்கள் இந்த சிறைக்கைதிகள் ஊடாக அவர்கள் விடுதலை செய்யப்படாமல் அல்லது அவர்கள் தொடர்பான எவ்விதமான தகவல்களும் வெளியிடப்படாமல் ஒரு மோசமான நிலை நீடித்து வருகின்றமையிலிருந்து கண்டு கொள்ளலாம்.

இதனை மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தினுடைய தொடர்ச்சியாகத்தான் நாங்கள் காண்கின்றோம். அதாவது இவர்கள் ஜனநாயகம் என்று சொல்லுவது தங்களுடைய அந்த ஆளும் வர்க்கத்திற்குரிய ஜனநாயகம் என்று முதலாளித்துவ ஜனநாயகத்தை சொல்லுகிறார்களே தவிர மக்களுக்கான ஜனநாயகத்தை அவர்கள் சொல்வதாக இல்லை.

எனவே தான் நாங்கள் இந்த புதிய ஆட்சியின் கீழ் வெறும் எதிர்பார்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை விட, மக்களை விழிப்புறுத்தி மக்களை அணிதிரட்டி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு தேவை கடந்தகாலத்தை விட இன்னும் பன்மடங்காக அதிகரித்துக்கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.



குறிப்பாக வடக்கு கிழக்கிலே இருக்கின்ற தாய்மார்கள் தங்களுடைய கணவன்மார்கள், தங்களுடைய பிள்ளைகள், தங்களுடைய உறவினர்கள் என பலர் சிறைகளில் வாடுவதை எண்ணி கலங்கிக்கொண்டிருக்கிறார்கள். காணாமல் போனவர்கள் என்ற பட்டியல் பெருந்தொகையாக காணப்படுகின்றது. தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்றறியாச் சூழ்நிலையிலே இன்று இருக்கின்றார்கள்.

எனவேதான் இடதுசாரி அமைப்புக்கள், ஜனநாயக அமைப்புக்கள், வெகுஜென அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்கனவே நடத்தி வந்த இந்த சிறைக்கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற போராட்டத்தை மேலும் மக்கள் மத்தியில் கொண்டு சென்று மேலும் வெற்றிகரமாக அல்லது சக்திமிக்கதாக மாற்றுவதன் மூலமாகத் தான் இந்த ஆட்சிக்கு ஒரு நெருக்கடியை அழுத்தத்தை கொடுத்து சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை மீட்கக்கூடிய ஒரு புதிய நிலைமையை நாங்களும் ஏற்படுத்த வேண்டும் என்பதே எங்களுடைய கட்சியுனுடைய நிலைப்பாடு.

வடக்கிலே, கிழக்கிலே, மலையகத்திலே நாங்கள் நடத்திய போராட்டங்களில் தனியே தமிழ் அரசியல் கைதிகளை மாத்திரம் விடுதலை செய்யுங்கள் என்பதல்லாமல் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள் என்றே.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் அத்துடன் அவர்களுக்கு சிறைகளில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி விசாரணை வேண்டும் என்பதையும் நாங்கள் வற்புறுத்துகின்றோம். அதேபோல் வதைமுகாம்களில் மறைத்துவைக்கபட்டிருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

முதல் நடவடிக்கையாக அவர்கள் பற்றிய விபரத்தை அவர்களுடைய தாய்மார்களுக்கோ குடும்பத்தவர்களுக்கோ, உறவினர்களுக்கோ தெரிவிக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுப்பதோடு, முன்னிலை சோசலிச கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் தோழர் குமார் குணரத்தினம் அவர்களின் அரசியல் உரிமையும் மறுக்கப்பட்டிருக்கின்றது. அவர் இநத நாட்டின் பிரஜை அவர் இந்த நாட்டிலே அரசியல் செய்வதற்கு உரிமை இருக்கின்றது.

எனவே தான் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்றவர்கள் தமிழர்கள் ஆயினும் சிங்களவர்களாயினும் முஸ்லிம்கள் ஆயினும் மலையகத் தமிழர்களாயினும் அவர்களுக்குரிய உரிமை இங்கு மறுக்கப்பட்டதன் காரணமாக தான் உயிர் அச்சுறுத்தலின் காரணமாகத் தான் அவர்கள் வெளிநாடுகளுக்கு செல்லவேண்டி நேர்ந்தது.

இன்று இந்த ஜனநாயகம் மீட்கப்பட வேண்டிய சூழலில் அவர்கள் நாட்டுக்கு திரும்பி வருவதற்கான சூழலை இந்த அரசாங்கம் அவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதுடன் தோழர் குமார் குணரத்தினத்திற்கு அரசியல் செய்யும் உரிமையை வழங்கவேண்டும் எனவும் அரசை நாங்கள் வற்புறுத்துகின்றோம்.

இன்றைய சூழலில் இந்த மைத்திரி, ரணில் அரசாங்கத்தினுடைய ஏமாற்றுத்தனங்களையும் அவர்கள் மக்களை ஏமாற்றி தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர மக்களுக்குரிய ஜனநாயகத்தை வழங்குவதாக இல்லை. எனவே நாங்கள் மக்களுக்குரிய ஜனநாயகத்தை இடதுசாரி சக்திகளாகிய நாங்கள் மக்களை அணிதிரட்டி மக்களின் இழந்த உரிமைகளை வென்றெடுக்கவேண்டும் என்றார்.

## மானுடத்திற்காக வாழ்வதையே, மகிழ்ச்சியான வாழ்க்கை என்று வாழ்ந்தவன் எங்கள் தோழன் எம்.சி.லோகநாதன்!!!



தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் மட்டும் வாழ மனிதர்களை நிர்ப்பந்திக்கும் தனியுடமை உலகில் தன் சக மனிதர்களிற்காக வாழுதல், சமுதாயத்திற்காக போராடுதல் என்ற கல் நிறைந்த பாதையில் கால் வலிக்க நடந்த போதும் களைக்காமல் பொதுவுடமை என்னும் போர்க்கொடியை தூக்கிப் பிடித்தவன் எங்கள் தோழன் எம். சி.லோகநாதன். அந்த போராட்டக் குணமே அவனை எமது புதிய ஜனநாயக மக்கள் முன்னணியில் இணைய வைத்தது. அந்த போராட்டக் குணமே அவனை எமது தோழன் ஆக்கியது.

எம்மைச் சுற்றிய எல்லாம் இனவாதம்,
சாதியம், ஆயுதம் தாங்கியவர்களின் அராஜகங்கள் என்று மனிதத்தை குழி தோண்டி புதைத்த போது கும்மிருட்டில் மிளிரும் ஒரு நட்சத்திரம் போல எழுந்தவன் எங்கள் எம்.சி. கருத்து, எழுத்து, பேச்சு என்பதைத் தாண்டி, மக்களுடன் வாழ்வதும், போராடுவதுமே சமத்துவ சமுதாயம் ஒன்றைக் கொண்டு வரும் என்ற பொதுவுடமை தத்துவத்தை ஏற்றுக் கொண்டு, அதற்காக செயற்பட்டவர்களில் ஒருவனாக அவன் இருந்தான் என்பதே அவன் எமது சமுதாயத்திற்கு விட்டுச் செல்லும் செய்தி...

தாயின் மரணத்திற்காக நாடு சென்றவன், மரணச் சடங்குகள் முடிந்த அடுத்தடுத்த நாட்களில் பால் நினைந்தூட்டிய தாயின் பிரிவையும் மறைத்துக் கொண்டு "முன்னிலை சோசலிசக் கட்சி" யாழ்ப்பாணத்தில் "அரசியல் கைதிகளை விடுதலை செய்" என்று இலங்கை அரசிற்கு எதிராக நடத்திய போராட்டத்தில் முன்னின்று செயற்பட்டான். சக தோழர்கள் போராட்டக் களத்தில் நிற்கும் போது தனது நிலையை கருத்தில் கொள்ளாது தானும் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று தோழர்களோடு இணைந்து போராடியது அவனது தனித்துவம்..

லோகநாதன் தனது அரசியல் பயணத்தை தமிழ் ஈழ மக்கள் விடுதலைகழகத்தில் தொடங்கினான். பின்பு அந்த இயக்கத்தின் மக்கள்விரோத அரசியலிற்கு எதிராக போராடி வெளியேறினான். டென்மார்க்கிற்கு புலம்பெயர்ந்த பின்பு "சஞ்சீவி" என்ற கலை இலக்கிய அரசியல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இருந்து கொண்டு மக்களிற்கு மறுக்கப்பட்ட அரசியல், ஜனநாயக உரிமைகளிற்காக போராடியபடி மக்கள் போராட்ட அமைப்பை கட்டுவதற்கான முயற்சிகளில் பங்கெடுத்தான். 1992 இல் சுயாதீன தகவல் மையத்தில் இணைந்து செயல்பட்டான். அதன் பின்பு இலங்கையின் பேரினவாத அரசிற்கும், ஆயுதம் தாங்கிய அராஜகக் கும்பல்களிற்கும் எதிராக உருவாக்கப்பட்ட "மூன்றாவது பாதை" அமைப்பின் மத்தியகுழு உறுப்பினராக இருந்து செயற்பாடுகளை முன்னெடுத்தான். இதே காலகட்டத்தில் முற்போக்கு சக்திகள் இணைந்து இந்தியாவில் உருவாக்கிய "தேச பக்தன்" அமைப்பினருடனும் இணைந்திருந்தான். 2009 இல் புதிய ஜனநாயக மக்கள் முன்னணி இடதுசாரிய கொள்கைகளை உயர்த்திப் பிடித்தபடி மக்கள் விடுதலையை முன்னிறுத்தி எழுந்த போது அதில் இணைந்து கொண்டான். முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மக்கள் முன்னணி என்பவற்றின் போராட்டப்பாதையில் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களிற்கிடையில் ஒற்றுமையை, இன அய்க்கியத்தை வலியுறுத்தி கட்டப்பட்ட சமவுரிமை இயக்கத்தின் ஆரம்ப காலகட்ட உறுப்பினராகவும், டென்மார்க் சமவுரிமை இயக்கக் கிளையின் செயற்குழு உறுப்பினருமாக முன்னின்று உழைத்தவன் எங்கள் தோழன்..

புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் "முன்னணி" சஞ்சிகையை பரவலாக எடுத்துச் சென்றவன் இடதுசாரிய முன்னணியின் அமைப்பான மக்கள் போராட்டக் குழு வெளியிடும் "போராட்டம்" பத்திரிகையை மக்களிடம் கொண்டு செல்ல முன்னின்று உழைத்தவன் புதிய ஜனநாயக முன்னணியின் இணையத்தளத்தில் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் தொடர்ந்து எழுதியவன் தமிழ்மொழி ஆளுமை கொண்டவன் இனம், மதம், சாதி என்பவற்றிற்கு எதிராக தனது உணர்வுபூர்வமான, கோபம் ததும்பும் எழுத்துகள் மூலம் சாடியவன் இன்று தனது எழுத்தை நிறுத்திக் கொண்டான்..

இனவாதம், சர்வாதிகாரம் என்னும் புதைமணலில் கால்கள் புதைந்தபடி அவலங்களும், துயரங்களுமே வாழ்க்கையாகிப் போன எமது மக்களின் நிலையை மாற்றி அமைக்க எங்களது முதல் காலடியை எடுத்து வைத்திருக்கும் விடியல்காலைப் பொழுதில் அவனை மரணம் தழுவியிருக்கிறது. எமது மக்களின் போராட்டங்களுடன் முப்பது வருடங்களாக இணைந்திருந்த மாணிக்கம் செல்லம் லோகநாதனின் வாழ்வு மரணத்துடனான போராட்டத்துடன் முடிவுக்கு வந்த போதும் அவன் உயர்த்திப் பிடித்திருந்த செங்கொடியை அவனது தோழர்களாகிய நாங்கள் என்றும் தாங்கிப் பிடித்திருப்போம்..

சென்று வா தோழனே, நாளை வரும் போர்க்களங்களில் உனது பாடல்களை நாம் பாடுவோம். கத்தும் கடல் அலையை மேவி அவை ஒலிக்கும். மூசி வீசும் காற்று உனது பாடல்களை காவிச் செல்லும். சென்று வா எம் தோழனே, செஞ்சுடர் எரிய ஒளி வீசும் நம் சுதந்திரக்கோட்டையின் மூலைக்கல்லாய் நீ இருப்பாய். சென்று வா எம் தோழனே, இருளிலும் ஒளிரும் சிவப்பு நட்சத்திரமாய் நீ இருப்பாய் சென்று வா. செவ்வணக்கம் தோழனே, சென்று வா!



படிப்பகம்

# தமிழர்களின் இன்றைய கையறு நிலைமைக்கு காரணம் சாதி–சாதி மட்டுமே–சாதியைத் தவிர வேறொன்றுமில்லை.



சாதி இப்ப இல்லை. சாதி ஒழிந்துவிட்டது. இப்ப ஆர் சாதி பாக்கினம்.

சாதியை சொல்லி சொல்லி பிழைக்கினம். அதனைப் பற்றி ஏன் கதைக்கவேணும். பேசாமல் விட்டாலே அது மறைந்துவிடும். இப்படியாக எங்கள் மத்தியில் உரையாடல்கள் இடம்பெற்று வருகிறது. இதனையொட்டி போட்டிக்குப் போட்டி பேட்டிகளும் இதழ்களில்– தளங்களில்– ஊடகங்களில் ஊற்றெடுத்துப் பாய்கின்றன. அரங்குகளில் கருத்துப் பொறிகள் பறக்கின்றன. சாதி இருக்கு என்போரும்–இல்லை என்போரும் வரிந்து கட்டிக்கொண்டு மேடைக்கு மேடை தாவுகிறார்கள். இதுதான் தமிழர்களுக்கு உரித்தான தனிச் சிறப்பு. தமிழர்களின் தனித்துவ அடையாளம்.

சாதி ஒரு மனிதனுக்கு தீமையானது. ஆனால் தமிழர்களுக்கு அது தேவையானது. சாதி மனிதர்களை பிளவுபடுத்தும். ஆனால் தமிழர்களை அது ஒற்றுமைப்படுத்தும். சில இடங்களில் எமக்கு சாதி அவசியம். சில நேரங்களில் சாதி எமக்கு அநாவசியம். சில நேரங்களில் தேவைப்படும் சாதி சில இடங்களில் தேவையற்றது.

பாடசாலைகளில் சம இருக்கை––தேனீர் கடைகளில் உபசரிப்பு–ஆலயப் பிரவேசம்–சம பந்திப் போசனம் போன்ற போராட்ட சாதனைகள் சாதியின் தீவிரத்தை குறைத்துள்ளதே யொழிய சாதியின் இருப்பை அசைக்கவேயில்லை. சாதியினால் பலன் பெறுவோரும் அதனால் பாதிக்கப்படுவோரும் சாதியை தக்க வைப்பதற்கான நடைமுறைகளையே தொடர்ந்தும் பின்பற்றுகின்றனர்.

மனிதர்களாக மாறாத வரை–தமிழர்களாக வாழும் வரை சாதி தொடர்ந்து கொண்டே வரும். சாதி அகல வேண்டுமானால் சமூகக் கட்டுமானம் தகர்க்கப்பட வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த மனிதர்கள் அரசியலை தங்கள் கையில் ஏந்தவேண்டும். தமிழர்கள் மத்தியில் இருந்து மனிதர்கள் தோன்றாத வரை சாதியற்ற சமூகம் உருவாகவே முடியாது.
தமிழ்(மொழி) அழிகிறது என ஆங்கிலத்தில் படித்துப் பட்டம் பெற்ற தமிழ் கல்விமான்கள் இலங்கையில் இனக்குரோதத்தை வளர்த்ததும் சாதி. விடுதலைப் போராட்டத்தை இனப்போர் ஆக்கியதும் சாதி. அந்தப் போராட்டத்தை வன்னிப் பேரழிவுக்கு வழி நடத்திச் சென்றதும் சாதி.
தமிழர்கள் என்பது சாதி
தனிநாடு என்பது சாதி
இவற்றுக்கான திடமான காரணங்கள்––தடயங்கள் நமது இலங்கைத் தமிழரின் வரலாற்றில் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. இருந்தும் தமிழராகிய நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். காரணம் எங்களிடத்தில் உள்ள சுயநலம். பணமென்றால் பிணமும் வாய் திறக்கும் என்று இதனால்தான் நமது முன்னோர் கூறி வைத்துள்ளனர்.

ஊருக்குள் பல சாதி
சாதிக்கு ஒரு ஊர்
சாதிக்கு ஒரு வீதி
சாதிக்கு ஒரு கோயில்
சாதிக்கு ஒரு பாடசாலை
சாதிக்கு ஒரு வாசிகசாலை
சாதிக்கு ஒரு சுடலை
சாதிக்கு ஒரு சவக்காலை
சாதிக்கு ஒரு படகு துறை
சாதிக்கு ஒரு கட்சி

கலப்புத் திருமணம்–பொருளாதார வளர்ச்சி–உயர் பதவி–அதிகார பீடம்––இட ஒதுக்கீடு போன்ற திடடங்களால் தமிழர்களின் சாதிப் பொறிமுறை வாழ்வியலை கருவறுத்துவிட முடியாது.

சமயங்கள் சாதியின் உற்பத்தி சாதனங்கள் கோயில்கள் சாதியை கட்டிக் காக்கும் கோட்டைகள்.
ஊரில் பிறந்த சாதி உலகம் பூரா பரவிக் கொண்டிருக்கிறது.
சமயமும் சாதியும் தமிழர் என்ற நாணயத்தின் இரு முகங்கள்
தமிழர் செல்லும் இடமெல்லாம் சாதியும் கூடவே செல்லும்
தமிழர் இருக்கும் இடத்தில் சாதியும் குடியிருக்கும்
தமிழர் சாதி ஊடாகவே சிந்திக்கிறார்கள்.
தமிழர் சாதி வழியூடாகவே எதையும் அணுகுகிறார்கள்.
தமிழர் பேச்சிலும்–மூச்சிலும்–செயலிலும் சாதியே.
தமிழர் சமூகத்தில் சாதி பாராட்டாதவன் துரோகி– அதனை வலியுறுத்துபவன் தியாகி
சாதிப் பிரச்சனை இல்லை என்றால் இலங்கையில் இனப் பிரச்சனையும் இல்லை. மாறாக
இனப் பிரச்சனை உண்டு என்றால் தமிழர்கள் மத்தியில் சாதிப் பிரச்சனையும் உண்டு.

வரலாற்றை நடுநிலை நின்று பகுத்தறிவுடன் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்தால் தமிழ் இனம் என்பதும் தமிழர்கள் என்பதும்



ஒரு பெரும் கதையாடல் என்பது புரியும். அதற்கான உறுதியான சான்றாகவே எமது கடந்தகால தமிழர்களின் அரசியல் வரலாறு அமைந்துள்ளது.

இலங்கையில் தமிழ் என்னும் ஒரு மொழியைப் பேசுகின்ற பல இனக் குழுக்கள் இருந்தன. அவை பரஸ்பரம் ஒன்றை ஒன்று சார்ந்து–மதித்து மனிதர்களாக–மனித நேயத்துடன் கூட்டுறவு கொண்ட ஒரு மக்கள் தொகுதியாக–பொதுமைப் பண்பு நிறைந்த சமூகமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அதற்கான வரலாற்றுத் தடயங்கள் திடப்பொருட்கள் வடிவிலும் எழுத்து வடிவிலும் பேச்சு வடிவிலும் தாராளமாக காணப்படுகின்றன.

இலங்கையில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்ப் பேசும் பல்லின அதாவது பல சாதி மக்கள் வாழ்கிறார்கள். ஒவ்வொரு இனத்து(சாதி)க்கும் தனக்கேயுரிய பாரம்பரிய பிரதேச பண்பாட்டு கலாச்சார இயல்புகள் – மொழி வழக்குகள் (இன்றும்) காணப்படுகின்றன. வரலாற்றுப் போக்கின் ஒரு கால கட்டத்தில் ஆண்ட ஒரு பரம்பரையினர் தமது ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து நிலைநிறுத்த––மக்களை(ஏமாற்றி)கட்டுப்படுத்தி ஆட்சிபுரிய கையாளப்பட்ட தந்திரோபாய நடைமுறையின் வெளிப்பாடே தமிழ் இனம் என்ற தமிழர்கள் கதையாடல் ஆகும்.

மேற்குறிப்பிட்ட தந்திரரோபாய நடைமுறையானது ஏற்கனவே இயற்கையின் சக்தியை வழிபட்டு வந்த இனக்குழுக்களை மதம் என்னும் போதையை ஊட்டி சமய சித்து விளையாட்டுக்களைக் காட்டி அவற்றைப் அடக்குமுறைப் படிநிலை சாதிப் பிரிவுகள் அமைந்த தமிழினம்(தமிழர்கள்) ஆக்கியதாக அமைந்திருந்தது.
இந்தக் கதையாடல் அடிப்படையில் கடந்தகாலத்தில் முப்பது வருடங்களாக நடாத்தப்பட்ட தனித்தமிழ் நாட்டுக்கான இன யுத்தத்தில் இரண்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனுடன் விளைந்த ஏனைய அழிவுகளும் துன்பங்களும் வாழ்வுச் சிக்கல்களும் கணக்கில் அடங்காதவை. இந்த அனுபவங்களுக்குப் பின்பும் இன்று சாதிவாதம்–சாதிபேதம்–சாதிப் பாகுபாடு என்பவை முன்னரை விட தற்போது எல்லாத் தளங்களிலும் தலைதூக்கி நின்று முனைப்புடன் செயற்படுகின்றன.
தமிழர்களின் தனித்துவத்தை நம்புகிறவர்கள்–ஏற்றுக்கொள்பவர்கள்––நிலைநிறுத்த செயற்படுகிறவர்கள் அல்லது நிலைநாட்டப் போராடுகிறவர்கள் அனைவருமே சாதிச் சிந்தனை ஊடாகவே அனைத்தையும் அணுகுகிறார்கள்.

தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுசாரிக் கொள்கைகளை முன்னெடுத்த தமிழர்கள் தங்களுடைய சாதிச் சிந்தனை வழி செய்முறைகள் ஊடாக அவற்றை நடைமுறைப்படுத்த முயன்றதால் சமத்துவ–சமதர்ம–சமூக வாழ்வுமுறையை தாம் சார்ந்த மக்கள் மத்தியில் விருத்தி செய்ய முடியவில்லை. 1920களில் சிங்களத் தலைவர்கள் சுதந்திர இலங்கைக்கு கூட்டாட்சி முறையை வலியுறுத்திய போது அதனை தமிழ்த் தலைவர்கள் நிராகரித்தமைக்கு காரணம் அவர்களது சாதிச் சிந்தனையே.
1930களில் யாழ்ப்பாணத்தில் இலங்கையர் என்ற அடிப்படையில் சுதந்திர இலங்கை கட்டியமைக்கப்படல் வேண்டும் என்று இயங்கிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸை இருந்த அடையாளம் தெரியாதபடி தமிழர் தலைமைகள் அழித்துத் துடைத்தெறிந்தமைக்கு காரணம் அவர்களது சாதிச் சிந்தனையே.

1970களிலிருந்து இயங்கியல் ரீதியில் சிங்கள–பௌத்த–பேரினமேலாதிக்கவாத அடக்குமுறைக்கெதிராக தன்னியல்பாக உருவாகி வளர்ந்து வந்த ஆயுதப்போராட்டத்தை (கரையார––வெள்ளாள) முள்ளிவாய்க்கால் வரை நகர்த்திச் சென்றதும் சாதிச் சிந்தனையே. எமது இந்த சாதிச் சிந்தனைப் போக்கு உலகத்தில் தமிழர்களுக்கெனத் தனித்துவமான ஒரு நீதி–நியாயம்–தர்மம் உண்டு என்பதனை வலியுறுத்தி நிற்கிறது. ஒருவனுடைய நான் மட்டும்–எனக்கு மட்டும் என்ற சிந்தனையே அதாவது சுயநலமே ஒருவர் இன்னொருவரை சுரண்டுவதற்கு மூல காரணமாக அமைந்தது.

இதுவே தனது பரிணாம வளர்ச்சியில் சமய தத்துவங்களின் ஊடாக தமிழர்கள் மத்தியில் சாதியத்தை உருவாக்கியதுடன் மட்டுமல்லாது சாதி ஒவ்வொன்றுக்கும் தனித் தனி நீதி––நியாய–தர்ம வரைமுறைகளையும் நடைமுறை வழக்கில் கொண்டு வந்தது. அது மேலும் ஆழமாகச் சென்று ஒரே சாதிக்கு உள்ளேயும் பிரிவுகளை உருவாக்கி அங்கேயும் தனித் தனி நீதி––நியாய–தர்ம வரைவுகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை எமது கடந்தகால வரலாற்று––வாழ்வனுபவங்களை ஒரு தடவை இரைமீட்டுப் பார்த்தோமானால் இலகுவாகப் புரிந்து கொள்ளமுடியும். ஒரு சாதிக்குள்ளேயே இடம்பெற்ற முரண்பாடுகள்–மோதல்களுக்கான தீர்ப்புகள் ஊர் ஊருக்கெதிரான முரண்பாடுகளின் தீர்ப்புகள் சமய முரண்பாடுகளுக்கான தீர்ப்புகள் பிரதேசங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தீர்ப்புகள் பிராந்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தீர்ப்புகள் யாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்த நீதி–நியாய–தர்ம அளவுகோல்கள் வித்தியாசமாக–வேறுபட்டவையாகவே அமைந்திருந்து வருவதைக் காணமுடியும். சுதந்திரம் அடைந்த பின் அதன் அரச கட்டமைப்பின் கீழ் அதனுடைய சகல அனுகூலங்களையும் அனுபவித்து வந்த தமிழர் தலைவர்களுக்கு

1. மலையக மக்கள் வாக்குரிமை மறுக்கப்பட்ட கையோடு நாட்டுரிமையும் பறிக்கப்பட்டபோது அது அநீதியாக காணப்படவில்லை

2. கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டு குடியேற்றங்கள் இடம்பெற்றபோது அது அநீதியாக தென்படவில்லை.

3. 1971ல் சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியின் போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் கண்ணில் படவேயில்லை. அவற்றின் மத்தியில் அழகுராணி மன்னம்பெரிய கொடூரமான சித்திரவதைகள்–பாலியல் பலாத்கார வன்முறைகள் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்பட்டு நிர்வாணமாக வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு பட்டப் பகலில் நட்டநடு வீதியில் வைத்துச் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டது கூட அவர்களது நெஞ்சைத் தொடவில்லை.

4. 1972 முதல் வட–கிழக்கில் பழி தீர்க்கும் கொலைகள் கொள்ளையடிக் கொலைகள் இடம்பெற்றபோது அவைகள் அநியாயமானது–மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டது என்றில்லாமல் மறைமுகமாக நியாயமாக்கப்பட்டது.

5. 1978ல் புலிகள் தடைச் சட்டம் அதனைத் தொடர்ந்து வந்த பயங்கரவாத தடைச் சட்டம் முதற் கொண்டு 1983க் கலவரம் வரைக்குமான இடைக்காலத்தில் நடைபெற்ற கொலைகள்–கைதுகள்––சிறையில் சித்திரவதைகள் முதலியவற்றுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் என்ற அடிப்படையில் செயற்படாமல் அவற்றைத் தங்களின் அரசியல் லாபங்கள் ஆக்கிக்கொண்டிருந்தார்கள்.

6. 1983யூலை இனக் கலவரங்களை அடுத்து கொள்ளை ஆதாரங்களுடனும்––கொள்கை அடிப்படையிலும்––சாதிப் பார்வைகளுடனும் இயக்கங்கள் கட்டியமைக்கப்பட்டு உள்ளியக்கக்––பிற இயக்க–பொது மக்கள் கொலைகள் இடம்பெற்றபோது தவிர்க்கமுடியாதவையென நியாயப்படுத்தினோம். உலக பல நாடுகள் சட்டப்படியான கொலைத் தண்டனை முறையை மனித அடிப்படை உரிமைகள் காரணமாக ரத்துச் செய்து கொண்டுவரும் ஒரு கால காலகட்டத்தில் "அவரைப் போடத்தான் வேணும்–போட்டாத்தான் திருந்துவினம்" என்ற "தமிழர் நீதியுடன்" கண்டபாட்டில் போட்டுத் தள்ளினோம். போட்டுத் தள்ளுவதற்கான நிதியையும் தாராளமாக வழங்கினோம். இந்த "தமிழர் நீதி" என்பது சாதியின் அடிப்படையிலிருந்தே தோன்றியது.

7. கடந்த மூன்று சகாப்த காலத் தமிழர்களின் தனிநாட்டுக்கான விடுதலைப் போரில் சாதி ஒழிக்கப்பட்டிருந்தது––அடக்கி வைக்கப்பட்டிருந்தது–மறைத்து வைக்கப்பட்டிருந்தது அல்லது தடை செய்யப்பட்டிருந்தது என்றெல்லாம் விளக்கங்கள் தரப்படுகிறது. ஆனால் 1989ல் ரஜனி திரணகம "முறிந்தபனையில்"(பக்.37) கூறியபடிதான். அவ்வாறு சாதிகளை வகைப்படுத்தியோர் மகாபாரதத்தின் புலமை பெற்றிருந்தனர்.

**தொடர்ச்சி 14 பக்கத்தில்**





படிப்பகம்

**மற்றொரு** நாட்டின் பிரஜாவுரிமையைக் காரணம் காட்டி, இலங்கையில் பிறந்த ஒருவரின் பிரஜாவுரிமையை மறுக்கின்றதான மனிதவுரிமை மீறலில் அரசு ஈடுபடுகின்றது. பிறந்த மண்ணின் மீதான பிரஜாவுரிமையை மறுப்பது, அடிப்படை மனிதவுரிமை மீதான மீறலாகும். இதற்கு எதிரான போராட்டமே தோழர் குமார் குணரத்தினத்தை நாடு கடத்துவதற்கு எதிரான போராட்டமாகும். இது புலம்பெயர்ந்ததனால் இலங்கை பிரஜாவுரிமை மறுக்கப்படும் அனைவருக்குமான போராட்டமும் கூட. கொண்டு மக்களை ஒடுக்குகின்றது.

மனிதனை வர்க்கரீதியாகப் பிரிக்கும் சட்டம், வர்க்க வேறுபாட்டை பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆட்சிக்கு ஆட்சி, நாட்டுக்கு நாடு தொடங்கி எங்கும் முரண்பட்ட சட்டங்கள் அனைத்தும் மனிதனை மனிதனாக வரையறுக்கும் பொது சட்டங்களானதல்ல. மாறாக மனிதனை மனிதன் மிதிக்கும் சட்டங்களாகும்.

பிறந்து புலம்பெயர்ந்த பெற்றோருக்கே பிரஜாவுரிமையினை மறுக்கும் இலங்கை அரசிடம், அவர்களின் குழந்தைகளின் பிரஜாவுரிமையினை பெற்றுக்கொள்வது என்பது பாரிய மக்கள் போராட்டமின்றி சாத்தியமில்லை.

குறிப்பாக இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளையும் மற்றும் அவர்களின் குழந்தைகளையும் நாடற்றவராகி இருக்கின்றனர். மேற்குநாடுகளில் குறிப்பிட்ட காலம் வாழ்ந்தால் அந்த நாட்டின் பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ள முடியும். இந்த வகையில் பலர் அந்த

# பிரஜாவுரிமை மறுத்தல் அடிப்படை மனிதவுரிமை மீறலாகும்

இலங்கை அரசின் தொடர்ச்சியான பல்வேறு மனிதவுரிமை மீறல்களில் இதுவுமொன்று. 1948 இல் மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறித்து, இலட்சக்கணக்கில் நாட்டை விட்டு துரத்திய வரலாற்றில் மற்றொரு அத்தியாயம். இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட போது, பிறந்த மண்ணின் மீதான பிறப்புரிமையை மறுப்பதாக நீடிக்கின்றது. சர்வதேச மனிதவுரிமை கொள்கைகளுக்கும், அதன் பொதுநடைமுறைக்கும் விரோதமானதே இலங்கையின் பிரஜாவுரிமைச் சட்டம்.

பிறந்த மண்ணின் மீதான உரிமையே, உலகில் பல நாடுகளின் பிரஜாவுரிமையாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றது. அதேபோல் சர்வதேச விமானப் பயணத்தின் போது பிறப்பவர்களுக்கு சர்வதேச பிரஜாவுரிமை என்று, உலகின் மனிதவுரிமைக் கோட்பாடுகள் இருக்கின்றது. இதற்கு முரணாக பிறப்புரிமையை மறுத்ததன் மூலம் இலட்சக்கணக்கில் மலையக மக்கள் பிரஜாவுரிமை இழந்தது போல், இன்று புலம்பெயர்ந்த மக்கள் பிரஜாவுரிமையை இழந்து நிற்கின்றனர்.

தோழர் குமாரை நாடுகடத்துவதற்கு எதிரான போராட்டம், அடிப்படையான பிறப்பு உரிமையைக் கோரி நிற்கின்றது. முக மாற்றம் மூலம் ஆட்சிக்கு வந்துள்ள அரசினை நோக்கி, சட்டரீதியாகவும், மக்களை அணிதிரட்டும் வீதிப் போராட்டங்கள் மூலமும் இன்று முன்னெடுக்கப்படுகின்றது.

### பிறந்த மண்ணில் வாழ முடியாமல் நாட்டை விட்டு வெளியேறுவது ஏன்?

1. நாட்டின் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளும், உயிர் வாழ முடியாத சட்டவிரோதமான ஜனநாயக விரோதமான அரசியல் சூழலே நாட்டை விட்டு தப்பிச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றது

2. சொந்த மண்ணில் உழைத்து வாழ முடியாதளவுக்கு நவதாராள பொருளாதாரம் உழைப்பில் இருந்து அகற்றுகின்ற சூழலில், மக்கள் பிழைப்பு தேடி நாட்டை விட்டுச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றது.

இந்த இரண்டு பிரதானமான காரணங்களுமே பிறந்த மண்ணில் இருந்து மனிதர்களை அகற்றுகின்றது. இலங்கையில் இருந்து அண்ணளவாக 40 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இலங்கைக்கு வெளியில் வாழ்கின்றனர். நாட்டை ஆளும் வர்க்கங்களும், அதைப் பாதுகாக்கின்ற அரசுகளும் மனிதர்கள் வாழ்வதற்கான அடிப்படை மனிதவுரிமைகளை மறுக்கின்றதன் காரணமாகவே, மக்கள் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

### பிறந்த மண்ணில் வாழும் உரிமையை மறுப்பது எது?

நாட்டை விட்டு வெளியேறிவர்களை, மீண்டும் பிறந்த மண்ணுக்கு திருப்பி வருவதை தடுப்பது நாட்டின் ஜனநாயக விரோத சூழலும், மக்கள் விரோத சட்டங்களுமே. சட்டங்கள் அடிப்படை மனிதவுரிமையை மறுதலிக்கின்ற அதேநேரம், அது ஜனநாயக விரோதமானதாகவும் இருக்கின்றது.

மனிதர்கள் வாழ்வதற்கான வாழ்வியல் போராட்டங்கள் மீது, அவர்கள் விரும்பாத தெரிவுகளை மக்கள் விரோத அமைப்புத் திணித்து விடுகின்றது. அதையே தமது சட்டங்களாக வரையறுத்து, சட்டத்தை புனிதமானதாகக் காட்டி விடுகின்றது. இந்த சட்டங்களை ஒழுகுவதற்கும், அதை மீறும் போது ஒடுக்குவதுமாக, சட்டங்கள் மாறிவிடுகின்றது. பிறந்த மண்ணின் மீதான உரிமையை மறுப்பது, அதற்கு சட்டங்களைக் கொண்டு தடுப்பதானது, அடிப்படை மனிதவுரிமை மீறலாக இருப்பதை சட்டத்தின் ஆட்சியாக முன்தள்ளுகின்றனர்.

இந்தச் சட்டங்களுக்கு அடிப்படையாக இருப்பது, மனிதனை மனிதன் ஒடுக்குவதாகும். சட்டங்கள் சாதி, பால், இனம், நிறம்…, சார்ந்ததாகவும், வர்க்கம் சார்ந்ததாகவும் இருக்கின்றது. சட்டம் மனிதனை முதன்மைப்படுத்துவதற்கு பதில், குறுகிய அடையாளத்தையும், செல்வத்தையும் அடிப்படையாகக்




இந்த வகையில் மனிதனை மனிதனாக மதிக்காத ஒழுக்கங்கள், அறங்கள் தொடங்கி நீதி வரை, அனைத்தும் மனித வாழ்வையும், மனித உரிமைகளையும் மறுக்கின்றதாக இருக்கும் அதேநேரம் அதுவே சட்டங்களாகவும் இருக்கின்றது.

### குமாரின் நாடுகடத்தல் அடிப்படை மனிதவுரிமைக்கு எதிரானது

குமார் குணரத்தினம் நாடுகடத்தல் என்பது வெறும் குமார் சார்ந்த விவகாரமல்ல. இலங்கையில் பிறந்து, ஏதோ ஒரு காரணத்தினால் நாடு கடந்து வாழும் அனைவரதும் அடிப்படை உரிமை சார்ந்த விவகாரம். பிறந்த மண்ணின் மீதான உரிமையை மறுப்பது, அதை பிரஜாவுரிமை விவகாரமாக குறுக்குவது அடிப்படை மனிதவுரிமைக்கே எதிரானது.

ஒரு மண்ணில் பிறந்த ஒருவனுக்கு அந்த மண்ணில் வாழும் உரிமையை கேள்விக்கு உள்ளாக்கி, இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரமாக குறுக்க முடியாது. ஒரு மனிதன் தான் பிறந்த மண்ணின் மீதான பிரஜாவுரிமையை கொண்டிருப்பதை மறுக்கும் போது, அந்த நாட்டு அரசு சட்டவிரோமானதாகவும், ஜனநாயக விரோதமானதாகவும மாறி விடுகின்றது.

### இரட்டைப் பிரஜாவுரிமை என்பது மோசடி

இலங்கையில் பிறந்த ஒருவரின் அடிப்படை பிரஜாவுரிமையை மறுத்தபடி, அதைப் பெறுவதற்கு இரட்டைப் பிரஜாவுரிமை சட்டம் என்பது மோசடி. இலங்கையில் பிறந்தவரிடம் இரட்டைப் பிரஜாவுரிமை மூலம் அதைக் கோரக் கோருவதும், அதைப் பணத்தைக் கொண்டு வரையறுப்பதும் அப்பட்டமான மனிதவுரிமை மீறலாகும்.

1.இலங்கையில் பிறந்த ஒருவரிடம், இரண்டாவது பிரஜைவுரிமையாக இலங்கை பிரஜாவுரிமையை முன்வைப்பது அப்பட்டமான மோசடியும், மனிதவுரிமை மீறுலுமாகும்.

2.அரசு மறுக்கும் பிரஜாவுரிமையைப் பெற பெருந்தொகை பணத்தைக் கோருவதானது, வர்க்க ரீதியான சிலருக்கான பிரஜாவுரிமைச் சட்டமாகும்.

3.பணத்தைக் கொடுத்து பிரஜாவுரிமையை வாங்கும் போது, அதை விசாரணைக்கு உள்ளாக்குவது, ஜனநாயக விரோதத் தன்மையை முதன்மையாக்கி அதை அமுல் செய்வதாகும்.

இந்த வகையில் ஜனநாயக விரோதத் தன்மை கொண்டதும், அடிப்படை மனிதவுரிமை மீறலை அடிப்படையாகக் கொண்டதுமே, இரட்டைப் பிரஜாவுரிமைச் சட்டம்.

ஒரு குறித்த நாட்டில் பிறக்காதவருக்கு அந்த நாட்டில் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவது என்பது, உலகின் பொது நடைமுறை. அதை தலைகீழாக்கி இருக்கின்றது இலங்கை அரசு. இலங்கையில் நாட்டு பிரஜாவுரிமையை பெற்றனர். இந்த அடிப்படை மனிதவுரிமையானது, ஜனநாயகத்தின் செயல்பூர்வமான வெளிப்பாடாகும்.

இப்படி இருக்க இந்தியா சென்ற அகதிகள் நாடற்றவர்களாகவும், இலங்கைக்கு மீள திரும்ப முடியாதவர்களாகவும், அவர்கள் குழந்தைகளை அடிப்படைவுரிமைகள் அற்றவர்களாகவும் மாற்றி இருக்கின்றது.

இந்த வகையில் இலங்கையின் பிரஜாவுரிமைச் சட்டத்தை, குமாரை நாடுகடத்துவற்கு எதிரான போராட்டம் அரசியல் ரீதியாக முதன் முதலாக கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றது.

### போராட்டமும் அதன் வீச்சும்




தொடர்ச்சியாக இலங்கையின் பல பாகங்களிலும், பிரிட்டன் பிரான்ஸ், இத்தாலி நாடுகளிலுள்ள இலங்கை தூதராலயங்கள் முன்பாகவும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதே நேரம் சட்ட ரீதியான போராட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனநாயகத்தின் பெயரில் முகமாற்றம் நடந்த போதும் எந்த மாற்றமின்றியும், அதேநேரம் தனது சொந்த 100 நாள் திட்டத்தை நடைமுறையாக்குவதையும் கேள்விகுள்ளாகி வருகின்றது மைத்திரி அரசு. முகமாற்றத்துக்கு வாக்களித்த மக்கள், மீண்டுமொரு முறை ஏமாற்றப்பட்டு இருக்கின்றனர். தேர்தலும், தேர்தலுக்கு பின்னான புதிய ஆட்சியும், கடந்தகாலம் போல் மக்களுக்கு எதிரானதாக மாறிவிடுவதே எதார்த்தமாகி இருக்கின்றது.

தேர்தலுக்கு முன்பாக இந்த உண்மையைச் சொன்ன இடதுசாரிய முன்னணி, தேர்தலுக்கு பின் முகமாற்றம் மூலம் முன்வைத்த ஜனநாயகக் கோரிக்கையை அமுல்படுத்தக் கோரி மாற்றத்தை விரும்பும் மக்களுடன் இணைந்து போராட்டத்தை தொடங்கி இருக்கின்றது. அத்துடன் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான போராட்டங்களை ஒருங்கிணைத்து வருகின்றது.

இந்த வகையில் கல்வியை தனியார் மயமாக்குவதற்கு எதிராகவும், மருத்துவத்தை பன்னாட்டு மருந்து கொம்பனிகளிடம் தாரை வார்ப்பதற்கு எதிராகவும், மக்களை கண்காணிக்கும் புதிய அடையாள அட்டை முறைக்கு எதிராகவும், பிறந்த மண்ணில் வாழும் அடிப்படையான பிறப்புரிமை…. என பல்வேறு தளத்தில் போராட்டங்களை தொடங்கி இருக்கின்றது. இந்த அடிப்படையில் குமாரை நாடுகடத்துவற்கு எதிரான போராட்டமும் அரசியல் ரீதியாக இதற்குள் அடங்கி விடுகின்றது. மனிதவுரிமைக்கானதும், ஜனநாயகத்துக்குமானதுமான மக்கள் போராட்டம் மூலம், மக்கள் தங்கள் உரிமைகளை வெல்ல முடியும் என்பது தேர்தலுக்கு பின்பான அரசியல் எதார்த்தமாகி இருக்கின்றது.



**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# வடபகுதியில் 1966 களில் இருந்து 1970 வரை மார்க்ஸிஸ்ட் லெனிஸ்ட்டுக்களின் போராட்டங்களும் சாதனைகளும்!

**சென்ற இதழ் தொடர்ச்சி**

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்தை அடுத்து, 1966ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ம் திகதி சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என்ற கோஷத்துடன் யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் இருந்து ஆரம்பமாகிய சட்டவிரோத ஊர்வலம், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை தாண்டும் பொழுது, வடபகுதி பொலிஸ் நிலையங்களில் இருந்து திரட்டப்பட்ட பொலிஸார் ஊர்வலத்தினர் மீதாக பலமான தாக்குதல் நடாத்தினர்.



இதற்கும் மேலதிகமாக கலகம் அடக்கும் பொலிஸார் பெட்டன்பொல்லு மற்றும் கண்ணீர்புகைக்குண்டு தாக்குதல் மேற்கொண்டனர். பதிலுக்கு ஊர்வலத்தினர் கற்களாலும், கொடிதடிகளாலும் பொலிஸாரை திருப்பித் தாக்கினர். பொலிஸார் பிரம்பு கேடயங்களால் ஊர்வலத்தினரை சிதறடித்தனர். சிதறடிக்கப்பட்ட ஊர்வலத்தினர் மீண்டும் ஒன்றிணைந்து மௌன ஊர்வலமாக யாழ் கோட்டை மைதானத்தை அடைந்தனர். ஊர்வலத்திற்கு தலைமைதாங்கிய தோழர்கள் தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

யாழ் கோட்டை மைதானத்தை அடைந்த ஊர்வலத்தினர் அங்கு பொதுக்கூட்டத்தை நடத்தினர். அங்கு (புரட்சிகர) கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுசெயலாளர் தோழர் நா. சுண்முகதாஸன் உரையாற்றுகையில் இனிவரும் நாட்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு சொட்டுக்கண்ணீரும் ஒவ்வொரு வெடிகுண்டாக மாறும் என்றார். அதேபோல் 1966 ஒக்ரோபரில் இருந்து 1970ஆம் ஆண்டு வரை வடபகுதி எங்கும் வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தது. வடபகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்சாதியினருடன் ஒரேவாங்கில் அமர்ந்து ஒரேமேசையில் சமத்துவமாக உணவு அருந்தவும், உயர்சாதியினருக்கு தேனீர் வழங்கும் டம்ளரில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தேனீர் வழங்கும் உரிமையையும், சகல தேனீர்க்கடைகள், போஷனசாலைகள், ஹோட்டல்கள் அனைத்திலும் வாழை இலைகள் மற்றும் உயர்சாதியினருக்கென வைத்திருக்கும் தட்டுகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கும்படியும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு என வைத்திருந்த கறள் பிடித்த பேணிகள், தட்டுகள் அனைத்தும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனக் கோரி வடக்கிலுள்ள சகல பொது போஷனசாலைகள், தேனீர்க்கடைகள், ஹோட்டல்களில் போராட்டங்களை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆரம்பித்தனர். சில தேனீர்க்கடைகள், ஹோட்டல்கள், போஷனசாலைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவமாக திறந்து விடப்பட்டது. அதேவேளை பல தேனீர்க்கடைகள், ஹோட்டல்கள், போஷனசாலைகள் சமத்துவமாக திறந்துவிடப்படாததுடன், தேனீர்க்கடை பிரவேசம் செய்தவர்களை துரத்தியடித்தனர்.

1967இல் இவ்வாறான தாக்குதல் சங்கானையில் வலுவடைந்தது. இருபகுதியினரும் மிக மோசமாக மோதிக்கொண்டனர். இம்மோதல் சங்கானை கிராமங்களுக்கும் பரவியது. சங்கானை சந்தை, புளியடி, நிச்சாமம், சண்டிலிப்பாய், சுளிபுரம், போன்ற ஊர்களுக்கும் பரவியது. இதனால் சங்கானையும் அதனை அண்டிய பிரதேசங்களும் யுத்தபூமியாக மாறியது.


1967 ஒக்ரோபர் 21ஆம் திகதி இப்போராட்டத்தை விரிவுபடுத்த கட்சியின் தலைமையில் வெகுஜனஇயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அது தான் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம். இதன் தலைமையில் தேனீர்க்கடை திறப்புப் போராட்டமும், புகழ் பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், பன்றிதலைச்சி அம்மன் கோவில் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியும், தாழ்த்தப்பட்ட தமிழர்களும், முற்போக்காளர்களும் பெருமளவில் பங்கேற்றனர். இப்போராட்டம் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, அதேபோல் சாவகச்சேரி, கொடிகாமம், பளை போன்ற நகர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பல இடங்களில் சமாதானமாக தேனீர்க்கடைகள் சமத்துவமாக திறந்துவிடப்பட்டது. நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை ஆகிய இடங்களில் பிற்போக்குவாதிகள் மறுதலித்து தாக்குதல் நடத்தினார்கள். இதில் மோசமான தாக்குதல்கள் சங்கானையிலுள்ள நிச்சாமம் என்ற கிராமத்தை சுற்றி நடந்தது. இதுபற்றி யூ.என்.பி ஆட்சியில் பாராளுமன்றத்திலும் விவாதங்கள் நடந்தன முன்னாள் கம்பஹா எம்.பி அமரர் எஸ்.டி.பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சி எம்.பி. மார்களிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி. அமரர் அ.அமிர்தலிங்கம் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் சங்கானையில் ஒரு சங்காயை (சீனநகர்) உருவாக்க முயற்சிக்கிறார்கள் அதை அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும் எனக்கூறி தமிழரசுக் கட்சியின் பிற்போக்குத்தனத்தையும், சாதிவெறியர்களுக்கான ஆதரவையும் வெளிப்படுத்தினார். சங்கானை பிரதேச தோட்டங்களிலும், வயல்களிலும் இருபகுதியினராலும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாமல் போனது. தற்போது கண்ணிவெடி போன்று அன்று நாட்டு வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டிருந்தது. இதனால் இருபகுதியினரதும் விவசாயம் தடைப்பட்டது.

பொதுக்கோயில்களில் உயர்சாதி தமிழர்கள் வழிபடும் தூரம்வரை, தாழ்த்தப்பட்ட தமிழர்கள் உட்சென்று கடவுளை வணங்க அனுமதிக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட தமிழர்கள் கோயிலின் வெளியில் நின்றுதான் கடவுளை கும்பிடமுடியும். இந்த அநீதியை எதிர்த்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், பெரிய கோவிலான மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், பன்றித்தலைச்சி அம்மன் கோவில் ஆகிய கோவில்களில் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் உட்சென்று கடவுளை கும்பிட அனுமதிக்கும்படி கோவில் நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோள் கோவில் நிர்வாகத்தால் நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தினர் ஆலயப்பிரவேசம் செய்தனர். ஆலய நிர்வாகம் கோவிலைப் பூட்டியது உற்சவ காலத்தில் மட்டும் பொலிஸ் பாதுகாப்புடன் கோவிலை திறந்து நடாத்தினார்கள். வெகுஜன இயக்கத்தின் தலைமையில் தாழ்த்தப்பட்ட தமிழர்கள் மீண்டும் ஆலயப்பிரவேசம் செய்தார்கள். கோவில் நிர்வாகம் பொலிசாரின் உதவியுடன் தடுத்து நிறுத்தியது. இவ்வாறு மூன்று வருடங்கள் நடைபெற்றது. மூன்றாவது வருடம் நடைபெற்ற திருவிழாவின் போது பொலிஸ் தடையையும் மீறி தாழ்த்தப்பட்ட தமிழர்கள் ஆலயப்பிரவேசம் செய்ய முயன்றார்கள். இதனால் பெரும்கலவரம் மூண்டது, பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிச் சூடுகளும் நடைபெற்றது, வெடிகுண்டுகளும் வெடித்தது. பலர் காயப்பட்டார்கள். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிரதேச தலைவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அவர்கள் மீதாக வழக்கு தொடரப்பட்டது. இவ்வாறான போராட்டங்கள் மூலமாகத்தான் மேற்படி இரண்டு கோவில்களும் சமத்துவமாக திறந்துவிடப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் காலம் சென்ற தமிழரசுக் கட்சி தலைவரின் தொகுதிக்கு உட்பட்ட பிரதேசமாகும். அவர் முயற்சித்திருந்தால் தாழ்த்தப்பட்ட தமிழர்களுக்கு அக்கோவிலை சமரசமாக திறந்துவிட்டிருக்க முடியும். ஆனால் அவர் இவ்விவகாரத்தில் மதில்மேல் பூனையாக இருந்துகொண்டார். அதேபோல்தான் சாவகச்சேரி தொகுதியில்தான் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் இருக்கிறது. அத்தொகுதியின் எம். பியாக காலம் சென்ற நவரத்தினம் அவர்கள் இருந்தார். அவர் தமிழரசுக் கடசி எம்.பி, பன்றிதலைச்சி அம்மன் கோவில் பிரவேச போராட்டத்தின் போது அப்போராட்டத்தை சமரசமாக தீர்த்துவைப்பதற்குப் பதிலாக மதில்மேல் பூனையாகவே இருந்து கொண்டார். இதில் இருந்து விளங்கிக்கொள்ளக்கூடிய உண்மைதான் இவர்களும், இவர்களது கட்சியும், இவர்களது கொள்கைகளும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பிரபுத்துவ எண்ணம் கொண்ட முதலாளித்துவ சாதிவெறியர்களின் ஆதிக்கத்துக்கான போராட்டமேயன்றி, சாதாரண தமிழ் மக்களினதும், தாழ்த்தப்பட்ட தமிழர்களினதும் விடுதலைக்கான போராட்டம் அல்ல என்பதாகும். இந்தக் கொள்கையின் தொடர்ச்சிதான் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கொள்கையாகும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், பன்றித்தலைச்சி அம்மன் கோவில் இரண்டும் சமத்துவமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட்டதைத் தொடர்ந்து, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவில் போன்ற பிரசித்திபெற்ற கோவில்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு சமரசமாக திறந்துவிடப்பட்டன.

மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக சங்கானை பிரதேச மக்கள் குறிப்பாக நிச்சாம கிராம மக்கள் சாதிவெறியர்களினதும், பிற்போக்காளர்களினதும் சுற்றிவளைப்புக்குள் இருந்தும் விட்டுக்கொடுக்காத போராட்டத்தினூடாக தேனீர்க் கடைகளில் சமத்துவ உரிமையை வென்றெடுத்தனர். அத்தோடு சிலர் தோட்ட நிலங்களின் உரிமையையும், குத்தகை உரிமையையும், கூலி உயர்வுகளையும் வென்றெடுத்தனர். சமகாலத்திலேயே அச்சுவேலியிலும், நெல்லியடியிலும் தேனீர்க்கடைப் போராட்டம் வெற்றி பெற்றது. அச்சுவேலிப்பகுதியின் பிரதான சாதிவெறியர்கள் சிலரின் கொட்டங்கள் அடக்கப்பட்டதும், அச்சுவேலி தேனீர்க்கடைகள் சமத்துவமாக திறந்து விடப்பட்டதும் நெல்லியடி தேனீர்கடைகள் அருகில் இருந்த கன்பொல்லை மக்களின் விட்டுக்கொடுக்காத தொடர்ச்சியான போராட்டத்தாலும், சாதிவெறியர்கள் அடக்கப்பட்டதாலும், அப்பகுதியில் இருந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபனபலத்தாலும் தேனீர்க்கடைகள் அனைத்தும் சமத்துவமாக திறக்கப்பட்டது. இப்போராட்டத்தின்போது 12பேர் தியாகிகளானார்கள். எதிரிகள் தரப்பில் 13பேர் கொல்லப்பட்டனர்.

மொத்தத்தில் 1966 ஒக்ரோபரில் இருந்து 1970 வரை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தாழ்த்தப்பட்ட



தமிழ் மக்களையும் வடபிரதேசத்தின் முற்போக்காளர்களையும் திரட்டி 4ஆண்டுகள் நடாத்திய தொடர்ச்சியான போராட்டங்களினூடாக அனைத்து கோவில்களும், அனைத்து தேனீர்க்கடைகளும் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு, உயர்சாதி தமிழர்களுக்கு சமமான உரிமையை பெற்றுக்கொடுத்தது. இந்த வெற்றிக்குரிய புகழ் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதன் வாலிபர் சம்மேளனத்துக்கும், தீண்டாமை ஒழிப்பு இயக்கத்துக்கும் உரியது. இப்போராட்டத்திற்கு பலதுறைகளைச் சேர்ந்தவர்களும் தமது பங்களிப்பை செய்துள்ளனர். எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், நாடக எழுத்தாளர்கள், நாடகக்கலைஞர்கள் என பலதுறைகளைச் சார்ந்தவர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். நிச்சாமம் மக்களைப்பற்றி பாடிய ஒரு கவிஞன் **எச்சாமம் எதிரி நுழைந்தாலும் நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும்** என்றான். மற்றொரு கவிஞன் ஆற்றல்மிகு கரத்தில் **ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்துக்கான வழி மாற்று வழி ஏதுமில்லை** எனப் பாடினான். இக்காலத்தில் தான் தோழர் டானியல் அவர்களின் **பஞ்சமர்** நாவல் வெளிவந்தது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலைப்பற்றிய புகழ்பெற்ற நாடகமான **கந்தன் கருணை** என்னும் நாடகம் நாடுபூராவும் மேடையேறி மக்களின் அமோக ஆதரவைப் பெற்றது. இது போன்ற அற்புதங்கள் நாட்டில் நிகழ்ந்தது.

**தொடர்ச்சி 15 பக்கத்தில்**





படிப்பகம்

# மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டுமாயின்

இலங்கையின் ஜனாதிபதி ஆட்சிமுறையானது தனி ஒரு நபருக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்குகின்ற ஒன்றாக இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் மகிந்த ராஜபக்சாவினால் இலகுவான அவரது குடும்ப உறவினர்களை முக்கிய பதவிகளில் அமர்த்த முடிந்ததுடன் ஒரு சர்வாதிகாரி போல செயற்பட முடிந்தது. ரகசிய குண்டர்களை வைத்து தனக்கு எதிரான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மாணவர்களை கொலை செய்தும் கொலைமிரட்டுதலுக்கூடாகவும் ஜனநாயக உரிமைகளை பறிக்க முடிந்தது. எதிலும் ஊழலும் மக்களின் பணத்தில் சொந்த சுகபோக வாழ்வும் இடம்பெறுகின்றது என எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினர். உண்மையும் அதுவாகவே இருந்தது. சாதாரண பொது மக்கள் அன்றாட வாழ்விற்காக உணவுக்காக மிகவும் கஸ்டப்படுகின்ற நிலையிலேயே இருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் படுபாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மகிந்த குடும்பமும் உறவினர்களும் அரசில் இருந்த மந்திரிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேளிக்கைகளிலும் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டு உல்லாச வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர். மக்களின் பணத்தை தமது பணமாகவும் நாட்டின் வளங்களை தமது வளங்களாகவும் மாற்றிக் கொண்டிருந்தனர். சிறுபான்மை மக்கள் மீது இராணுவம் மற்றும் பௌத்த மத வெறியர்களை தூண்டிவிட்டு அச்சுறுத்தி தன்னை சிங்கள இனத்தினதும் பௌத்த மதத்தினதும் காவலனாக காட்டி இனவாதம் மதவாதத்திற்கு பலியாகிப்போன பெரும்பான்மை இனமக்களை தன்பக்கம் இழுத்து வைத்திருக்கும் வேலையினை மிகவும் திட்டமிட்டு நடாத்தி மகிந்த சர்வாதிகார அரசு இயங்கியது. ஜனநாயகத்தை நேசித்தவர்களும் சிறுபான்மை இனமக்களும் அன்றாட வாழ்வுக்காக அல்லல்பட்ட மக்களும் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர். தனது செல்வாக்கு சரிந்து வருவதனை நன்குணர்ந்த மகிந்தா சாத்திரிகளை நம்பி அவர்களின் வார்த்தைப்படி தனது பதவிமுடிவுறும் காலத்திற்கு முன்னதாகவே புலிகளை அழித்தொழித்த தன்னை மக்கள் மீண்டும் வெற்றிகொள்ள வைப்பார்கள் என்ற தப்புக்கணக்கு காரணமாக ஜனாதிபதி தேர்தலை அறிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் பல எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, இந்த ஜனாதிபதி ஆட்சிமுறையானது தனிநபரிடம் அதிகாரங்களை குவித்து வைத்திருக்கின்றது. இதன் காரணமாகத்தான் மகிந்தாவினால் குடும்ப சர்வாதிகார ஆட்சியாக இலகுவாக செயற்பட முடிகின்றது. எனவே எமது முதலாவது செயற்திட்டம் ஜனாதிபதி ஆட்சிமுறையினை ஒழித்து மீண்டும் பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குவதும், நாட்டின் சகல மக்களிற்கும் மகிந்த குடும்பத்தினால் மறுக்கப்பட்ட ஜனநாயகத்தினை உறுதி செய்வதும் சிறுபான்மை இனமக்களுக்கு ஒரு நியாயமான தீர்வினை வழங்குவதும் என



கூறி மைத்திரி சிரிசேனாவை பொது வேட்பாளராக நிறுத்தினர். இதற்காக 100 நாள் வேலைத்திட்டம் ஒன்றினையும் அறிவித்து தேர்தலில் சிறுபான்மை இன மக்களின் அமோகமான வாக்குகளை பெற்று மைத்திரி சிரிசேனா புதிய ஜனாதிபதி ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பாராளுமன்ற தேர்தலை குறிவைத்து காய்கள் நகர்த்தப்படுகின்றன.

இந்த எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்றிணைத்ததிலிருந்து திரைமறைவில் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள புலிப் பினாமி அமைப்புக்கள் ஏனைய அரசியல் செயற்பாட்டாளர்கள் மகிந்த அரசினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி ஊடகவியலாளர்கள் ஈறாக பலரை ஒன்றிணைத்து மைத்திரிக்கு ஆதரவளிக்க வைத்ததிலிருந்து மைத்திரியை தேர்தலில் வெல்ல வைத்ததன் பின்னணியில் அமெரிக்கா மற்றும் மேற்குலக வல்லரசுகள் இருந்தன என்பதே உண்மை. இந்த வல்லரசுகள் பின்னணியில் இருந்து செயற்பட்டது இலங்கையில் பொது மக்களிற்கு ஜனநாயகத்தை உறுதி செய்வதற்காக என்று நாம் எம்மை ஏமாற்றிக் கொள்வது மடைத்தனமாகும். இந்த மேற்குலக வல்லரசுகளிற்கு இலங்கையை தமது விஸ்தரிப்புவாத நோக்கில் இராணுவ முக்கியஸ்தலமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய தேவை இன்று இருக்கின்றது. இது குறித்து விரிவாக வேறு ஒரு ஆக்கத்தில் நாம் பார்க்கலாம். தமிழ் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்குரிய பிரச்சனைகளை பற்றி பொது வேட்பாளரிடம் கோரிக்கைகளை எதனையும் முன்வைக்காது நிபந்தனை இன்றி ஆதரவளித்ததும் தமது மேற்குலக எசமானர்களின் கட்டளைக்கு இணங்கவே ஆகும்.

மைத்திரி ஜனாதிபதி பதவி ஏற்ற அடுத்த நாளே அமெரிக்க ஜனாதிபதி போன்று தனது பாதுகாவலர் மற்றும் பிரத்தியேக உடல் பயிற்சியாளர்களுடன் கொழும்பு வீதிகளில் ஓடி நாட்டின் சர்வவல்லமையும் கொண்ட தான் ஆரோக்கியமாக இருப்பதாகவும் தானே இலங்கையின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நபர் என்பதனையும் உறுதிப்படுத்தினார். அடுத்த சில நாட்களில் ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்படாது சில அதிகாரங்கள் மட்டுமே குறைக்கப்படும் என அறிவித்தார். தேர்தலுக்கு முன்னர் அறிவித்த பாராளுமன்றத்திற்கே அதிகாரம் என்பதற்கு முரணான முதலாவது அறிவிப்பு இதுவாகும் அதனைத் தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தலாக. வடக்கு கிழக்கு கொழும்பு உள்ளிட்ட இடங்களில் முப்படையினருக்கு பொலீஸ் அதிகாரம் தொடர்ந்தும் நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக வெளிவந்தது. மேலும் சந்தேக நபர்களை கைது செய்தவுடன் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக 48 மணிநேரம் தடுத்து வைத்திருக்கும் சட்டத்தினை தொடர்ந்தும் நீடித்து வைத்திருக்கப் போவதாகவும் தீர்மானம் போடப்பட்டுள்ளது.

மக்களின் அடிப்படை ஜனநாயகத்தை உறுதி செய்யப்போவதாக தேர்தலுக்கு முன்னர் கூறிய வாக்குறுதிகளை காற்றிலே விட்டுவிட்டு மகிந்த ஆட்சியில் மக்களை அச்சுறுத்தி அடக்க பயன்படுத்திய சட்டங்களை நீடிப்பதனை அவதானிக்கும் போது இவர்கள் யார் என்பது பற்றி நன்கு இனங்கண்டு கொள்ள முடிகின்றது.

இது மட்டுமல்ல தேர்தலுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளை குறி வைத்து கூறப்பட்ட அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுவிப்பு, இராணுவத்தை குறைத்தல், அதிஉயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்களை மீள குடியமர்த்தல் போன்ற வாக்குறுதிகள் பற்றிய எந்த நடவடிக்கையோ செயற்பாடோ இன்னும் கிடையாது. தமிழ் கூட்டமைப்பும் மைத்திரி அரசிடம் இவை குறித்து நெருக்குதல் செய்தது கிடையாது. மாறாக தமிழ் மக்களிடம் வந்து புதிய அரசும் மகிந்த அரசு போன்றே நடக்கின்றது என கூறி தமிழ்மக்களுக்காக தாம் இருப்பது போல் நாடகம் நடத்துகின்றனர்.

அமைச்சர்களோ அரசியல் கைதிகள் என யாரும் கிடையாது புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட மாட்டாது ஆனால் இராணுவம் வடக்கு கிழக்கில் இருந்து வெளியேறாது என கூறிவருகின்றனர். வடக்கு கிழக்கிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அதிகாரத்திலிருந்தவர்களை மாற்றி புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது வெறும் ஆள்மாற்றமே ஒழிய வேறு எந்தவித மாற்றமும் கிடையாது.

தேர்தல் காலத்தில் மைத்திரி அணியினரால்



வழங்கப்பட்ட மற்றுமொரு உறுதிமொழி மகிந்த ஆட்சியில் அச்சுறுத்தல் உயிராபத்து காரணங்களால் புலம்பெயர்ந்த அரசியலாளர்கள் ஊடகவியலாளர்கள் தாம் ஆட்சிக்கு வந்ததும் திரும்பி வந்து அவர்களது நடவடிக்கைகளை தொடர முடியும் என்பதாகும். இலங்கையில் மகிந்த ஆட்சிகாலத்தில் உயிராபத்து காரணமாக பலர் நாட்டை விட்டு வெளியேறி இருந்தனர். தோழர் குமார் குணரத்தினமும் அவ்வாறே அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்த ஒருவர். ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பம் ஒன்றினைப் பயன்படுத்தி இலங்கைக்குள் வந்த அவர் ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி முன்னணி வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். புதிய மைத்திரி அரசு பதவியேற்றதும் தமது தேர்தற்கால வாக்குறுதியை கிடப்பில் போட்டுவிட்டு அவரை அவுஸ்திரேலியாவிற்கு நாடு கடத்துவதில் முனைப்புடன் செயற்படுகின்றது.

தோழர் குமார் குணரத்தினம் அரசியல் காரணங்களினால் உயிராபத்தில் இருந்த ஒருவர் என்பது நாடறிந்த விடயம். மைத்திரி அரசு நாட்டிற்குள் வந்து நிற்கின்ற தோழர் குமாருக்கு இலங்கையில் சுயாதீனமாக அரசியலில் ஈடுபடும் உரிமையினை உறுதி செய்வதன் மூலம் தமது தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றுவதுடன் அரசியல் காரணங்களுக்காக கடந்த மகிந்தா ஆட்சியில் புலம்பெயர்ந்துள்ள அனைவருக்கும் நம்பிக்கை ஒன்றினை அளிக்க முடியும். இதற்கு மாறாக ஜனநாயகம் தமது நண்பர்களிற்கு மாத்திரமே என செயற்படுகின்றது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதனை கிடப்பில் போட்டுவிட்டு மேற்குலக வல்லரசுகளினதும் சீனாவினதும் இலங்கை மீதான நவதாராளவாத முன்னெடுப்புகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றை நிறைவேற்றுவதில் தீவிரமாக செயற்படுகின்றது. மகிந்த அரசும் சீனாவும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கடல் நகரத்திட்டத்திற்கு அவசரம் அவசரமாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குலக முதலீட்டாளர்களின் வருகைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மைத்திரி அரசு அவர்களுடன் ஒப்பந்தங்களை போடுகின்றது. மகிந்த அரசில் தேக்கமடைந்திருந்த நவதாராளவாத பொருளாதாரம் மீண்டும் அதிவேகமாக முன்னெடுக்கப்படவுள்ள சமிக்கைகள் தென்படுகின்றன.

மகிந்தாவுடன் கூடி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கொள்ளை அடித்தவர்கள் எல்லோரும் நல்லவர்களாகி மைத்திரியுடன் ஒட்டிக் கொண்டுள்ளனர் சுதந்திரக் கட்சியை மகிந்தாவிடம் இருந்து மீட்டெடுத்து மைத்திரி சந்திரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். நாட்டை ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இன்று இலங்கையில் ஒரே கட்சி. இந்த உலகில் எந்த நாட்டிலும் இல்லாத புதிய அரசியல் புதிர் இது. கடந்த ஆட்சியில் தேசத்தை கொள்ளையிட்ட குடும்பம் சுதந்திரமாக நடமாடுகின்றது. விசாரணைகள் நடத்துவோம் கமிசன்கள் போடப்போகின்றோம் என கூறுகின்றனர். இது மக்களை ஏமாற்ற சொல்லப்படும் வெற்றுக்கதையே. கடந்த ஆட்சியில் மகிந்தாவுடன் கூடிக் கொள்ளை அடித்த பெரும்பான்மையானோர் மைத்திரி உட்பட புதிய அரசில் இருக்கின்றனர். இது எப்படி சாத்தியமாகும்?

கடந்த ஆட்சி குடும்ப ஆட்சி என குறை கூறிய மைத்திரி இப்போது தனது உறவினர்களை அரச நிறுவனங்களில் முக்கிய பதவிகளில் அமர்த்தியுள்ளார். தேர்தல் காலத்தில் அரசின் பால் வெறுப்படைந்திருந்த மக்களுக்கு பொய் வாக்குறுதிகள் நம்பிக்கைகளை கொடுத்து வாக்குகளை பெற்று பதவிக்கு வந்ததும் வாக்குறுதிகளை மதிக்காமல் தமது சொந்த ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கும் வல்லரசு நாடுகளின் நலன்களிற்குமாக மக்களை காலில் போட்டு மிதிப்பதே வழக்கமான நடைமுறை. மைத்திரியும் இந்த வழக்கத்திலிருந்து மாறுபட்டவராக இருப்பார் என எதிர்பார்ப்பது எமது முட்டாள்தனமாகும்..

மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றம் வேண்டுமாயின் மக்கள் இந்த புளுத்துப்போன அரசியல்வாதிகளை நம்பி தேர்தலில் வாக்களிப்பதனை மட்டுமே தமது ஜனநாயக கடமை என எண்ணுவதனை விட்டு விட்டு இந்த மக்கள் விரோத ஜனநாயக மறுப்பு ஆட்சியாளர்களிற்கு எதிராக மக்கள் நலன்களை உயர்த்தி பிடிக்கின்ற புதிய அரசியல் சக்தி ஒன்றின் கீழ் அணிதிரண்டு போராட வேண்டியது காலத்தின் இன்றியமையாத தேவை.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

ஏம் மக்கள் உயிரை இழந்தனர். உயிரின் உயிரானவரை இழந்தனர். வாழ்வை இழந்தனர். எல்லாப் பக்கமும் வன்முறை சூழ்ந்து கொண்டது. வறுமை சூழ்ந்து வற்றிப் போனது வாழ்க்கை. ஒளித்துப் பிடித்து விளையாடிய குழந்தைகள் கண்டுபிடிக்கப்படாமல் காணாமல் போயினர். பாடிய பாடல்கள் பாதியிலேயே நின்றது போல் வண்ணத்துப் பூச்சிகளாக சிறகடிக்கத் தொடங்கிய வாலிபத்திலேயே வாழ்வை இழந்தனர் நம் பிள்ளைகள்.

இந்த வன்முறைகளிற்கு, தமிழ்மக்கள் மீது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனா வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தை குறைக்க போவதில்லை என்று யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருக்கிறார். ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடி அகற்றப்படவில்லை. பின்பு எதற்காக தமிழ்க்கூட்டமைப்பு மைத்திரி சிரிசேனாவை ஆதரித்தது?. எதற்காக தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிக்கிறது?.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழ் அரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று அனுசரணையான விதத்தில் நடந்து கொள்ள விரும்புகின்றது அமெரிக்கா என்பதைப் புரிந்து கொண்டேன்□. இது மேன்மை தாங்கிய முதலமைச்சரின் மற்றொரு திருவாசகம். வியட்நாமில் கொன்ற அமெரிக்கர் ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் கொல்லும் அமெரிக்கா, அமெரிக்க நிறுவனங்கள் மூலம் உலகம் முழுக்க கொள்ளையடிக்கும் அமெரிக்கா தமிழ்மக்களிற்கு அனுசரணையாக

# மீளா அடிமை உமக்கே ஆனோம்!!!



சிங்கள பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளிற்கு இலங்கை அரச பேரினவாதிகளிடமிருந்து நீதியோ, நியாயமோ என்றைக்கும் கிடைக்கப் போவதில்லை. தமிழ்மக்களை கொன்று குவித்த மகிந்த ராஜபக்ச கும்பல் ஆணைக்குழு ஒன்றை அமைத்து கொலைகாரர்களை கண்டுபிடிக்க போகிறோம் என்று நாடகம் ஆடியது. மகிந்த ராஜபக்சவுடன் பங்குபோடுவதில் ஏற்பட்ட பகை காரணமாக வெளியேற்றப்பட்ட சரத் பொன்சேகா எதிர்க்கட்சி தொடங்கி மகிந்தாவின் ஊழல்களை மக்கள் முன் வைப்பேன் என்று வீர சபதம் இட்டார். ஆனால் தமிழ்மக்களின் இனப்படுகொலையில் மகிந்தாவிற்கும், சரத் பொன்சேகாவிற்கும் எதுவித கருத்து வேறுபாடும் இல்லை. ஆம், தமிழ்மக்கள் சிங்களப் பேரினவாத அரசினால் படுகொலை செய்யப்படவில்லை என்று இரண்டு கொலையாளிகளும் ஒத்த குரலில் சொல்கிறார்கள்.

தமிழ்மக்களை பயங்கரவாதிகளிடம் இருந்து அரசுத்தலைவர் மகிந்தாவும், படைத்தலைவர் சரத் பொன்சேகாவும் காப்பாற்றினார்களாம். இலங்கை இராணுவத்தினால் ஒரு தமிழர் கூட கொல்லப்படவில்லையாம். இறந்த எம் பெண் போராளிகளின் உடல்களின் மீது கூட வன்முறை செய்த இலங்கை இராணுவம் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டதாம். மகிந்தாவும், சரத்தும் சொல்கிறார்கள். இந்த நாய்கள் இத்தனை ஆயிரம் தமிழ்மக்களைக் கொன்று விட்டு நாக்கூசாமல் இப்படி பொய் சொல்கிறார்கள் என்றால் தமிழ்மக்களின் வாக்குகளைப் பொறுக்கிய தமிழ்க்கூட்டமைப்பு கொஞ்சமும் வெட்கம் இல்லாமல் சரத் பொன்சேகாவை, மைத்திரிபால சிரிசேனாவை ஆதரிக்கின்றது.

ஒரு இலட்சத்திற்கும் அதிகமான எமது மக்களின் மரணத்தை ஒன்றுமே இல்லாத விடயம் போல கடந்து போய் இனப்படுகொலையாளிகளை தமிழ் கூட்டமைப்பினர் ஆதரித்தார்கள். தேர்தல் முடிந்து இவர்கள் ஆதரித்த மைத்திரி சிறிசேனா ஆட்சிக்கும் வந்து விட்டார். தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழ்மக்களிற்கு என்ன தீர்வை பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். தேசிய நிறைவேற்று சபை என்னும் அமைப்பில் அரசை ஆதரிக்கும் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அரசியல் அமைப்பு திருத்தங்கள், கடந்த அரசின் ஊழல், சட்டவிரோத நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள், நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது நடைபெற்ற முறைகேடுகள், கொழும்பு மாநகரிலும், வட–கிழக்கு உட்பட நாடு முழுக்க நடைபெற்ற காணிக்கொள்ளைகள் என்பன தொடர்பாக அலசி ஆராயப் போவதாக அறிக்கைகள் விட்டார்கள்.

இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு அனுமதிக்க மாட்டோம் என்று மைத்திரி அரசு சொல்கிறது. உயர் பாதுகாப்புவலயம் என்ற பெயரில் பறிக்கப்பட்ட மக்களின் நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படாமலேயே வருடக்கணக்கில் வெங்கொடுமைச் சிறைக்குள் வாடுகின்ற அப்பாவித் தமிழ் மக்கள் விடுவிக்கப்படவில்லை.

தமிழ் வலதுசாரிக் கட்சிகளின் வரலாறு முழுவதும் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்த வரலாறு தவிர வேறொன்றும் இல்லை. மான்களின் நடுவில் சிங்கம் இருந்தாலும், சிங்கத்தின் இடத்தில் மான்கள் இருந்தாலும் அழிவு மானிற்கு தான் என்று தமிழ் மான்கள் சிங்கள சிங்கங்களுடன் என்றுமே சேர்ந்து வாழ முடியாது என்று கண்றாவிக் கதைகள் சொன்னார்கள்.

மான் இல்லா விட்டால் சிங்கம் உணவின்றி அழிந்து விடும் சிங்கம் இல்லாது விட்டால் இயற்கையான சமநிலை குழம்பி மான்களின் தொகை அதிகரித்து காடு அழிந்து விடும். காடு இல்லாவிட்டால் மழை இல்லை, மனிதன் இல்லை என்ற இயற்கையின் விதியை பொய்யாக மானும், சிங்கமும் சேர்ந்து வாழ முடியாது என்று சொன்னது போலவே தமிழர்கள், சிங்களவர்கள் என்னும் மனிதர்கள் இலங்கையில் சேர்ந்து வாழ முடியாது என்று பொய்யுரைக்கிறார்கள். சிங்களவர்களின் தோலில் செருப்பு தைப்போம் என்று பச்சை இனவாதம் பேசினார்கள். ஆனால் கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம், திருச்செல்வம் என்று தமிழ் தலைவர்கள் சிங்கள தலைவர்களுடன் சேர்ந்து மந்திரிகளாக பதவியேற்றபோது சிங்களப் பேரினவாதிகளிடம் பதவிப்பிச்சை பெறுகிறோம் என்று கொஞ்சமும் அவர்கள் தயங்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற பேரினவாதக் கட்சிகளின் கூட்டில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனாவை, மகிந்த ராஜபக்சவின் அரசு நடத்திய தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலையின் பங்காளியை ஆதரித்தவர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து சொல்கிறார்கள் பேரினவாதக் கட்சிகளிற்கு இடமளிக்க மாட்டார்களாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலை தொடர்பான பிரேரணையை வடமாகாண சபையில் சமர்ப்பித்து பேசுகையில் சில திருவாசகங்களை அள்ளி வழங்கியிருக்கிறார். "இரண்டாம் உலகப் போரில் இன அழிப்பைச் செய்தவர்கள் தற்போதும் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுவது எந்தக் காலகட்டத்திலும் நீதி மறுக்கப்படக்கூடாது என்ற உலக மக்களின் சிந்தனைச் சிறப்பின் எதிரொலியே என்பதை நாம் மறந்து விடலாகாது. எனவே நீதியைத்தேடும் பெரும் பயணத்தில் எம்முடைய இந்தப் பிரேரணையானது அதனுடைய வகிபாகமானது முக்கியத்துவம் வாய்ந்தது". உண்மை, ஆனால் இதை இந்த மக்கள் விரோதிகள் சொல்லக் கூடாது. நாசிகளால் இனப்படுகொலை செய்யப்பட்ட யூத மக்களின் தலைவர்கள் எவரும் கிட்லரையோ, நாசிக் கட்சியினரையோ ஆதரிப்பது என்பதை கனவிலும் கூட நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால் சரத் பொன்சேகாவை, மைத்திரி சிரிசேனாவை ஆதரித்துக் கொண்டு இவர்கள் தமிழ்மக்களின் இனப்படுகொலைக்கு நீதி கேட்கிறார்களாம்.

□மேலும் மேன்மைதகு நிஷா பிஸ்வால் அம்மையாருடன் அண்மையில் நான் பேசிய போது அமெரிக்காவுக்கு சகாயமான அரசாங்கம் என்ற முறையில் இலங்கை அரசாங்கத்திற்கு இல்லை, இலங்கை அரசிற்கு சார்பாக நடந்து கொள்கிறது என்று அய்யா விக்கி இப்போது தான் புரிந்து கொண்டாராம். ஒரு நீதிபதியாக இருந்த கல்விமான் விக்கியிற்கு அமெரிக்காவின் சுத்துமாத்துகள் தெரியாமல் இருக்கின்றதென்றால் இரண்டு முடிவுகள் தான் இருக்க முடியும். ஒன்றில் தமிழ்மக்களை பாலர் வகுப்பில் படிக்கும் பச்சிளம் பாலகர்கள் என்று அய்யா முடிவு கட்டியிருக்க வேண்டும். அல்லது அய்யாவை தமிழ்மக்கள் பாலர் வகுப்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும். அமைதிப்படை என்ற பெயரில் வந்து மிகக் குறுகிய காலத்தில் ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை இந்திய அரசு கொன்றது. சப்பாத்து அணிந்த கால்கள் எமது பெண்களை தரையிலே போட்டு மிதித்தன. வருடங்கள் எத்தனையோ சென்ற பின்னும் தமது தாய், தந்தையரை கொன்ற அந்த துப்பாக்கியின் வேட்டுச் சத்தம் நமது குழந்தைகளிற்கு இன்னும் மறக்கவில்லை. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தியாவிற்கு அடிக்கடி காவடி எடுக்கிறது. இந்திய அரசு சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டி தாளங்கள் போட்டு □மீளா அடிமை உமக்கே ஆனோம்□ என்று பஜனை பாடுகிறார்கள். இயற்கையை, தமது வாழ்வாதாரங்களை அழிக்க வேண்டாம் என்று போராடும் மலைவாழ் மக்களை கொன்று குவிக்கும் இந்திய அரசு இலங்கைத் தமிழ்மக்களை பாதுகாக்கும் என்று இந்த கயவர்கள் கதை சொல்கிறார்கள். தமிழ்க் கூட்டமைப்பு தமிழ் மக்களிற்கான கட்சி அல்ல. அவர்கள் தமிழ்மக்கள் சொல்வதை கேட்பதற்காக அரசியல் நடத்தவில்லை. அவர்கள் தமிழ்மக்களின் பிரச்சனைகளிற்கு தீர்வு காண அரசியல் செய்யவில்லை. இந்தியாவும், மேற்குநாடுகளுமே அவர்களின் எஜமானர்கள். ஒவ்வொரு தேர்தலிற்கு முன்னும் அவர்கள் இந்தியாவிற்கு, மேற்குநாடுகளிற்கு போய் எஜமானர்களின் கட்டளைகளை கேட்டு வருவார்கள். தமிழ்மக்களின் முகங்களை விட கொழும்பில் உள்ள தூதர்களின் முகங்கள் கூட்டமைப்பினருக்கு மிகவும் பழக்கமானவை. அவர்களின் எஜமானர்கள் சொன்னதால் சரத் பொன்சேகாவை ஆதரித்தார்கள். மைத்திரி சிரிசேனாவை ஆதரிக்கிறார்கள். தமிழ் மக்களை கொன்ற இரத்தத்தில் நனைந்த கைகளை கட்டிப்பிடிப்பதில் அவர்களிற்கு எந்தவிதமான குற்ற உணர்ச்சியும் இல்லை.

தங்களிற்கு பதவி சுகம் கிடைத்தால் போதும் என்று தமிழ்மக்களின் மீது ஏறி மிதிக்கும் இவர்களின் துரோகங்கள் ஒருநாள் நிச்சயம் மக்கள் மன்றத்தில் அம்பலமாகியே தீரும். சிதைந்து போன வாழ்வை எண்ணி உறைந்து போயிருக்கும் மக்கள் திடீரென மேகம் கறுத்து பெய்யும் மழை போல ஒரு நாள் நெஞ்சக்கூட்டின் கனல் மூண்டு எரிய எழுவார்கள். பொய்களும், துரோகங்களும் அப்பெருநெருப்பில் கருகிச் சாம்பலாகும்.

(10ம் பக்க தொடர்ச்சி

மகாபாரதத்திலே போரில் கொலை செய்யும் மனிதர்கள் "ஷத்திரியர்கள்" என்னும் வர்ணத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

ஆயுதப் போராட்டக்குழுக்கள் பலம் பெற்று வளர்ந்த போதும் அவர்கள் "எங்கட பெடியங்கள்" என அழைக்கப்பட்டாலும் தமிழ்ச் சமுகத்தின் உயர் வர்க்கத்திற்கு அவர்கள் அடிப்படையில் தொடர்ந்தும் ஒரு அந்நியமான சாதிக்குழுவாகவே இருந்தனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போராளிகளுக்குப் பொருள் உதவியும் தார்மீக ஆதரவும் அளித்து வந்த உயர்குழாத்தினர் சிலவேளைகளில் மகாபாரதத்தை மேற்கோள் காட்டி "விடுதலை பெற்றுக்கொடுப்பது ஆயுதப்போராளிகளின் விவகாரமாயிருக்கலாமாயினும் ஆளுகின்ற விவகாரம் மூளையும் கல்வியும் உடையவர்களின் வகையிலேயே இருக்கவேண்டும்" என வெட்கமில்லாமற் கூறுவதை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருந்தது. மூளையும் கல்வியும் உடையோர் என்பது வெளிநாட்டிலுள்ள உயர்குழாத்தினரின் பிள்ளைகளையே குறித்தது. ஆயுதப் போராளிகள் இதை அறிந்திருந்தனர். அவர்களுள் அநேகர் பாடசாலைகளில் படித்து வெற்றிகரமாக முன்னேறி பெற்றிருக்க வேண்டிய வாழ்வை தியாகம் செய்தவர்கள். அவர்களால் இதை எவ்விதத்திலும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. வன்முறை பற்றிய யாழ்ப்பாணத்தவரின் இரட்டை நிலைப்பாடு ஆயுதப்போராளிகள் பற்றிய இரட்டை நிலைப்பாடாக விரிவடைந்தது. இதையடுத்து அவர்கள் தம்மைப் பயன்படுத்த முயற்சிக்கின்றார்கள் என ஆயுதப்போராளிகள் உணர்ந்தார்கள்.

அதாவது சாதி நீரோட்டத்துடன்தான் போராட்ட வியூகங்களும்–காய் நகர்த்தல்களும்–பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டு போரும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதென்பதை ரஜனி போன்ற மனிதர்களால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும். ஆனால் "தன் தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்" என்று சொல்லி சொல்லி சாதியை தக்க வைத்துக் கொண்டிருக்கும் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

வெளிநாட்டான்–வெள்ளைக்காரன் இலங்கையை ஆக்கிரமித்து நாட்டைக் கட்டி ஆண்ட போதும் சாதியைக் கையாண்டான். அவன் கொடுத்த சுதந்திரத்தையும்–சுதந்திர இலங்கையின் அரசியல் கட்டமைப்பையும்–தமிழர்கள் தத்தம் சாதி அளவுகோல்களுடன் வைத்தே ஏற்றுக்கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து மக்களைக் கட்டி ஆள்வதற்கேற்ற அரசியல் செயற்பாடுகளுக்கும் அன்று முதல் இன்று வரை தமிழர்கள் சாதி என்னும் அலகு முறையையே பாவித்துக் கொண்டு வருகிறார்கள்.

யுத்தத்திற்கு முன்பு இருந்த சாதி யுத்தத்தின் போதும் நின்று பிடித்து யுத்தத்தின் பின்பு இன்றும் அட்டகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள் தங்களை மனிதர்களாக––மனிதாபிமானம் உள்ளவர்களாக––மனிதநேயம் பூண்டவர்களாக மாற்றிக் கொள்ளாதவரை சாதி எமது மத்தியில் கொலுவீற்றிருக்கும்.

நீதி–நியாயம்–தர்மம் என்ற விடயம் உலகத்தில் எல்லோருக்கும் ஒரே அளவுகோல் கொண்டது என்பதை தமிழர்கள் உணர்ந்து செயற்படும் வரை சாதி எங்களைப் பிரித்து வைத்து ஆட்சி செய்துகொண்டே இருக்கும்.

தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் சாதியும்–சாதி மேலாதிக்க வாதமும்––சாதி ஒடுக்குறையும்–சாதிப் பாகுபாடும்––சாதிக் கண்ணோட்டமும் உள்ளவரை இலங்கையில் இனமேலாதிக்க அரசியலும் இன அடக்குமுறையும் இன அழிப்பும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

(10ம் பக்க தொடர்ச்சி

### மதக்குற்றவாளி மோடி, இனவாதிகளின் யுத்தக்குற்றங்களுக்கு தீஉவைத் தருவாரா?

தமிழ் –சிங்கள இன–மதவாதிகள் அனைவரும் மோடியின் வருகையைக் கொண்டாடியபடி, அவர் இலங்கை மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பார் என்ற நம்பிக்கைகளை வெளிப்படுத்தினர். இனத்தின் பெயரால் மக்களுக்கு தலைமைதாங்கும் தலைவர்கள், மோடியுடன் கூடிக் குலாவியதை அறிவுஜீவிகளும் ஊடகங்களும் மக்களுக்கு வேடிக்கையாக மாற்றிக் காட்டினர்.



குஜராத்தில் மதரீதியான பாரிய படுகொலைகளுக்கும் – பாலியல் வன்முறைக்கும் தலைமை தாங்கிய இந்துத்துவ மோடி, இலங்கையில் இதேபோன்ற குற்றங்களுக்கு, தண்டனையையும் தீர்வையும் தருவார் என்று நம்பும் அளவுக்கு, பொதுக்கருத்துகளை உருவாக்கியவர்கள் மக்களின் பொது எதிரிகளாவர். அறிவியல் ரீதியான அடிமுட்டாள்தனத்தையும், அடிமைத்தனத்தையும் பொது வாழ்க்கையாக்க முனையும், அறிவுஜீகளும் – ஊடகவியலாளர்களும் மோடிக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.

2000 மேற்பட்ட குஜராத் முஸ்லிம்களை கொன்றும், அப்பாவி முஸ்லிம்களை பிடித்து "மோதலில் கொல்லப்பட்ட" பயங்கரவாதிகளாக சித்தரித்து, இந்துத்துவ வாக்குகள் மூலம் பிரதமரானவர் தான் மோடி. மதப் பயங்கரவாதம் மூலம் மோடி தலைமையிலான குஜராத் அரசு செய்த குற்றங்களுக்கு பொது நீதி விசாரணைகள் மறுக்கப்பட்ட நிலையில், தனிநபர்கள் நீதி மன்றங்கள் மூலம் போராடி பெற்ற தீர்ப்புகளைக் கூட, மோடி பிரதமர் ஆன பின் தண்டனையில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மக்களை ஒடுக்கும் பதவிகளும், பட்டங்களும் வழங்கப்படுகின்றது. மோடி பாசிச பயங்கரவாதத்துக்கு எதிராக நீதிமன்றங்களில் சாட்சி அளித்தவர்கள் பலர் இனம் தெரியதவர்களால் கொல்லப்படுகின்றனர். மறுபக்கத்தில் பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைப்பதும், மோடியின் தலைமையில் இன்று நடந்து வருகின்றது. இது தான் இன்றைய இந்திய சூழல்.

இந்த இந்துப் பாசிட்டுகளின் ஆட்சி, பேரினவாத பாசிட்டுகளை தண்டிக்க உலகளவில் குரல் கொடுப்பார்கள் என்று கூறுவது ஊர் உலகத்தை ஏமாற்றுவதாகும். அதை மக்களுக்கு கூறாது மூடிமறைப்பது, ஊடகப் பிழைப்புத்தனமாகும்.

சொந்த மக்கள் பற்றி அக்கறையின்றி, இந்திய மேற்கு தலைவர்களின் கருணை மூலம் மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்ற கூறுகின்றவர்களாக இருக்கின்றனர். அரசியல் மற்றும் ஊடக பிழைப்புவாதிகளாக இருக்கின்ற இவர்கள், மக்களின் வாழ்க்கையை உறிஞ்சும் அட்டைகளாக இருக்கின்றனர். இந்திய மக்களின் அவலங்களையும், அதற்கு எதிரான அவர்களின் போராட்டத்தையும், எம் மக்களுக்கு மறைக்கின்றவர்களாகவே இருந்தபடி மோடியின் கைக்கூலிகளாக செயற்படுகின்றனர்.

மோடி பின்னால் மக்களைச் செல்லுமாறு கோருகின்ற கைக்கூலித்தனமே, அரசியல் இராஜ தந்திரமாக முன்வைக்கின்றனர். மோடி வருகைக்கு எதிராக, மக்கள் விழிப்பூட்டப்படவில்லை, மாறாக அடிமைத்தனத்தை முன்வைத்தனர்.

குஜாரத்தில் முஸ்லிம் மக்களுக்காக இலங்கையில் குரல் கொடுத்து போராடும் அரசியல் மட்டும் தான், மோடி பற்றிய சரியான அரசியலாக இருக்க முடியும். இடதுசாரிகளாகிய நாம் இந்த அரசியல் பாதையில் தான், மோடியையும் இந்தியாவையும் எதிர்கொள்கின்றோம். இந்த அரசியல் விழிப்புணர்வை நோக்கி அணிதிரள்வதன் மூலம், எமது சக்தியை அணிதிரட்டிக் கொண்டு போராடுவதே, எமது எதிர்கால அரசியல் தேர்வாக எம்முன்னுள்ளது.

## தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே ?
## அரச படைகளால் கடத்தப்பட்ட
## லலித்–குகனை உடனே விடுதலை செய் !

மனிதன் நன்றாக வாழ்வதற்காகவே உலக நாகரீகங்கள் நாள்தோறும் மாறி வருகின்றன. வாழ்க்கையை மேம்படுத்த மனிதர்கள் பலவகையான இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள். சிலர் போராடி வாழ்கிறார்கள். பலரோ சாவை எதிர் கொள்கிறார்கள். மனித குலத்தில் ஒரு சிறு கூட்டமே போராடத் தயாராக இருக்கின்றது. மனிதர்களுக்கு உதவவும் தயாராக இருக்கின்றது. அவ்வாறு போராடியவர்களே தோழர்கள் லலித்தும் குகனும் . தோழர்கள் . லலித்தும் குகனும் காணாமல் போனவர்களை தேடிச் சென்றதற்காக–அரசியற் கைதிகளின் விடுதலைக்காகப் போராடியதற்காக 09.11.2011 அன்று யாழ்பாணத்தில் கடத்தப்பட்டார்கள்.

லலித், மனிதர்களையும் மனிதத்தையும் காக்க வடபகுதிக்கு இன்று நாம் பயணிக்கும் ஏ–9 பாதையால் பயணிக்கவில்லை. கப்பல் மூலமாகவே லலித் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். மனிதர்களை மீட்க கஷ்டப்பட்டவர்களுக்கு உதவிய லலித், கடத்தப்பட்டதாகவும் காணாமல் போனதாகவும் கூறப்பட்ட பலரை கண்டு பிடித்தார். வட பகுதி மக்களின் உண்மை வாழ்வு பற்றி வெளி உலகத்திற்கு வெளிக்காட்ட லலித் தன்னை அர்ப்பணித்தார். லலித்தின் பயணங்கள் தேடல்கள் அனைத்தும மனிதம் சார்ந்ததாகவே இருந்தது. லலித் என்பவர் மனிதத்தின் ஒரு கட்டாயத் தேவை. 30 வருட கால யுத்தத்தின் பின் வடபகுதிக்கு பயணித்த லலித் மக்களின் உண்மையான தேவையை அறிந்து கொண்டார். மனிதர்களைத் தேடும் பணியில் அவர் இடைவிடாது பாடுபட்டார். இனி வரமாட்டார்கள் என்று நம்பியிருந்த பலரை லலித் தேடிக் கண்டு பிடித்தார். அரசாங்கம் சொல்வது அனைத்தும் அப்பட்டமான பொய், பெரும் தொகையான மக்கள் இன்னமும் முகாம்களில் இருக்கின்றார்கள், அவர்களுக்கு போதிய உணவு இல்லை, வீடு மற்றும் தொழில், பிள்ளைகளின் கல்வி வசதி கூட அங்கு சரியாக இல்லை. என்பது போன்ற மக்களின் துயர் பற்றிய தகவல்களை லலித் வெளி உலகத்திற்கு எடுத்துரைத்தார். இத்தகவல்களை வெளிக்கொணர – கடத்தப்பட்டோரைப் பற்றிய தகவலைத் திரட்ட லலித்துக்கு உறு துணையாக நின்றவரே தோழர். குகன். காலங்களுக்குள் புதைந்து லலித்தும் குகனும் காணாமல் போக விரும்பவில்லை. சதா நேரமும் மற்றவர்களின் விடுதலைக்காகவே அவர்கள் பாடுபட்டார்கள் . மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராகச் செயற்பட்ட லலித் கண்ட ஒரே ஒரு கனவு, மனிதர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். காணாமல் போவது கடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் .

இன்று, மக்களுக்காகப் போராடிய இவ்விரு போராளிகளையும் கடத்திய மஹிந்த ராஜபக்க்ஷவின் அரசு பதவியிழந்து, மைத்திரி –ரணில் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. 100 நாட்களில் ஜனநாயகத்தை மறுபடியும் நிலைநிறுத்தி, நல்லாட்சியை மக்களுக்குப் கொடுப்போம் என்ற கோசத்துடனேயே மைத்திரியும் –ரணிலும் பதவிக்கு வந்தனர். ஆனால் நடப்பது என்ன ? எந்தவகையில் மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன? எந்தவகையில் மக்களின் வாழ்க்கை மேம்பட்டுள்ளது ? பாரிய போர் அழிவுகளைச் சந்தித்த வடக்குக் –கிழக்கு மக்களுக்கு எந்த வித நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது? ஆயிரக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் எத்தனை பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்? அல்லது தோழர்கள். லலித் – குகன் போல கடத்தப்பட்டவர்கள் பற்றி மைத்திரி –ரணில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?!

ஆனால், மைத்திரி –ரணில் அரசு தமது நண்பர்களுக்கும் தமது அதிகார வர்க்கத்துக்கும் தேவையான அத்தனை ஜனநாயக உரிமைகளையும் வழங்கி வருகிறது. உரிமைகள் பறிக்கப் பட்ட நீதிபதிக்கு மறுபடியும் உரிமைகள் வழங்கியது. அதேபோன்று, மஹிந்தவால் பட்டமும் பதவியும் பறிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்த யுத்தக் கனவான் பொன்சேகாவுக்கு, பொது மன்னிப்பு வழங்கப்பட்டு முன்னாள் ஜெனரல் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல வெளிநாட்டவர் ஒருவருக்கு ஒரே நாளில் இலங்கைப் பிரசாஉரிமை கொடுத்து, மத்திய வங்கியின் ஆளுனராக அவரை நியமித்துள்ளது. ஆனால், அதேவேளை மைத்திரி –ரணில் அரசு தனது நீதித்துறை நிர்வாகத்துறை மற்றும் போலீஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறையில்வாடும் அரசியர் கைதிகளுக்கு நியாயம் வழங்கவோ, கடத்தப்பட்டு காணாமற் போகச் செய்யப்பட்ட லலித் –குகன் போன்ற இலங்கை மண்ணின் மைந்தர்களை விடுவிக்கவோ தயாராகவில்லை.

இன்றுள்ள மைத்திரி – ரணில் அரசு பதவிக்கு வர முன்பு கூறிய கொள்கையின்படி உண்மையிலேயே நடக்க விரும்பினால், ஜனநாயகத்தை– நல்லாட்சியை மக்களுக்கு மறுபடியும் வழங்க விரும்பினால், அதை நடைமுறையில் செய்து காட்டுமாறு கோருகிறோம்!

அனைத்து கடத்தப்பட்டோர்– காணாமற் போகச் செய்யப்பட்டோர் பற்றிய விபரங்களை வெளியிடுமாறு கோருகிறோம் !

கடத்தப்பட்ட தோழர்கள் . லலித் மற்றும் குகனை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோருகிறோம்!

(10ம் பக்க தொடர்ச்சி

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவ உரிமை பெற்றுக்கொடுப்பதுடன் மட்டும் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தன்னை மட்டுப்படுத்தவில்லை. சர்வதேச விடுதலை இயக்கங்களுக்கும் தனது ஆதரவை வெளிப்படுத்தி வந்தது. வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து 1967இல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இலங்கைக்கான ஸ்தானிகரின் யாழ் விஜயத்தை எதிர்த்தது, யாழ் நூலகத்தில் அமெரிக்க நூலகப் பிரிவொன்றை திறக்கவந்த வேளை அவருக்கெதிராக கூழ்முட்டை வீச்சுப் போராட்டத்தை நடத்தியது. அதேபோல் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும், இஸ்ரவேலுக்கு எதிராகவும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், சுவரொட்டி இயக்கங்கள், துண்டுப்பிரசுரங்கள் பல வெளியிட்டு முற்போக்காளர்களின் ஆதரவை தெரிவித்தது. 1969இல் மே தினம் கொண்டாடுவதை யூ.என்.பி அரசாங்கம் தடைசெய்தது. அந்தத்தடையை ஏற்றுக்கொள்ளாத புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட கட்சி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தடையை மீறி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்தியது. பொலிஸாரும் ஊர்வலக்காரர்களும் மோதலில் ஈடுபட்டனர். பலர் பொலிஸாரின் தாக்குதலில் படுகாயமுற்றனர். ஊர்வலத்துக்கு தலைமை தாங்கிய தோழர்கள் பொலிஸ் காவலுடன் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அக்காலத்தில் தொடர்ச்சியாக பல கூட்டங்களை நடாத்தி பாராளுமன்றத்திற்கு உண்மையான அதிகாரம் இல்லை, உண்மையான அதிகாரம் ஆயுதப்படை, பொலிஸ்படை, விமானப்படை, கடற்படை, நீதிமன்றம், சிறைச்சாலைகள், உயர் அரசஅதிகாரிகள் இவர்களிடமே உண்மையான அதிகாரம் இருக்கிறது. இதை அடித்து நொருக்கி பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய ஜனநாயக அரசு ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற மார்க்ஸிஸ லெனினிஸ வகுப்புகளால் தெளிவுபடுத்தப்பட்டது. கே.கே.எஸ் சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் கெமிக்கல் தொழிற்சாலை, ஒட்டிசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை, மில்க்வைட் சோப் தொழிற்சாலை, சுருட்டு தொழிற்சாலைகள், ஆர்.வி.ஜி பீடிக் கம்பனி, யாழ் மாநகரசபை தொழிலாளர்கள், சினிமா தியேட்டர் தொழிலாளர்கள் சார்பில் தொழிலாளரை நிரந்தரமாக்குவது, சம்பள உயர்வுக் கோரிக்கைகள், லீவு, வேலைநேரம் சம்மந்தமாகவும் தொழிற்சங்க போராட்டங்களையும், தொழில் வழக்குகளையும் புரட்சிகர கமயூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கமே தலைமைத்துவம் வழங்கி தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுத்துக் கொடுத்தது. அதேவேளை தமிழரசுக் கட்சி தொழிற்சாலை நிர்வாகத்துக்காகவும் முதலாளிகளுக்கு சார்பாகவுமே செயற்பட்டது. அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரம் தொழில் நீதிமன்றங்களில் தொழிற்சாலை நிர்வாகத்துக்கு சார்பாகவும், முதலாளிகளுக்கு ஆதரவாகவுமே வாதிட்டார். தொழிலாள வர்க்கத்தின் சார்பாக புரட்சிகர கம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செயலாளர் தோழர் நா.சண்முகதாசன் ஆஜராகி பல வெற்றிகளை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுத்தார். தென்னிலங்கையில் 1966க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் குறிப்பிடக்கூடிய பாட்டாளிவர்க்க போராட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை. 1966 இல் டட்லி செல்வா ஒபப்பந்தத்தில் மாவட்ட சபை வழங்கப்பட்டிருந்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், கெனமன் கட்சியும், சமசமாஜக் கட்சியும் மசால வடே அப்பிட்ட ஏப்பா என்ற ஊர்வலத்தை நடாத்தி நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்கள். இந்தப் போராட்டத்தால் டட்லி செல்வா ஒப்பந்தத்தை அரசு கிழித்தெறிந்தது. அந்த ஊர்வலத்தில் ஜே.வி.பி தலைவர் ரோகண விஜயவீரா கலந்துகொண்டார். இது தொடர்பில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி அவரிடம் வினா எழுப்பியபோது அதுபற்றி எதுவும் சொல்லாமல் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் அதன் வாலிப முன்னணியிலிருந்தும் வெளியேறி ஜனதா விமுக்தி பெரமுன என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். 1971 இல் ஜே.வி.பி ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்து அதில் தோல்வி கண்டார். அக்கிளர்ச்சி அடக்கப் பட்டபோது, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களையும் கைதுசெய்து அக்கட்சியும் அடக்கி சிதைக்கப்பட்டது. சிறிது காலத்தின்பின் அக்கட்சி வளர்ச்சி அடைந்தது. அரசின் தமிழ்மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவும், தமிழ் கட்சிகளின் சிங்கள மக்களுக்கு எதிரான கொள்கைகளை எதிர்த்தும் பொதுக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும், சுவரொட்டிகளையும், துண்டுப்பிரசுரங்களையும், பத்திரிகை அறிக்கைகளையும் தொடர்ச்சியாக வெளியிட்டு தேசியக் கடமையை கட்சி செய்துவந்தது.

தொடரும்

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# போராட்டம்

**முதலாளித்துவ ஜனநாயகத்தை தோற்கடித்து உழைக்கும் மக்களின் ஜனநாயகத்தை நிறுவுவோம்**

41–32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய
தொலைபேசி / தொலைநகல் : 094 113185692
mpssrilanka@gmail.com - http// www.peoplesstruggle.com

## 100 நாட்களில் குவிக்கப்படும் அதிகாரங்கள் !!

இந்த தலையங்கம் எழுதும் வேளையில், மைத்ரி–ரணில் ஆட்சி அமைத்து சரியாக 45 நாட்கள். இந்த 45 நாட்கள் போனால், "நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும்" இலங்கையில் ஏற்படுத்த சரியாக இன்னும் 55 நாட்கள் இருகின்றன. கடந்த 45 நாட்களில் என்ன நடந்ததென சிறிது ஆராய்வோமேனில் மீதமுள்ள 55 நாட்களில் என்ன நடக்குமென இலகுவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் வென்று மைத்ரியும் – ரணிலும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அடுத்த சில நாட்களிலேயே தமக்கு உகந்த– தமது அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த சிலருக்கு மந்திரி பதவிகளையும், உறவுகள் மற்றும் நெருங்கிய நட்புகளுக்கு அரசக் கட்டுமானத்தில் அதிகாரங்களும் வழங்கினர்.

மைத்ரியின் வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர முதல் செய்த வேலை இந்தியா, அமெரிக்கா உட்பட்ட ஏகாதிபத்திய நாடுகளின் தலைநகரங்களுக்கு பிரயாணம் செய்து தாம் ஆட்சிக்கு வர உதவியதற்கு நன்றி கூறியதுடன் ஐக்கிய நாடுகள் சபையில் வெளியிடவிருந்த போர்க்குற்ற அறிக்கையை வெளிவராமல் தள்ளிபோட்டார். இந்த வகையில் தமது உறவுகள் மற்றும் போராளிகளின் இழப்புக்கும், அழிவுகளுக்கும் நியாயம் கிடைக்கும் என எதிர்பார்த்து காத்திருந்த தமிழ் மக்களுக்கு "முதலாவது" ஏமாற்றத்தைக் கொடுத்தது மைத்ரி –ரணில் அரசு. இதே தமிழ் மக்களே, முஸ்லீம் மக்களுடன் இணைந்து மைத்ரிக்கு இலட்சக்கணக்கில் வாக்களித்து வெல்ல வைத்தனர். அவர்களின் மற்றுமொரு எதிர்பார்ப்பு தமிழ் தேசியப் பிரச்சனைக்குத் மைத்ரி –ரணில் அரசு நியாயமான தீர்வை முன்வைக்கும் என்பதாகும். ஆனால், அப்படி ஒன்றும் நடக்கப் போவதில்லை என்பதற்கு ஆருடம் கூறுவது போல, மாசி நடுப்பகுதியில் இந்தியாவுக்கு மைத்ரி போய் வந்த பின், எவரும் கேட்காமலே அரசின் பேச்சாளர் ராஜித சேனாரட்ன கூறிய கருத்து "எந்தத் தீர்வையும் முன்வைக்கச் சொல்லி இந்தியா எம்மை கோரவில்லை. அதைப் பற்றிப் நாம் பேசவுமில்லை" என்பதாகும்.

அடுத்ததாக, இலங்கையின் பொருளாதார நிலைமையை நோக்குவோமெனில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசியைக் குறைக்கும் அறிவிப்பு மைத்ரி – ரணில் அரசால் பதவிக்கு வந்து 2 வது வாரத்திலேயே வெளிடப்பட்டது. இவ் அறிவிப்பானது பலராலும் பாராட்டப்பட்டது. ஆனால் விலை குறைக்கப்பட்டு 25 நாட்களின் பின் நடந்ததென்ன? அறிவிக்கப்படாமலேயே பொருட்களின் விலை மறுபடியும் சிறுகச் சிறுக உயர்ந்து வருகிறது. காரணம், மைத்ரி –ரணில் அரசு பதவிக்கு வந்த சில வாரங்களிலேயே மேற்குநாடுகளிடம் கையேந்த ஆரம்பித்து விட்டது. அதனால் கிடைக்க ஆரம்பித்துள்ள 4 பில்லியன் டொலர்கள், இலங்கையின் நாணயத்தின் பெறுமதியிலும், இறக்குமதியிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதுதான். இந்த வகையில் பொருட்களுக்கான விலைகுறைப்பு என்பது வெறும் பிரசாரத்துக்கான விடையமே ஒழிய வேறொன்றுமில்லை. சுய பொருளாதாரம் இல்லாத நாடு – பெரும்பான்மையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடு – எவ்வாறு பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியும்? நவதாராளப் பொருளாதரம் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நாட்டுக்கு ஏது பொருளாதார – அரசியல் சுயநிர்ணயம்?!

இது ஒருபுறமிருக்க, அதிகாரத்தைப் பரவலாக்கி ஜனநாயகத்தை மீட்போம் எனக் கூக்குரலிடும் – 100 நாள் வேலைத்திட்டத்தின் 40 வது நாள் அறிவிப்பு மேற்படி "100 நாட்களில் ஜனநாயகம்" என்ற அரசியல் வியாபாரத்துக்கு நேரடி முரணானதாகும். 18.02.2015 அன்று, அரச நிர்வாகத்தை சீராக செயற்படுத்தவும், தேசிய அரசியற் கொள்கைகளை உருவாக்கவும், அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், மந்திரி சபையின் உபகுழுக்கள் 5 உருவாக்கப் போவதாக அறிவித்தது. இந்த 5 உப குழுக்களாவன 1.வெளியுறவு, 2. நிதி மற்றும் பொருளாதரம், 3. எரிபொருள் –மற்றும் (மின் மற்றும் அணு ) சக்தி, 4.சுகாதாரம், பெருந்தெருக்கள் மற்றும் கல்வி 5. நீதி மற்றும் தொழில்துறை. இக்குழுக்கள் மைத்ரி மற்றும் ரணிலின் மேற்பார்வையிலும் தலைமையிலும் இயங்கும். அத்துடன் "உப குழுக்கள்" என அறிவிக்கப்பட்டாலும் பல முடிவுகளை எடுக்கும் அதிகாரம் இதற்கு உள்ளது. இந்த வகையில், கடந்த ஆட்சியைப் போல– ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் எவ்வாறு மஹிந்த தலைமையிலான சிலரிடம் குவிக்கப்பட்டதே, அதேபோன்ற நிலையே இன்றும் உருவாகியுள்ளது.

மேலும், வெளிநாட்டவர்களுக்கு ஒரே நாளில் இலங்கைப் பிரசாவுரிமை கொடுத்து –அவர்களுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் பதவிகள் போன்ற உயர் பதவிகளை வழங்கி "அழகு பார்க்கின்றது" இலங்கை அரசு. அதேவேளை, தனது நீதித்துறை, நிர்வாகத்துறை, மற்றும் போலீஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இலங்கை மண்ணின் புதல்வரான குமார் குணரட்ணத்தை நாடுகடத்த முயல்கின்றது அதே அரசு! இது தான் மைத்திரிபாலவின் நல்லாட்சி. சொந்த நாட்டவர்களையே வெளிநாட்டுக்கு நாடுகடத்தும் நல்லாட்சி! இதற்குப் பெயர் தான் அவர்களின் மொழியில் ஜனநாயகம், நீதி! மகிந்த அரசு போன்றே இந்த அரசும் நீதித்துறையினை சுயாதீனமாக இல்லாமல் தனது கட்டுப்பாட்டிற்குள் எடுத்துள்ளது. ஜனநாயகம் என்பது அரசின் நண்பர்களிற்கு மாத்திரமே என ஆளும் வர்க்கம் தன்னை அம்மணமாக்கி காட்டி உள்ளது.

நிறைவாக: இன்றுள்ள அதிகார கட்டமைப்புக்குள், இலங்கையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள், மற்றும் பெரும்பான்மையாக வாழும் உழைக்கும் மக்களுக்கு எந்தவித "நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும்" மைத்ரியாலும்– ரணிலாலும் ஏற்பட்டுத்தித் தரமுடியாது என்பதே எம் கருத்தாகும். இந்த அதிகார கட்டமைப்பை உடைக்கும் போராட்டம் மட்டுமே மக்களுக்கான விடிவைத் தரும்!



கொழும்பு கோட்டையில ஜனநாயக உரிமைகள் கோரி

ஜனநாயக உரிமையைக் கோரி இத்தாலியில் இலங்கைத் துதரகம் முன்பாக





ஜனநாயக உரிமையைக் கோரி பிரிட்டன் இலங்கைத் துதரகம் முன்பாக



ஜனநாயக உரிமையைக் கோரி பிரான்சில் இலங்கைத் துதரகம் முன்பாக


ஜனநாயக உரிமையைக் கோரி வடக்கில்


ஜனநாயக உரிமையைக் கோரி தென் பகுதியில்



**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

41- 32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய வசிக்கும் ஜீட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்டரா எட்வடைவிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

படிப்பகம்